## அதிகாரம் 11

# விசுவாசத்தின் வெற்றி

எபிரெயர் 11-ல் விசுவாசத்தின் மூலம் பதினெட்டு கூற்றுக்கள் திறக்கப்பட்டுள்ளன. தேவனில் நம்பிக்கை வைத்திருக்கையில் தடைகள், சோதனைகள், பாடுகள், துயரமான சூழ்நிலையில் இருந்த மக்களைக் குறித்து இது சொல்கிறது. “விசுவாசத்தின் மூலம் அங்கீகரிப்பைப் பெறுவதே” அவர்களுடைய குறிக்கோள் (வசனம் 39). தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மூலம் தங்கள் முழு வாழ்க்கையையும் ஒழுங்குபடுத்திய பழைய ஏற்பாட்டின் ஆண்கள் மற்றும் பெண்களின் நிகழ்வுகளைத் தொடர்புப்படுத்துகிறது. தேவன் சொன்ன சில ஆசீர்வாதங்கள் அவர்களுடைய மிகவும் எதிர்கால தூரத்தில் இருந்தாலும்கூட, அவர்களுக்கு அவர் சொல்லியவற்றை விசுவாசித்தார்கள். அவருடைய வாக்குத்தத்தத்தில் பல அருகில் உள்ளவைகளாக கனவு கண்டனர், மற்றும் அவர்களுடைய வாழ் நாளில் காணக்கூடியதாக இல்லாதிருந்தும், அவைகள் உண்மையானவை என்று அவர்கள் விசுவாசித்தார்கள். அவர்களுடைய விசுவாசம் “பார்வைகள்” எண்ணப்பட்டது.

## விசுவாசத்தின் குறிப்பு (11:1)

**[1]விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.**

**வசனம் 1.** இந்த அதிகாரத்தில் **விசுவாசத்தின்** சாரம் என்பது தேவனுடைய வார்த்தையில் அவரைக் காண்பது ஆகும். இந்த வசனம் விசுவாசத்தின் விளக்கத்தைக் கொடுப்பதைவிட குறிப்பைக் கொடுக்கிறது, விசுவாசத்தின் இரண்டு குணாதிசயங்களை இந்த வசனம் கொண்டுள்ளது என்று சொல்வதே சிறந்ததாகும்.[1] விசுவாசம் என்பது நிச்சயமும் **திடநம்பிக்கையுமாக** இருக்கிறது.

தேவனைக் குறித்து நம் சிந்தனைக்கு, “நம்பிக்கை” அல்லது “சாரம்” ஆகியவைகளை விசுவாசம் கொடுக்கிறது (KJV). இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை ὑπόστασις (*ஹ்யூபோஸ்டாசிஸ்*) இதை தவிர எபிரெயர் 1:3-ல் மட்டும் காணப்படுகிறது, அங்கே அது “இயல்பைக்” (“தனிநபர்”; KJV) குறிக்கிறது, மற்றும் 3:14-ல் இது “நிச்சயம்” என்று

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது ("நம்பிக்கை"; KJV). இந்த வார்த்தை புதிய ஏற்பாட்டில் வேறு இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளது 2 கொரிந்தியர் 9:4 மற்றும் 11:17, அங்கே NASB-ல் நம்பிக்கை என்று அர்த்தம் கொள்கிறது.

இரண்டாவதாக, அதேபோன்று விசவாசத்தின் அடுத்த தரம் "நிச்சயம்" (ἔλεγχος, *எலக்கோஸ்*) அல்லது "ஆதாரம்" (KJV). நம்முடைய நடப்பு வாக்கியங்களில் "உறுதியாக" (ஹ்யூபோஸ்டாசிஸ்) மற்றும் "நம்பகமாக" (எலக்கோஸ்): "இப்போழுது விசுவாசம் என்பது நாம் நம்புகிறவைகளின் உறுதியும் மற்றும் நாம் காணாதவைகளின் நிச்சயமாக இருக்கிறது." இந்தக் கூற்று ஒருவேளை மிதமிஞ்சியதாகக் காணப்படலாம் மற்றும் ஒரு முக்கியமான சத்தியத்தை இரண்டு வழிகளில் வலியுறுத்துகிறது.

NIV மிகவும் ஆழமாக விசுவாசத்தை முழுமையான நிச்சயத்திற்குள் கொண்டுவருகிறது. அது விசுவாசத்தின் உண்மையான இயல்பிற்கு கொஞ்சமும் இடம் இல்லாமல் இருக்கிறது. அது காணப்படாதவைகளின் நம்பிக்கையின் கூறுகளை உண்மையில் நீக்குவதாக இருக்கிறது. "சோதிக்கப்படக்கூடிய தனிச் சிறப்புகளை விவரிக்க கட்டுப்பாடு இருக்குமேயானால், எந்த விசுவாசமும் அவசியமாயிருக்காது."[2]

1:3-ல் ஹ்யூபோஸ்டாசிஸ் என்பது இயேசுவை தேவனுடைய "குணாதிசயமாகிய" அவருடைய இருத்தலை குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. "வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், விசுவாசம் என்பது தேவனுடைய வாக்குத்தத்தத்தின் இருத்தல் ஆகும்."[3] "நம்முடைய நம்பிக்கைகளின் சாராம்சமாக விசுவாசம் இருக்கிறது" என்று NEB சொல்கிறது. "நாம் நம்புகிற காரியங்களை நிஜமாக்குவதும் மற்றும் காணாதவைகளின் ஆதாரமாகவும் விசுவாசம் இருக்கிறது" என்று மெக்கார்டு மொழிபெயர்ப்பு கூறுகிறது. கூற்றின் சாராம்சத்தை வார்த்தைகள் கொண்டு மாற்றுவது உதவிகரமாக இருக்கலாம், "விசுவாசமானது தனது சாராம்சத்தின் செயல் குணாதிசயங்கள் மூலமாக, நம்புகிறவைகளின் உண்மையை வெளிப்படுத்துகிறதாக இருக்கிறது, இன்னமும் கண்டிராத காரியங்களின் சத்தியத்தை விளக்குவதாக இருக்கிறது."[4]

இவைகள் அனைத்தும் அர்த்தம் கொள்வது என்னவென்றால், விசுவாசம் என்பது மிகவும் அற்புதமானது. வேதாகமத்தின் கருத்து என்னவென்றால், "தேவன் எதிர்காலத்தில் வாக்குப்பண்ணியிருப்பவைகளை இது ஏற்கனவே ஆட்கொண்டிருக்கிறது."[5] உண்மை என்னவென்றால் விசுவாசம் என்பது பொதுவாக எதிர்காலத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது. "சொல்வதென்றால், எதிர்காலத்தில் பெரிதாக எதிர்பார்த்து நிகழ்காலத்தை மகிழ்ச்சியாக வைத்திருக்கக் கூடிய விசுவாசமாகப்

பார்க்கும்படிக்கு 'நம்புகிறவைகளின் ஆதாரமாக விசுவாசம் இருக்கிறது.'"[6] எதிர்காலத்திற்கு தேவன் வாக்குப்பண்ணியிருக் கிறவைகளில் உள்ள நம் நம்பிக்கைக்கு நிச்சயத்தையும் உறுதியையும் விசுவாசம் தருகிறது.

"விசுவாசம்" என்பதற்கு பல்வேறு வார்த்தையின் பார்வைகளை வழங்குவதில், பிலிப்பு எட்கும்பே ஹ்கீஸ் "நம்பிக்கையான நிச்சயம் என்பது மிகவும்" திருப்திகரமான மொழிபெயர்ப்பு என்று ஏற்றுக்கொண்டுள்ளார்.[7] வேறொரு விளக்கவுறையாளர் எதிர்த்து சொல்கிறார், "முதன்மையாக எதைப் பார்க்கவேண்டியதில்லை என்றால், நிச்சயம், நம்பிக்கைகளை - நாம் உணருகிற மற்றும் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறவைகளை அல்ல - மாறாக, விசுவாசம் எவ்வாறு சாராம்சத்தை அளிக்கிறது அல்லது வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதற்கு சாராம்சத்தைக் கொடுக்கிறது, மற்றும் காணப்படாதவைகள், நிஜத்திற்கான நம்பிக்கைக் குறித்த நம்முடைய விசுவாசத்திற்கு அது எவ்வாறு ஆதாரத்தை வழங்குகிறது."[8]

விசுவாசம் இல்லாமல் உண்மையான நம்பிக்கை இருக்க முடியாது, நம்பிக்கை இல்லாமல் உண்மையான விசுவாசமும் இருக்க முடியாது. **காணாத காரியங்களை** நோக்கியிருப்பது என்பது இன்னும் சிறந்ததை எதிர்பார்த்திருப்பது ஆகும். இதுவே விசுவாசத்தின கோட்பாடு தோற்றம். மெய்யாகவே, "தூத்திலிருந்து வரவேற்றதையும் மற்றும் பார்த்ததையும் [தேவனுடைய வாக்குத்தத்தங்கள்]" (வசனம் 13), முற்பிதாக்கள் "விசுவாசத்தினாலே" பார்த்தவைகளின் நிஜத்தை அறிந்திருந்தார்கள். "காணப்படாதவைகளிலிருந்து காணக்கூடியவைகள் வருகின்றன (NEB)" என்ற ஆச்சரியமானக் கூற்று விசுவாசத்தினால் மட்டுமே நம்மால் ஏற்றுக்கொள்ள முடியும்.[9] ஆயினும், தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தின் ஆதாரத்தின் மூலமாக வழங்கப்பட்டுள்ளதே நம்முடைய விசுவாசத்தின் ஆதாரமாக நாம் கொண்டுள்ளோம் (ரோமர் 10:17). மேலும் நம்பகத்தன்மையை தேவன் நிரூபித்திருக்கிறபடியால் நாம் விசுவாசத்தைக் கொண்டிருக்கிறோம். "சரீர பார்வையானது காணப்படுகிற காரியங்களின் ஆதாரத்தை அல்லது நிச்சயத்தை வழங்குகிறது, விசுவாசம் என்னும் உறுப்பு, காணமுடியாதவைகளை (வசனம் 27-ல் மோசேயைப் போன்று) காணும்படிச் செய்கிறது."[10]

விசுவாசம் நமக்கு "பார்வையைக்" கொண்டுவருகிறது. இது நிச்சயமாக இருட்டிற்குள் குதிப்பது அல்ல. "உணர்வுகளுக்கு புலப்படாதவைகளை விசுவாசமானது உண்மைக் கருத்தாகப் பார்க்கிறது ... விசுவாசம் என்பது ஆதாரத்தின் இருப்பு என்று சொல்ல முடியாது. அது உண்மையைப் புரிந்துகொள்கிறது: ஆகையினாலே காணமுடியாத பொருட்களின் நம்பிக்கையே உண்மையானதாகவும், ஆதாரங்களாகவும் ஆகின்றன."[11] இருதயத்தில் காரியங்களின்

ஆதாரங்களை நம்புவதே நம்முடைய விசுவாசம் ஆகும்.

அறிவும் விசுவாசமும் முற்றிலும் பிரிக்கப்பட்டிருக்கவில்லை என்று முக்கியத்துவப்படுத்துவதை, "நாம் விசுவாசத்தினாலே புரிந்துகொள்ளுகிறோம்" (வசனம் 3) என்ற வசனம் முக்கியத்துவப்படுத்துகிறது. ஆவிக்குரிய உண்மைகளை நாம் பார்க்க முடிவதில்லை, ஆனால் வெளிப்படுத்தப்பட்டவைகள் அவைகளின் உண்மைகளில் நம்பிக்கையைக் கொடுக்கிறது. "சம்பவிக்கும் என்று நம்பப்படுகிறவைகளின் நிச்சயமாய் இது இருக்கிறது."[12]

விசுவாசத்திற்கு பொருள்கூறுவது என்றால், குறிப்பாக எபிரெயரில் பயன்படுத்தப்பட்டுள்ளவைகளை, "நம்பிக்கை" அல்லது "நம்பிக்கையின் நிஜம்" என்று நாம் அழைக்கலாம். இலக்கியப் பூர்வமாக, πιστις (*பிஸ்டிஸ்*) உண்மையான அர்த்தம் "விசுவாசம்" அல்லது "நம்பிக்கை." எபிரெயரில், பொதுவாக, சில செயல்களில் விசுவாசத்தைக் கொண்டு செலுத்துதல் என்பது தேவனுடைய வார்த்தையில் இருக்கும் நம்பிக்கையைக் காட்டுகிறது. அதிகாரம் 11 சொல்கிறது, "விசுவாசத்தினாலே," அநேகர் செயல்பட்டனர். தேவனிடத்திலும் மற்றும் அவருடைய வாக்குத்தத்தங்களிலும் இருக்கும் நம்பிக்கையின் விளைவே கீழ்ப்படிதலின் செயல். "தேவன் இதைச் சொன்னார், நான் விசுவாசிக்கிறேன், இதைச் செயல்படுத்துவேன்," அது சாதாரணமானது, ஆனால் இந்தக் கூற்று "விசுவாசத்தின்" சாராம்சத்தைக் கொண்டுள்ளது. ஒருவர் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியும்படி தன் முழு வாழ்க்கையையும் அர்ப்பணிக்கும்போது, எபிரெயரிலுள்ள "விசுவாசத்திற்கான" உண்மை அர்த்தத்தை கிரகித்துக்கொள்ள முடியும்: "தேவன் சொல்கிறதைச் செய்வதே விசுவாசமாகும்!"[13] மூடப்பழக்கமோ அல்லது அறிந்து கொள்ளாமல் உடனே நம்புவது போன்றது இது அல்ல. எபிரெயர் 11-ல் நாம் அநேக இடங்களில் பார்ப்பது, இது வழங்கப்படும் ஆதாரங்களின் அடிப்படையிலானது.

விசுவாசம் என்பது நம்முடைய நம்பிக்கையைப் பொறுத்தவரையில் நமது "நிச்சயம்" ஆகும். நம்பிக்கையில்லாமல், நாம் உலகப் பிரச்சனைகளைப் பார்ப்போமானால் அது பரிதாபகரமானதாக இருக்கும். சீர்த்திருத்த தலைவர் ஜான் கால்வின் (1509-1564) கேட்டார், "நம்முடைய நம்பிக்கையை நாம் சார்ந்திராமல் இருப்பதாலும் மற்றும் இருளின் மத்தியின் உலகத்திலிருந்து தேவனுடைய வார்த்தையின் பிரகாசம் மற்றும் அவருடைய ஆவியன் மூலமாக நமது மனது மேலெழும்பி வரவில்லையென்றால், நமக்கு சம்பவிப்பது என்ன?"[14] இது நம்முடைய விருப்பத்தின் அடிப்படையிலல்லாமல், தேவனுடைய வாக்குத்தத்தங்களின் அடிப்படையிலான நம்பிக்கை. ஆபிரகாமிற்கு பரலோகத்தை நிஜமாக்கியது இந்த விசுவாசம் ஆகும் (வசனம் 10).

இது ஆதாரம் இல்லாத நம்பிக்கை அல்ல, மாறாக, உறுதியான

அஸ்பாரத்தின் அடிப்படையிலான நம்பிக்கை ஆகும். ஒருவர் பாறை தொட்டதினால் வந்த ஆதாரம் போன்றது இது அல்ல, மாறாக, இது நிஜமான "சாராம்சத்தைக்" கொண்டுள்ளது. பாறை இருக்கிறது என்று நிரூபிப்பது போன்று தேவன் இருக்கிறார் என்று நிரூபிக்க முடியாது, ஆனால் நம்முடைய விசுவாசதத்திற்கு பலமான காரணங்கள் உள்ளன. உதாரணமாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை விசுவாசிப்பதற்கு பலமான காரணம் நமக்கு உண்டு, அவர் சொன்னார் நாம் உயிர்த்தெழுவோம் என்று அவரே சொல்லியிருக்கிறார் (யோவான் 5:28, 29). நாம் ஏன் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும்? காரணம் கிறிஸ்துவே சொன்னார் நாம் உயிர்த்தெழுவோம், நம்முடைய உயிர்த்தெழுதலின் சாத்தியக் கூறுகளை தம்முடைய உயிர்த்தெழுதல் மூலம் செயல்படுத்திக் காட்டினார். நம்முடைய விசுவாசத்தின் மூலமாக, காணமுடியாத தேவனிடமிருந்து பெற்ற கட்டளையின் விளைவாக எல்லாவற்றையும் காணக் கூடியவைகளால் நாம் கிரகித்துக்கொள்கிறோம்.

விசுவாசம் "என்பது காணக்கூடாதவைகளின் நிச்சயம் [*எலக்கோஸ்*]." இப்படி சம்பவிக்கும் என்று எந்த ஆதாரமும் நிரூபிக்க முடியாது, ஆனால் விசுவாசிகளின் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு உருவாக்கி, தெய்வீக வெளிப்பாடு (வசனங்கள்) மூலம் விசுவாசத்தின் ஆதாரம் வழங்கப்படுகிறது. உதாரணமாக, 1 கொரிந்தியர் 15:35-41ல் பவுல் ஒரு ஒப்புமையைப் பயன்படுத்துகிறார், உயிர்த்தெழுதலின் சாத்தியக் கூறுகளை சுட்டிக்காட்டுகிறது. ஒப்புமை எந்தக் காரியத்தையும் நிரூபிக்காது, ஆனால் மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலுக்கான சரியான தோற்றத்தை அது தருகிறது. உயிர்த்தெழுதல் நிகழாத என்று விவாதம் பண்ணுவது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதை ஒப்புமை காண்பித்துவிடும். சரீரப் பிரகாரமாக உயிர்த்தெழுதல் சாத்தியமற்றது என்ற பார்வை முட்டாள்தனமானது என்பதைக் காண்பிக்கும்படிக்கு விதைக்கு நிகழ்வதையே (மரிக்கும் ஆகவே புதிய செடி முளைக்கும்) உதாரணமாக பவுல் பயன்படுத்தினார். புதியதும் மற்றும் வித்தயாசமான சரீரத்தைக் கொண்டிருந்தாலும் அது இன்னமும் "சரீரத்தைக்" கொண்டுள்ளது என்பதை விவாதித்தார். அவர் பயன்படுத்திய உதாரணங்கள் இயற்கையாக பொது இடமாக இருந்தன. மரித்த சரீரங்கள் உயிர்த்து வாழும் என்பதை ஒருவன் மறுதலிப்பானேயானால், அவன் ஒரு முட்டாளாயிருப்பான் (1 கொரிந்தியர் 15:36). ஆகையால் நம்முடைய நிச்சயம், தேவனுடைய வெளிப்பாடை அடிப்படையாகக் கொண்டுள்ளது, இதுபோன்ற ஒப்புமைகள் காரணங்களாக இருக்கின்றன என்பதைக் காண்பிக்கிறது.

"நான் விசுவாசிக்க விரும்புவதால், நான் விசுவாசிக்கிறேன் என்று அல்ல," விருப்பம் மட்டுமே நம்பிக்கையை வழங்கும் என்றால், அது

கிறிஸ்தவ விசுவாசத்தின் சாராம்சத்தை கொண்டிருக்கவில்லை. ஆயினும், ஒருவர் நேர்மையாக தேடாதவரை, அது விசுவாசம் என்று ஆகாது (வசனம் 6). ஒன்றின் அர்த்தத்தை வருவிக்கும்படிக்கு சத்தியத்தைப் புரிந்து ஏற்றுக்கொள்ளக் கூடியவராக ஒருவர் இருக்க வேண்டும் (யோவான் 7:17), தேவனுக்கு கீழ்ப்படிய ஆர்வம் இல்லாதவர்களுக்கு இதுபோன்ற புரிந்துகொள்ளுதல் வாக்குத்தத்தமாக கொடுக்கப்படவில்லை. சத்தியத்திற்கு நேராக அவர்களுடைய மனக்கண்களைக் குருடாக்க சாத்தான் அனுமதிக்கப்பட்டுள்ளான் (2 கொரி. 4:3-5). எபிரெயர் 11-ல் விசுவாசமானது நிச்சயத்தின் உணர்வாக நமக்கு வழங்கப்பட்டுள்ளது, நம்முடைய சரீர கண்களினால் காண முடியாவிட்டாலும் சில உண்மைகள் நிச்சயமாக இருக்கிறது.

எபிரெயரில் பதத்தில் "விசுவாசமும்" மற்றும் "நம்பிக்கையும்" உண்மையில் ஒன்றுக்கொன்று மாறக்கூடியவைகள்.[15] ஒரு உண்மையான விசுவாசம் என்பது எதிர்கால உடைமைக்கு தலைப்பு ஆவணமாக (நிச்சயம்) இருக்கிறது.[16] நம்முடைய நம்பிக்கையானது விசுவாசத்தின் அடிப்படையிலும் மற்றும் உருவாக்கப்பட்ட ஆதாரத்தின் மூலமாக நம்மை இரட்சிப்பிற்குக் கொண்டுவருகிறது (ரோமர் 8:24, 25). ஒருவன் வேதத்தை வாசிக்காமலும், ஆய்வு செய்யாமலும் அல்லது சுவிசேஷ செய்தியைக் கேளாமலும் இருக்கிறவன் இம்மாதிரியான விசுவாசத்திற்குள் வரமுடியாது.

## விசுவாசத்தை செயல்படுத்துதல் (11:2, 3)

**[2]அதினாலே முன்னோர்கள் நற்சாட்சிபெற்றார்கள். [3]விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்ட தென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவை களால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்.**

**வசனம் 2.** உண்மையோடு இருந்த முற்பிதாக்களில் சிலரின் பெயரைக் கூறும் முன்பு, **நற்சாட்சி பெற்றார்கள்** (μαρτυρέω, *மார்டுரியோ*) என்று சொல்வது மூலம் அவர்களைக் குறித்து ஆசிரியர் புகழ்கிறார். **முன்னோர்கள்** பிரஸ்பியுட்டரோஸ் (πρεσβύτερος, *பிரஸ்பியுட்டரோஸ்* அடிக்கடி புதிய ஏற்பாட்டில் "மூப்பர்" என்பதைக் குறிக்கிறது) இருந்து மொழிபெயர்க்கப்பட்டது. ஆபேல், ஏனோக்கு, நோவா, மற்றும் ஆபிரகாம் என்பவர்களே இந்த முற்பிதாக்கள். அவர்களுடைய தாலந்துகளுக்காகவோ, சொத்துக்காகவோ, கற்றலுக்காகவோ, அல்லது உலகப்பிரகாரமான சம்பாத்தியத்திற்காகவோ அல்ல, அவர்களுடைய விசுவாசத்திற்காகவே கருத்து கூறப்பட்டுள்ளது. அவர்கள் தேவனை நம்பினார்கள்,

ஆகவே அவர்கள் நற்மதிப்பைப் பெற்றனர். "இந்த முற்பிதாக்கள் தேவனால் சாட்சிபகறும்படிக்கே பிறந்துள்ளனர்" என்பதே இந்த வசனத்தின் அர்த்தமாக இருக்கலாம்.[17] "அவர்கள் வசனத்திற்குள் அழியாதவர்களாயினர்" அந்த யோசனை சாத்தியமாயிற்று.[18]

ஆபேல் குறித்து சாட்சி அல்லது புகழுரை கொடுக்கப்பட்டது (வசனம் 4), ஆம் மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டது, ஆனால் வேதாகமத்தில் "நீதிமான்" என்று அழைக்கப்பட்ட முதல் மனிதன் நோவா (ஆதி. 6:9), தேவனோடு அவருடைய விசேஷ நிலையை அவர் அறிந்திருந்தார், வரப்போவது குறித்து அவர் மட்டுமே எச்சரிக்கப்பட்டிருந்தார் (வசனம் 7). அவருடைய "நீதிக்காக" தேவன் நற்சாட்சி சொல்லியிருக்கலாம். இந்த "முன்னோர்கள்" தேவனிடமிருந்து நேரடியாக அறிவுரைகளைப் பெற்றனர், ஆனால் நமக்கு அவ்வாறாக இல்லை. வசனங்களில் காணப்படும் கடைசி வெளிப்பாடு மூலம் நம்முடைய ஞானம் வந்தது. தேவனோடும், வெளிப்படுத்தப்பட்ட அவருடைய சித்தத்தின் மூலம் அவருடைய ஏற்றுக்கொள்ளப்படுதலின் நிச்சயத்தின் மூலமும் நம்முடைய விசுவாசத்திற்காக நாமும் நற்சாட்சி பெற முடியும். அதிகாரம் 11-ல் முற்பிதாக்களைக் குறித்த நற்சாட்சி நமக்கெல்லாம் முன்னுதாரணமாயிருக்கும்படிக்கு "நிரந்தர பதிவேட்டில் இடம்பெற்றுள்ளது."[19] அவர்களுடைய விசுவாசமானது அவர்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தியது, அவர்கள் தேவனுடைய நற்சாட்சிப் பெற்றனர்.

**வசனம் 3. விசுவாசத்தினாலே ... அறிந்திருக்கிறோம்.** நம்முடைய உலகத்தை தெய்வீக மனமும், வல்லமையும் உருவாக்கிற்று என்று கிறிஸ்தவர்கள் விசுவாசத்தினாலே புரிந்துகொள்கிறார்கள். காணப்படாதவைகளின் நல்ல உதாரணத்தை இந்த வசனம் கொடுக்கிறது, சிருஷ்டிப்பு நிகழும்போது ஒருவரும் பார்க்கவில்லை. அது எவ்வாறு நிகழ்ந்தது என்ற கோட்பாட்டைக் குறித்து நாம் பெருமைப்பராட்ட வேண்டியதில்லை, ஆயினும், விசுவாசத்தின் இருதயமாக, "ஆதியிலே தேவன் சிருஷ்டித்தார்" மற்றும் "கிழக்கிலே சூரியன் உதித்தது" என்பது இதை உறுதிசெய்கிறது என்று ஆசிரியர் சொல்கிறார்.

தெய்வீக சிருஷ்டிப்பானது அறிவியல் விஞ்ஞானத்திற்கு முரண்பாடாக இருப்பதாக அநேகர் நம்புகின்றனர். மூலக்கூறுகளையும், அவைகள் எந்தெந்த மூலப்பொருட்களால் உருவானது என்றும், மற்ற மூலக்கூறுகளுடன் இது எவ்வாறு செயல்படுகிறது என்றும், விஞ்ஞானத்தினால் சொல்ல முடியும் - ஆனால் அவைகளின் துவக்கத்தை விஞ்ஞானத்தினால் நமக்குச் சொல்ல முடியாது. ஆகவேதான், அநேகர் நம்முடைய உலகத்தின் துவக்கத்தைக் குறித்து தங்கள் பார்வையை சொல்ல விரும்புகின்றனர்.

துவக்கத்தின்போது, கவனிக்கும்படிக்கு ஒன்றும் இல்லை.[20] புதிய கண்டுபிடிப்புகள் வர வர அறிவியல் கோட்பாடுகள் மாறுகின்றன. சிலவேளைகளில், சில கண்டுபிடுப்புகள் நம்முடைய வசனத்தை திரும்பவும் ஆராய உந்துகிறது, காரணம் நாம் வசனத்தை சரியாக புரிந்துகொள்ளவில்லை. ஆயினும், இது நம்முடைய விசுவாசத்தை அழித்துவிட முடியாது, காரணம் நம்முடைய விசுவாசம் அறிவியலுக்கு அப்பாற்பட்டது.

உயிரியல் வளர்ச்சி கோட்பாடு விஞ்ஞானத்தை சார்ந்தாக இருக்கிறது, மற்றும் அது விஞ்ஞானம் மட்டுமே அல்ல, விஞ்ஞானம் என்பதன் சரியான அர்த்தம் அறிவு. தத்துவம் கடைசியாக இவ்வாறுதான் சொல்லும், வெறுமையினால் ஒன்றையும் செய்ய முடியாது. விசுவாசமானது அதற்கும் மேலானது, தேவனுடைய வார்த்தையினிமித்தமாக, உரைக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையைக் கொண்டு சிருஷ்டிக்கப்பட்டது, இந்த உலகம் வெறுமையிலிருந்து உருவாக்கப்பட்டது என்று அழுத்தம் திருத்தமாகச் அறிவிக்க முடியும். உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் ஆயத்தப்படுத்தப்பட்டன என்பதை வேதாகம விசுவாசம் உறுதியாய் கூறுகிறது. இன்னும் தெளிவாக சொல்வதென்றால், **இந்த அகிலம் தேவனுடைய வார்த்தையினால் உருவாக்கப்பட்டது**. இங்கே வார்த்தையானது, யோவான் 1-ல் கிறிஸ்துவைக் குறிக்கும் வார்த்தையான லோகோஸ் (λόγος) என்பதைவிட, ரெஹ்மா (ῥῆμα) என்பது தேவனால் பேசப்பட்ட வார்த்தையைக் குறிக்கிறது.

சிருஷ்டிப்பின் செயலுக்கான வல்லமையை மற்றும் செயல்திறனையும் தேவன் கொண்டிருந்தார் என்பதை நிரூபிக்க எபிரெயர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. மாறாக, மோசே (ஆதி. 1:1), மற்றும் சங்கீதக்காரன் (சங். 33:6, 9) செய்தது போன்று, இது ஆவியின் அதிகாரத்தோடு பேசுகிறது. இந்த பிரபஞ்சம் இவ்விதமாக சிருஷ்டிக்கப்பட்டது என்று அனுபவப்பூர்வ ஆதாரம் நம்மிடம் உள்ளது, ஆனால் நம்முடைய இறுதி ஆதாரம் தேவனுடைய வார்த்தை ஆகும். தேவன் எதிலிருந்து உருவாக்கினார் என்ற தேவனுடைய குணாதிசயத்தை அறியக்கூடிய இயற்கையான இயல்பிற்கான, ஒரு வார்த்தையின் வடிவத்தை "புரிதல்" (νοέω, *நோயியோ*) என்பதை ரோமர் 1:20-ல் பவுல் பயன்படுத்தியுள்ளார்.

தேவன் உண்டாக்கியவைகளில் "உலகங்களும்" (αἰών, *ஐயோன்*, இருந்து αἰῶνας, *ஐயொனாஸ்*) "யுகங்களும்" உள்ளடக்கமாகும். இந்தப் பதத்தின் அர்த்தம் "உலகத்தின் வாழ்வு மற்றும் அதன் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் நிலைகள் ... கிறிஸ்துவுக்குள் எல்லா காரியங்களும் ஒன்றாக ஒன்றுகூட நடத்தப்படுத்துதல் ஆகும்."[21] "இருக்கிறவைகள் அனைத்தும் காலமும் வெளியின் கட்டுப்பாடுகளுக்கு கீழானவைகள்" மற்றும் உள்ளடங்கியவைகளாகும்.[22]

**காணப்படுகிறவைகள் உண்டாகவில்லையென்றும்** என்பது "ஓன்றுமில்லாமையிலிருந்து உருவாக்கப்பட்டது" என்று அர்த்தம். ஆதாரப்பூர்வ அர்த்தம் வெறுமையிலிருந்து உண்டாக்கப்பட்டது ஏற்கனவே உள்ள பொருட்களிலிருந்து உலகம் உண்டாக்கப்படவில்லை, மாறாக, லத்தின் பதம் *கிரியேடியோ எக்ஸ் நிஹிலோ*, "வெறுமையிலிருந்து சிருஷ்டிப்பு" என்பதாகும். இது கிரேக்க சிந்தனையில் முன்னுக்குப்பின் முரணாக உள்ளது. *எக்ஸ் நிஹிலோ* என்ற பதம் எபிரெய ஆசிரியரால் பயன்படுத்தப்படவில்லை, ஆனால், "அவருடைய மறுப்பில் இதைத்தான் நடைமுறையில் குறிப்பிட்டு சொல்லப்படுகிறது, சிறந்த பொருட்களால் அகிலம் உருவாக்கப்பட்டது [புலன்களால் அறியக்கூடியது]."[23] தேவனுடைய வார்த்தையினால் சிருஷ்டிப்பு நிறைவுபெற்றது, "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது ... அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்" (சங். 33:6-9).

## நீதிமான்களின் அணிவகுப்பு (11:4-7)

**4விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையானபலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக்குறித்து தேவனே சாட்சிகொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான். 5விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்ட படியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான். 6விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். 7விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக்குறித்து தேவ எச்சரிப்புப்பெற்று, பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டுபண்ணினான்; அதினாலே அவன் உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து, விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்.**

இந்தத் தருணத்தில், விசுவாசம் குறித்த தொகுப்பில், பழைய ஏற்பாட்டிலுள்ள நீதிமான் தனிநபர்கள் என்னும் ஒரு பகுதியை ஆசிரியர் சேர்த்துள்ளார். ஆபேல், ஏனோக்கு நோவா என அவர் துவக்கினார் (வசனங்கள் 4, 5, 7). பின்பு அவர் தொடர்ந்து,

விசுவாசத்தில் கீழ்ப்படிதலுடன் பயணித்தவர்களின் பட்டியலை ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மற்றும் சாராள் என்று தொடருகிறார் (வசனங்கள் 8-16). மூன்றாவது குழுவாக பாடுகளின் மூலம் சோதிக்கப்பட்டவர்களை குறித்தது: ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மற்றும் மோசே சேர்த்துள்ளார் (வசனங்கள் 17-28).[24]

**வசனம் 4. ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையானபலியை தேவனுக்குச் செலுத்தினான்** (ஆதி. 4:1-16 காண்க). "மேன்மை" (πολύς, *பொலஸ்*, இருந்து πλείονα, *பிலியோனா*) "பெரிதாக" அல்லது "மிக முக்கியமான" என அர்த்தம் கொள்ள முடியும்.[25] ஆபேலின் பலியையும் அவனது செயல்பாட்டையும் ஒப்பிடும்போது, ஆதியாகமம் 4:4ல் "முதற்பேரானவைகள்" எனப் பன்மையில் உள்ளது, ஆகவே அவன் காயீனைவிட அதிக எண்ணிக்கையில் பலியிட்டிருப்பான் என்று சிலர் சிந்திக்கின்றனர். இதன் படி பார்த்தால், ஆபேல் கொடுத்தது அதிகம் என்பதன் அர்த்தம் எண்ணிக்கையிலும் தரத்திலும் மேலானதாக இருந்தது.[26]

ஆபேல் **விசுவாசத்தினால்** செயல்பட்டான், ஆனால் காயீனோ காரணத்தை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டான். அவன் ஆதாரப்பூர்வமாக நினைத்தான், "பலியானது எனக்குத் திருப்திகரமாக இருக்குமேயானால், தேவனுக்கும் திருப்திகரமாக இருக்கும்." அவனுடைய மனோபாவம் விசுவாசத்தை மட்டுமே சார்ந்து இல்லை, பிரதிபலனைப் பார்க்கும்போது ஆபேலின் காணிக்கையில், அவனுடைய உள் உணர்வும் எண்ணப்பட்டுள்ளது. அவனுடைய பலியில் சொல்வது என்னவென்றால், பாவ உணர்வு கொஞ்சமும் அவனில் இல்லை என்பதாகும்.[27] ஆதாமின் குமாரர்களின் இருதயங்களைத் தேவன் ஏற்கனவே அறிந்திருந்தார், பின்பு தனது சகோதரனுக்கு எதிராகக் காயீனின் பிந்தைய செயலின் மூலம் அவன் மேல் சொல்லப்பட்ட நியாயத்தீர்ப்பு நியாயப்படுத்தப்பட்டுள்ளது. ஆபேல் தனது பலியை "விசுவாசத்தினாலும்" **நீதியின்படியேயும்** செலுத்தினான், ஆகையால், அது ஆபேலின் இருதயத்தின் இயற்கையான பண்புகள் ஆகும், மற்றும் அது அவனைத் தேவனுக்கு முன்பாக நீதியின் நிலையைக் காட்டியது, மற்றும் அதுதான் அவனுக்கும், அவனுடைய சகோதரனுக்கும் இடையேயான துவக்க வேறுபாட்டைக் காட்டியது.

ஆபேல் **நீதிமானென்று சாட்சிபெற்றான்** (μαρτυρέω, *மார்டுரியோ*). நாம் சொல்லவில்லை, ஆனால் இது எப்படி நிகழ்ந்தது. சாத்தியப்படக் கூடிய ஒன்று என்னவென்றால், தேவன் அக்கினியை அனுப்பிப் பலியைப் பட்சித்தது, 1 இராஜாக்கள் 18:38-ல் இதைத் தான் அவர் எலியாவின் பலியிலும் செய்தார்.[28] நிச்சயமாக, காயீனின் காணிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதாக எந்த ஒரு ஆதாரமும் கொடுக்கப்படவில்லை. ஆதியாகமம் 4:6, 7-ல் தேவன் காயீனுடன்

பேசினார். ஆம், ஆபேலுடனும் பேசினார், அவனுடைய பலியின் அங்கிகாரத்தை அறிவித்தார். ஒருவன் நீதிமான் என்றும் மற்றவன் துன்மார்க்கன் என்றும், அவர் விளக்கமாகக் கூறியிருக்கலாம் (1 யோவான் 3:12). தீமை எப்போதும் நன்மையை வெறுக்கிறது.

இந்தச் சில வசனங்கள் மூலம் எபிரெய நிருபத்தின் ஆசிரியர் ஆதியாகமம் முழுவதையும் நம்புவதாக வலியுறுத்தியுள்ளார். "நான் புதிய ஏற்பாட்டை ஏற்றுக்கொள்கிறேன், ஆனால் பழைய ஏற்பாட்டை அல்ல" என்று ஒருவர் சொன்னால், அது நிலையான முடிவு அல்ல. ஆபேல் **இன்னமும்** வார்த்தையின் மூலம் **பேசுகிறார்**, அவை நிரந்தரமாக வசனங்களில் இடம்பெற்றுள்ளன.[29] அவனுடைய மரணம் வரைக்கும் அவனுடைய பணி தொடர்ந்துகொண்டே இருந்தது (வெளி. 14:13). "நான் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்பட்டுள்ளேன் என்று அவர்கள் சொல்கிறார்கள். எபிரெயர்களாகிய நீங்கள் இரட்சிக்கப்பட விரும்பினால், நான் செய்தது போல் நீங்களும் விசுவாசத்தில் செயல்படுகிறவர்களாக இருக்க வேண்டும்." உண்மையில், ஒருவன் பேசுவது, உயிரோடு இருந்த நாட்களைவிட மரித்த பின்பே அதிகமாக இருக்கும், ஒருவனுடைய வாழ்க்கையையும் மற்றும் குணாதிசயங்களையும் குறித்து உயிரோடு இருக்கும்போது பேசுவதைவிட மரித்த பின்பே மற்றவர்கள் புகழ்ந்து பேசுவார்கள். ஆபேலுடைய முன்மாதிரியான விசுவாசத்தின் மூலம், இருபத்தொராம் நூற்றாண்டு வரையும் வெளிப்படுத்தப்பட்ட வசனங்கள் மூலம் அவன் இன்னமும் பேசிக்கொண்டிருக்கிறான், அவன் செய்தது போல் பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படியம்படிக்கு அது நமக்கு ஆர்வத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுகிறது. மரணத்திலும்கூட மெய்ப்பிக்கப்படுதலும் நியாயந்தீர்க்கப்படுதலும் இருக்கும் என்பதை அவன் உறுதிப்படுத்துகிறான், ஆகவே, தேவன் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாகவே செய்கிறார் என்பது இங்கு ஆதாரப்பூர்வமாகிறது (ரோமர் 8:28-ஐ காண்க). ஆபேலின் இரத்தம் இன்னமும் பூமியிலிருந்து கூப்பிடுகிறது (ஆதி. 4:10 ஐ காண்க). அந்தக் கூப்பிடுதல்களுக்கு நியாயத்தீர்ப்பின் நாளிலே பதிலளிக்கப்படும்.

இயேசுவின் இரத்தமானது, "ஆபேலின் இரத்தத்தைவிட மேலாகப் பேசுகிறது" (எபி. 12:24), அவருடைய இரத்தம் கூப்பிடுகிறபடியினால், "இப்போது பாவ மன்னிப்பு சாத்தியமாகிறது." புதிய ஏற்பாட்டு நாட்களில் நீதிக்காகக் கதறும் பரிசுத்தவான்களின் இரத்த சாட்சிகளுடன் ஆபேலும் இணைந்துகொள்கிறார், இரத்தசாட்சிகளின் பாகம் முடிவடையும்போது, நாம் கற்கும்படிக்கு மட்டுமே அது வரும் (வெளி. 6:9-11).

**வசனம் 5.** ஆதியாகமம் 5:21-24-ல் **ஏனோக்கு** குறித்து ஒரு சுருக்கமான தொகுப்புக் காணப்படுகிறது, வசனம் 24-ல் இருந்து நம்முடைய வாக்கியத்தில் கோடிடப்பட்டுள்ளது, **தேவன் அவனை**

**எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்**; யூதா 14 சொல்கிறது, ஏனோக்கு ஒரு தீர்க்கதரிசியாய் இருந்தான். நோவாவைப் போன்று அவனும் நீதியைப் பிரசங்கிக்கிறவனாக இருந்திருக்க வேண்டும் (2 பேதுரு 2:5). அவனுடைய குமாரன் மெதுசெலா பிறந்த பின்பு அவன் தேவனோடு சஞ்சரிக்கிறவனாக இருந்தான் என்று ஆதியாகமம் வெளிப்படுத்துகிறது. தங்களது குழந்தை பிறந்த பிறகே அநேக மனிதர்கள் தேவனோடு சஞ்சரிக்கும்படிக்கு தெரிந்தெடுக்கின்றனர், அந்த விலையேறப்பெற்ற பரிசானது தேவனுடனான அவனுடைய முழுக் கடமையையும் மற்றும் பொறுப்பையும் புரிந்துகொள்ள வைக்கிறது. அந்தப் பிள்ளை வளர்க்கப்படும்விதமாக வளர்ப்பதற்குப் பக்கபலமாக இருப்பதற்கு, தனது சொந்த திறமைக்கு அப்பாற்பட்டு தனக்கு உதவித் தேவை என்பதை அவன் காண்கிறான் (நீதி. 22:6).

தேவனுடனான தனது நீதியான நடத்தையின் காரணமாக, பூமியிலிருந்து பரலோகத்திற்கு ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார், ஆகவே **மரணத்தை** அனுபவிப்பதில்லை. (இது ஏனோக்கு மற்றும் எலியாவுக்கு மட்டுமே நிகழ்ந்தது; 2 இராஜா. 2:1, 11.) அவன் **எடுத்துக்கொள்ளபட்டான்** என்பது உண்மையான "எடுத்துக்கொள்ளப்படுதல்" ஆகும் (μετατίθημι, *மெட்டாடிதிமேய்*). ("எடுக்கப்படுதல்" என்பதன் அர்த்தம் "ரேப்ச்சர்" என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து வந்தது.) ஆதியாகமம் 5:24-ல் LXX-ல் இருந்து குறிப்பிடும்போது, இதை ஒரு வாகனமாக எபிரெயரின் ஆசிரியர் குறிப்பிடுகிறார். ஏனோக்குச் சாதாரணமாகப் பக்கத்தை மாற்றினார், மாம்சீகத்திலிருந்து ஆவிக்குரியத்திற்குக் கடந்து சென்றார், ஒரு பக்கத்திலிந்து மற்றொரு பக்கம் மாறுதல் அல்லது பூலோகவாசியிலிருந்து பரலோகவாசியாக மாறுதல்.

அப்போஸ்தலர் 7:16-ல் "எடுக்கப்படுதல்" என்னும் பயன்படுத்தப்பட்ட, அதே வார்த்தை தான் யாக்கோபின் சரீரத்தை சீகேம் கொண்டு செல்வதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதை தான் கலாத்தியர் 1:6-ல் கலாத்தியர்கள் விசுவாசத்தை விட்டு விழகியதாக குறிப்பிடும் போது பவுல் பயன்படுத்தினார் (அவர்கள் சடுதியில் எடுக்கப்பட்டுக்கொண்டார்களானால் அல்லது தவறுதலாகக் கொண்டு செல்லப்பட்டார்கள்). பிரமாணத்தில் மாற்றத்திற்காக எபிரெயர் 7:12-ல் அதே வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

எலியா எடுத்துக்கொள்ளப்பட்டபோது எலிசா பார்ப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது போல் (2 இராஜா. 2:1-14), ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவனுடைய சகோதரனோ அல்லது நண்பர்களோ அனுமதிக்கப்பட்டிருப்பார்களேயானால் நாம் ஆச்சரியப்பட்டிருப்போம். ஏனோக்கின் சரீரத்தை சிலர் தேடினதுபோல் பின்பு எலியாவின் சரீரத்தையும் தேடினார்களா (2 இராஜா. 2:17)?

"காணப்படவில்லை" என்பதன் மூலம் அவ்வாறு பரிந்துரைக்கப்பட்டிருக்கலாம். ஏனோக்கு தன் வாழ்க்கையின் மறுபக்கத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தான் (அதற்கான வார்த்தை *மெட்டாடிதிமேயி*-வும் பரிந்துரைக்கப்பட்டது) மற்றும் காணப்பட முடியாமல் போனது. TEV பத்தியின் சாராம்சத்தை மாற்றி, சிலர் அவனுடைய சரீரத்தை தேடினர், ஆனால் "ஒருவரும் அவனைக் காணமுடியவில்லை." அவன் எங்கே சென்றான் என்று அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை, அவன் மறைவதற்கு முன் அவன் சஞ்சரித்தவரை அவர்கள் அறிந்திருந்தார்களேயானால் அவனுடைய கொடுமுடியை அவர்கள் அறிந்திருப்பார்கள். தன் தேவனோடு சஞ்சரிப்பதாகவும் மற்றும் தேவன் தன்னுடன் இருக்கிறார் என்பதையும் அவன் யாரிடமாவது நிச்சயம் சொல்லியிருப்பான்.

"அவனுடைய விசுவாசம் அவனைக் கொண்டு சென்றது" என்று வசனம் 5 சொல்லவில்லை. மாறாக, உலகத்திலுள்ள எல்லாரையும்விட, இந்த மனிதனுக்குத் தேவனுடைய கிருபை கிடைத்தது அதனால் அவன் மரணத்தின் பள்ளத்தாக்கின் ஊடே கடந்து செல்லாமல் பரலோகத்திற்குள் செல்ல அனுக்கிரம் கிடைத்தது.

ஏனோக்கு தேவனோடு இருக்கும்படிக்குப் போவதற்கு முன்பு, தம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை குறித்து விசேஷ வெளிப்பாட்டை அவன் பெற்றான். அவனுடைய விசுவாச நீதியின் வாழ்க்கையின் ஆதாரமாக இதை நாம் கொண்டுள்ளோம்.[30] தனது மகனாகிய மெதுசலாவிடம் இந்த வெளிப்பாடு குறித்துச் சொன்னான், ஆகவே அவனுடைய வாழ்நாள் முழுவதும் நீதியின் வாழ்க்கை வாழ தேவ அறிவானது அவனுக்கு ஏதுவாயிருந்ததா? இப்படிப்பட்ட அறிவினாலே அவன் வாழ்வானேயானால், வசனங்களில் பதிவாகியுள்ள காலங்களில் மற்ற நபர்களைவிட மிகவும் அதிகபட்ச வயதுடையவனாக வாழ்வதற்கு இதுவே காரணமாக இருக்கலாம் (969 வருடங்கள்; ஆதி. 5:27). ஏனோக்கு தன் குமாரனுக்கு வெளிப்படுத்தியது, அவன் எப்படி இருக்க வேண்டும் மற்றும் அவன் எங்குச் சென்றான் என்று அது பரிந்துரைக்கவில்லை. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது, நீதிமானாக வாழ நீதிமான்களை அதேபோன்று அமைந்தது (1 கொரி. 15:51, 52; 1 தெச. 4:13-18).

எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன் அவன் தேவனோடு ஐக்கியத்தில் இருந்தான் என்பதை வசனங்கள் கூறுகின்றது. விசுவாசத்தின் மூலம் இம்மாதிரியான விசுவாசம் கொண்டிருக்க வேண்டும், ஒளியில் வாழ்வது மூலம், அல்லது கிறிஸ்துவை மகிமையிலே சந்திக்கும்படிக்கு அவன் மாற்றப்பட்டிருக்க முடியாது (1 யோவான் 1:6, 7; 3:2-6).

மரணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருப்பதற்கான ஆச்சரியமான காரணம் அவனுடைய விசுவாசம் ஆகும். எபிரெயர் 11:6

இந்த விசுவாசத்திற்கான அவசியத்தை விளக்குகிறது. அவனுடைய விசுவாசமும் கீழ்ப்படிதலும் **தேவனைப் பிரியப்படுத்துகிறதாயிருந்தது**.

**வசனம் 6.** அடுத்ததாக, ஏனோக்கின் விசுவாசம் தேவனோடுள்ள ஐக்கியத்தின் நிலைக்கும் மற்றும் பரலோகம் கொண்டுசெல்லும் வாகனமுமாக எவ்வாறு இருந்தது என்பதை ஆசிரியர் விவரிக்கிறார்: **விசுவாசமில்லாமல்** [தேவனுக்குப்] **பிரியமாயிருப்பது கூடாதகாரியம்**; அவரில் விசுவாசம் இல்லாமல் ஒருவரும் தேவனைப் பிரியப்படுத்தியது இல்லை. தன்னுடைய முழுமையான கீழ்படிதலின் விசுவாசத்தினால் ஏனோக்கு தேவனை மிகவும் பிரியப்படுத்தினான். விசுவாசத்தில் இதுவே பிரதானமான சரத்து என்பதை எபிரெயரில் காணமுடியும். விசுவாசம் இல்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாத காரியம் என்பதன் அர்த்தம் கடினம் என்பது அல்ல, ஆனால் வேறு எந்த விதிவிலக்கும் இல்லை என்பதாகும். "ஏதோ ஒரு தெய்வத்தை" அல்லது "மேன்மையான மனிதர்களை" அல்லது "பெரிய ஆவிகளை" விசுவாசிப்பது போன்றது இது அல்ல. ஒரே மெய் தேவனில் விசுவாசம் வைப்பது ஆகும்! தீர்க்கதரிசிகள் மூலமாகவும் இப்போது நம்முடன் கிறிஸ்துவின் மூலமாகவும் பேசுகிற தேவன் மீது வைக்கும் விசுவாசமே இந்த விசுவாசம் ஆகும் (1:1, 2).

தேவனைப் பிரியப்படுத்த ஒருவர் இரண்டு சத்தியங்களை விசுவாசிக்க வேண்டும்: (1) **அவர்** உண்டென்றும், (2) **அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்.** விசுவாசத்தில் சேர்க்கப்பட வேண்டிய இரண்டாவது யோசனை: தேவனுடைய முக்கியமான நன்மையில் விசுவாசமாயிருத்தல், இதில் அநேகர் சந்தேகப்படுவதுண்டு, அடிக்கடி ஐயப்பாடு உருவாவதற்கு இதுவே காரணம். இறுதி பலனில் நம்பிக்கை வைத்தால் மட்டுமே நாம் "உண்மையோடு தேவனைத் தேட" முடியும். வார்த்தை தேடுதல் (ἐκζητέω, *எக்செட்டியோ*) அர்த்தம் "கண்டுபிடி அல்லது தேடு."[31] வாகனமோ, வீடுகளோ வேறு பொருட்களை அடைவது மூலம் பெறும் பலன் பலனல்ல. தேவனை அடைவதே நம்முடைய பலன் அதாவது நித்தியம் முழுவதுமாக நிறைவு செய்வது ஆகும். அது வரைக்கும் அவருடைய கிருபையின் ஆளுகையை நாம் உறுதியளிக்க முடியும் (ரோமர் 8:28). அவரைத் தொடர்ந்து தேடுகிறவர்களுக்கே இது வாக்குத்தத்தம் பண்ணப்படுகிறது, அப்படிப்பட்ட நபர்களே அவரைக் காண முடியும்.

எபிரெயரில் "விசுவாசம்" என்பதன் பொருள், தேவனைக் காணும்படிக்கு மிகுந்த ஆர்வத்தை உண்டுபண்ணும் நம்பிக்கையைக் கொண்டிருத்தல் ஆகும். "*தேவனிடம்* வருகிற" நபர் என்பவர் "மாம்சத்தின்படி" அல்லாமல், தேவனுடைய சித்தத்தின்படி வாழ்கிறவராக இருக்க வேண்டும், மாம்சத்தின்படி வாழ்கிறவர் "தேவனை ஒருபோதும் பிரியப்படுத்த முடியாது" (ரோமர் 8:8). இது

மாதிரியான விசுவாசம் தாவீது தேடி பெற்றது போன்றதாகும்: "நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்" (சங். 34:4).

"அவர்கள் நம்பினார்கள் ஆனால் விசுவாசிக்கவில்லை" என்று சொல்வது மூலம் விசுவாசத்திலிருந்து வழுவினவர்களைக் குறித்துச் சிலர் பேசுகின்றனர், இதுபோன்ற சிந்தனை வசனம் 6-ல் நிராகரிக்கப்பட்டுள்ளது. "விசுவசாம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை (πίστις, *பிஸ்டிஸ்*) இதற்கு ஆங்கிலத்தில் "விசுவாசம்" மற்றும் "நம்பிக்கை" என்ற இரு வார்த்தைகள் காணப்படுகின்றன. ஆங்கிலத்தில் இரண்டு வார்த்தைகள் இருக்கையில், கிரேக்கத்தில் ஒரு பதம் தான் உள்ளது. இந்த வசனம் வெளிப்படையாகக் கூறுகிறது "விசுவாசம் இல்லாமல்"; ஒருவர் தேவனைப் பிரியப்படுத்த முடியாது, அந்த ஒருவர் தேவனை "நம்ப வேண்டும்." ஆங்கில மொழிபெயர்ப்பின் காரணமாக இரண்டு வித்தியாசமான பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நம்புகிறவன் விசுவாசத்தைக் கொண்டிருக்கிறான். புதிய ஏற்பாட்டில் "விசுவாசிகள்" என்று வாசிக்கும்போது, அவர்கள் தேவனில் "நம்பிக்கையுள்ளவர்கள்" என்று நாம் அடையாளம் காண்கிறோம்.[32] மோசேயின் விசுவாசம் "காணமுடியாதவரை காணும்படி" செய்தது (வசனம் 27).

ஒருவர் ஏன் தேவனை நம்ப வேண்டும்? அதற்கான காரணங்கள் இவைகளே: (1) அவரே எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் (ஆதி. 1:1; யோவான் 1:3), (2) அவரால் எல்லாம் உண்டாக்கப்பட்டவை மற்றும் அவருடைய சித்தத்தில் எல்லாம் இணைந்து ஒன்றுக்கொன்று செயல்படுகின்றன (எபே. 1:11). அவருடைய சித்தத்துடன் இணைந்து இருக்கிற எல்லாம் சரியானவை, அவருடைய சித்தத்தை மீறுகிறவைகள் அனைத்தும் தவறானவை. தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாகச் செயல்படுகிற ஒவ்வொருவரும் அகிலத்தின் உன்னத அதிகாரத்திற்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறவனாக இருக்கிறான். தேவனிலும் மற்றும் அவருடைய வெளிப்பாடுகளையும் நம்பாதவரை யார் தேவனுடைய சித்தத்தோடு இணைந்து செயல்படுவார்? விசுவாசத்தில் ஒருவன் தேவனிடம் வரும்படிக்கு, மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் பெறுதலையும் சேர்த்து, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் (அப். 2:38; 3:19; மாற்கு 16:16). எபிரெயரின் உண்மையான விசுவாசம் என்பது தனது கீழ்ப்படிதலின் மூலம் தன் விசுவாசத்தைச் செயல்படுத்துபவனுடன் சார்ந்து இருக்கிறது, கீழ்ப்படிதல் இல்லையென்றால் அது "செத்த" விசுவாசம் ஆகும் (யாக். 2:17). விசுவாசம் இல்லாமல் எந்தவித ஞானஸ்நானம் எடுத்தாலும் இந்தக் கட்டளைகள் மதிப்பற்றதாகிவிடும், விசுவாசம் இல்லாமல் ஊகத்திலே கீழ்ப்படிபவர்கள் அனைவரும் தவறாக உரிமை கோறுபவர்கள், தேவன் மீது நம்பிக்கையற்றவர்கள்,

மற்றும் சிறுவர்கள் ஆவர்.

எந்த ஒரு ஞானஸ்நான பெற்றோரும் பிள்ளைகளுக்காக விசுவாசிக்க முடியாது, மற்றவருக்காக வேறொருவரும் விசுவாசிக்க முடியாது. கீழ்ப்படிதலின் துவக்கப் புள்ளியில் ஒருவருடைய விசுவாசம் எவ்வளவு உறுதியாக இருக்க வேண்டும் அதாவது தேவன் சொல்ல வேண்டும், போதனையின் படிவத்தின் தேவைக்கேற்ப இருதயதிலிருந்து கீழ்ப்படிவேன் என்று சொல்லுமளவுக்கு அவர் உறுதியாக இருக்க வேண்டும். உண்மையான விசுவாசி என்பவர் வேதாகம போதனைகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான விசுவாசத்தைக் கொண்டவராக இருக்க வேண்டும் (ரோமர் 6:17).

**வசனம் 7. நோவாவுடைய விசுவாசத்தின்** உதாரணம் நமக்குக் காண்பிப்பது என்னவென்றால், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினது சம்பவிப்பதற்குச் சிறியதாகவோ அல்லது எந்த ஒரு ஆதாரமோ இல்லையென்றாலும்கூட, செயல்படுத்துவார் என்பதைத் தேவனில் நம்புகிறவன் அறிந்திருக்கிறான் (ஆதி. 6-9; எசே. 14:12-14). நோவாவின் விசுவாசமானது உண்மையிலேயே "காணப்படாதவைகளில்" மேல் இருந்தது (வசனம் 1). முதல் எச்சரிக்கை வந்ததிலிருந்து பெருவெள்ளம் வரைக்கும் நூற்றியிருபது வருடங்கள் சென்றன (ஆதி. 6:3). மிகப் பெருமளிவிளான தண்ணீரைக் கண்டிராத (அவன் அப்படி எண்ணியிருப்பான் என்று நம்முடைய யூகம்), மிகப்பெரிய கப்பலையும் கட்டப்படுவது, மனிதனுடைய நிலையிலிருந்து, அது நிச்சயம் முட்டாள்தனமானதாகக் தோன்றியிருக்கும், **தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை** உண்டுபண்ணினான்; பிரபலமான கேலிகூத்திற்கு அவன் ஒரு மையப்பொருளாக இருந்திருப்பான், "நோவாவின் மடத்தனம்" என்று அவருடைய வேலை வர்ணிக்கப்பட்டது. ஆயினும், தேவன் தனக்குக் கொடுத்த வெளிப்பாட்டில் நோவா தன் விசுவாசத்தை வைத்து, பேழையைக் கட்டி முடிக்கும் வரைக்கும் தொடர்ந்து கட்டிக்கொண்டிருந்தார்.

பெருவெள்ளமானது நமக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்கிறது. எச்சரிப்புகளின் மத்தியில், நியாயத்தீர்ப்பிற்காக இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருப்பதைப் போன்று, இதுவும் ஆச்சரியபடுத்தும் விதமாகவும் மற்றும் எதிர்பாராத விதமான சம்பவம் ஆகும் (மத். 24:37-39, லூக். 17:26, 27). பெருவெள்ளம் நிகழ்வதற்கு எந்தவித நிஜ ஆதாரமும் இல்லாத போதும், மற்றும் **இதற்கு முன் இம்மாதிரியான** வெள்ளம் நிகழ்ந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லாதிருந்தபோதும், காணப்படாத காரியங்கள் குறித்து, நோவா எச்சரிக்கப்பட்டிருந்தார். தனது "பக்திவைராக்கியம்" மற்றும் "தெய்வீக பயம்" காரணமாக நோவா தேவனுக்குக் கீழ்ப்படிந்தார். தேவனுடைய கோபத்திற்குப் பயப்படுதல் என்பது குறிப்பாகக் கடமையுணர்ச்சியின் கூறுகள் ஆகும்.[33] தேவன் மீதும் மற்றும் அவருடைய வார்த்தை மீதும்

நோவாவுக்கு உலமார்ந்த மதிப்பு இருந்தது. **பக்திநிறைந்த** அல்லது பயம் என்பதற்கான கிரேக்க வார்த்தை (εὐλαβέομαι, *யுலாபியோமாய்*). இது உண்மையாகப் பயத்தை அர்த்தம்கொள்ளும், அது வரப்போகும் பெருவெள்ளத்திற்கு இயற்கையான பதிலாக இது இருக்க வேண்டும். எப்படியிருந்தாலும், பயம் இடைபட்டுள்ளது, தேவனுக்கு நேராய் நோவாவின் இருதயம் பக்தி நிறைந்த பயம் கொண்டிருந்தது ஆதாரப்பூர்வமானது.

தனது நீதியின் மூலம் நோவா இந்த **உலகத்தைக் கண்டித்தார்**. இதைப் போல் தான் யோனாவின் விண்ணப்பத்திற்கு நினிவே பட்டணத்தார் செவிக்கொடுத்தார்கள். அவர்களுடைய கீழ்ப்படிதல், இயேசுவைக் கேள்விப்பட்ட அவிசுவாசிகளை ஏற்ற காலத்தில் கண்டிப்பதற்கு உதவியாயிருக்கும் (மத். 12:41, 42). உண்மையில், விசுவாசத்தில் கீழ்ப்படியாதவர்களை ஒவ்வொரு உண்மையுள்ள விசுவாசிகளும் கண்டிப்பார்கள், "இடுக்கமான வாசல்" வழியே நுழைவதற்கு அதேபோன்ற ஆர்வமும் வாஞ்சையும் அவர்கள் கொண்டிருந்தால், அவர்களாலும் நம்பி கீழ்ப்படிய முடியும். அந்த வாசல் வழியே நுழைவதற்கு "எல்லா முயற்சிகளையும்" நாம் எடுக்க வேண்டும் (லூக். 13:23, 24 ஐ காண்க).

**தேவ எச்சரிப்புப்பெற்று**, வேறு வாக்கியத்தில் வார்த்தை *கிரிமடிஸோ* (χρηματίζω), பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் இது தெளிவான அர்த்தம் "தெய்வீக அழைப்பு" (அப். 11:26 ஐ காண்க), அல்லது தெய்வீக எச்சரிப்பு (காண்க எபி. 8:6). நோவாவின் நீதிக்கு இந்த எச்சரிப்பே "சாட்சியாயிருக்கிறது." இங்கேயும் வேறு எங்கும் சிறிய சந்தேகம் வரலாம், தேவனிடமிருந்து வெளிப்படுத்தப்பட்ட செய்தியை *கிரமடிஸோ* குறிக்கிறது. இது வெளிப்படையாக இருக்கிறது, அனைவரும் சாதாரணமாகக் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட வேண்டும். இந்தத் தலைப்புத் தேவனால் கொடுக்கப்பட்டது. பக்தியோடும், அல்லது தெய்வப் பயத்தோடும் பரிபூரணக் கீழ்ப்படிதலுடன் நோவா பதிலளித்தார். ஆதியாகமம் 6:22 சொல்கிறது, "நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்." அவனுடைய கீழ்ப்படிதல் அவனுடைய விசுவாசத்தைச் செயல்படுத்துகிறது, எபிரெயரில் மீண்டும் ஒருமுறை விசுவாசம் கீழ்ப்படிதலை உள்ளடக்கியதாக இருக்கிறது.

கீழ்ப்படிதல் மூலம், "அவன் உலகத்தை எச்சரித்தான்," நம்பிக்கை பாத்திரமாகிய தேவனில் விசுவாசமாயிருப்பது மூலம் வாழ்வது சாத்தியமே என்று விவரித்துள்ளான். அவனால் செய்ய முடியுமென்றால், அவன் பிரசங்கிக்கிற மற்றவர்களாலும் முடியும் (2 பேதுரு 2:5). உலகம் பாவத்தினாலும் மற்றும் துன்மார்க்கத்தினாலும் நிறைந்திருக்கிறது, ஆனால் அவ்வாறாக இருக்க வேண்டிய அவசியம்

இல்லை என்பதையும் காண்பிப்பது மூலம் நோவா உலகத்தைக் கண்டித்தான். தேவனால் எச்சரிக்கப்பட்டும் மற்றும் நீதிமானாயிருந்தும் தனது சமுதாயத்திலுள்ள நண்பனோ அல்லது எதிரியோ எல்லாரையும் அவன் எச்சரிக்க வேண்டியதாயிருந்தது. சொல்லப்பட்டவர்கள் கீழ்ப்படிய நிராகரிக்கிறவர்களுக்கு அவனுடைய பிரசங்கம் கண்டிக்கிறதாயிருந்தது. இம்மாதிரியான செய்தியை அவன் கொடுக்க வேண்டியதாயிருந்தது: "தேவன் என்னோடு பேசி சொன்னது என்னவென்றால், பெரும் வெள்ளத்தினால் அவர் இந்த உலகத்தை அழிக்கப்போகிறார். நான் செய்வது போன்று நீங்களும் செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது."

"தெரிந்தெடுக்கப்பட்டவர்களாயிருக்கும்படிக்கு" விசுவாசிகள் தனிப்பட்டவிதமாகவோ மற்றும் தனிநபராகவோ தேர்ந்தெடுக்கப்படவில்லை. சத்தியத்தை நம்பி கீழ்ப்படியும்போது, நாமும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். 2 தெசலோனிக்கேயர் 2:13, 14ல் நல்லதொரு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. வசனம் 13ல் கூறப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை அடையும்படிக்கு, "எங்கள் சுவிசேஷத்தினாலே ... அவர் உங்களை அழைத்தார்" என்று வசனம் 14 சொல்கிறது. நீதிமான்கள் என்ற நிலையின் அங்கமாக இருக்கையில், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவர்கள் நித்திய ஜீவனுக்கு முன்குறிக்கப்பட்டுக் குழுவுக்குள் நுழைந்து தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகிறோம். நோவாவின் விசுவாசம் கீழ்ப்படியும்படிக்கு அவனை நடத்துகையில், செயலில் இணைவோமென்றால் நம்முடைய விருப்பம் நம்மை இரட்சிக்கும். ஆபிரகாமிற்குத் தேவன் செய்தது போன்று, நோவாவின் விசுவாசத்தினால் தேவன் அவனை நீதிமானாக அறிவித்தார் (ஆதி. 15:6).

ஆபேல், ஏனோக்கு, மற்றும் நோவா ஆகியோர் நீதிமான்களாகத் தேவனோடு சஞ்சரித்தனர். விசுவாசத்தினாலே அவர்கள் வாழ்ந்து மற்றும் அவருடைய சித்தத்தின்படி ஆராதித்தார்கள். **விசுவாசத்தினாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான்** என்று அவர்கள் ஒவ்வொருவரும் அழைக்கப்பட்டார்கள். இந்த முற்பிதாக்கள் தங்கள் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்பட்டனர், அது அவர்களை நீதிமான்களாக்கியது. தேவனுடைய கிருபையினாலே அவருடைய அனுக்கிரத்தை அவர்கள் பெற்றனர்.

## விசுவாசத்தின் தகப்பன் (மற்றும் தாய்) (11:8-12)

**8விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்திற்குப் போகும்படி அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து, தான் போகும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப்போனான். 9விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே**

**பரதேசியைப்போலச் சஞ்சரித்து, அந்த வாக்குத்தத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்; [10]ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான். [11]விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள். [12]ஆனபடியால், சரீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப்போலவும் கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்.**

விசுவாசம் செயல்படுகிறது. வசனம் 11:4-7-ல் கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்களில், தேவனை வணங்குவதிலும், தேவனோடு நடப்பதிலும், மற்றும் ஒரு பெரும் வெள்ளத்தின் வருகையை எதிர்நோக்கி, ஒரு பேழையில் வேலை செய்ததிலும் விசுவாசம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இப்போது, ஆபிரகாம் மற்றும் சாராளின் விசுவாசம் தேவன்மீதுள்ள நம்பிக்கை என்று நாம் பார்க்கலாம். உண்மையில், வழக்கத்திற்கு மாறான சூழ்நிலைகளில், தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு, விசுவாசம் அவரை நோக்கிப் பார்க்கிறது.

**வசனம் 8.** பழைய ஏற்பாட்டில், குறிப்பாக **விசுவாசமாக** இருந்ததில் **ஆபிரகாமே** முதன்மையானவராகக் குறிப்பிடப்பட்டுள்ளார் (ஆதி. 15:6; அவருடைய சரித்திரக்கதை ஆதி. 12:1-25:11 வரை கூறப்பட்டுள்ளது). அவருடைய விசுவாசம் நியாயப்படுத்தப்பட்டது, அதாவது அவர் நீதிமானாக எண்ணப்பட்டார் என்று பொருள்படுகிறது.

ஆபிரகாமின் விசுவாசம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது, ஏனென்றால் விசுவாசம் என்ற தலைப்பில் புதிய ஏற்பாட்டு விவாதங்களில் அவர் மீண்டும் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ளார் (ரோமர் 4:9-25; கலா. 3:7-14; யாக். 2:21-23 பார்க்க). அவர் பாவமற்றவராக இருந்ததில்லை, ஆனால் ஆபிரகாம் விசுவாசத்துடன் வாழ்ந்தார். எபிரெயர் நிருபத்தின் இந்த வாசகர்கள் யூதமதத்திலிருந்து வந்திருந்ததைப்போலவும், மற்றும் பின்னர் யூதமத "கூடாரத்திலிருந்து" விலகுமாறு அறிவுறுத்தப்பட்டதைப் போலவும் ஆபிரகாம் "வெளியேறுவதற்கு" **அழைக்கப்பட்டார்** (13:13). ஒரு செயலை விவரிக்கும் வினைச்சொல் வடிவமாக **வெளியே சென்று கொண்டிருக்கும்** என மொழிபெயர்க்கப்பட்டு (ἐξέρχομαι, *எக்ஸெர்கோமை*), ஆபிரகாம் அழைக்கப்பட்ட உடனேயே அவர் சென்றார் என்பதைக் குறிக்கிறது. பி. எஃப். வெஸ்ட்கோட் குறிப்பிட்டுள்ளார், "அது இன்னும் அவனுடைய காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கும்போதே, ... அழைப்பிற்கு அவர் கீழ்ப்படிந்தார்."[34] இந்த வசனங்களில் முக்கிய வினைச்சொல் "கீழ்ப்படிந்தான்" என்பதாய்

இருக்கிறது. மற்ற எல்லாச் செயல்களும் முக்கிய வினைச்சொல்லுக்குக் கீழானதாய் உள்ளன, அவனுடைய கீழ்ப்படிதல் முதன்மையான செய்திக்கூறாய் இருக்கிறது.

**தான் எங்கே போகிறோம் என்று தெரியாமல்**, கோத்திரப்பிதாக்கள் போய்க்கொண்டிருந்தனர், மேலும் அவ்வாறு செல்வது சில நேரங்களில் சலிப்படைவதாயும் அல்லது அச்சுறுத்தலானதாயும் இருந்திருக்க வேண்டும். ஆரானில் தேவனால் அவர் அழைக்கப்பட்டபோது, அவருடைய எதிர்கால த்தில் பெறப்போகும் **சுதந்தரத்தை** பற்றின ஒரு தெளிவான விளக்கம் அவருக்குக் கொடுக்கப்படவில்லை. அவருடைய விசுவாசம் அவனுடைய வாழ்க்கையை ஆதிக்கம் செலுத்தியது. நோவாவுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட வழிமுறைகளின்றி, அவர் கீழ்ப்படிந்தார். ஒருவேளை, அதனால்தான் நோவாவுக்குப் பதிலாக ஆபிரகாம் "விசுவாசிகளின் தகப்பன்" என்று அழைக்கப்படக் காரணமாக இருந்திருக்கலாம்.

**வசனங்கள் 9, 10.** ஆபிரகாம் நிரந்தரக் குடியிருப்பு இல்லாமல், ஒரு மதவாத தேசாந்திரியாக ஒரு யாத்திரிகனைப்போல வாழ்ந்து வந்தார். அவருடைய எஞ்சின நாட்களில், **அவர் ஒரு அந்நியனாக வாக்குத்தத்த பூமியிலே**[35] இருந்தார் (அப். 7:2-5). "அந்நியனாக" (παροικέω, *பரோக்கியோ*) என்ற வார்த்தைக்கு, "இணைந்து வாழ" என்று பொருள்படியாகவும், அதாவது ஒரு "அன்னிய குடியிருப்பாளன்" என்ற சிந்தனையை வெளிப்படுத்தியது.[36] இத்தகைய மக்கள் பெரும்பாலும் கேலிக்குரியவர்களாகவும், மற்றும் உள்ளூர் ஆட்சியாளர்களின் விருப்பத்தின்போது வெளியேற்றப்படுபவர்களாகவும் இருந்தார்கள். முதல் நூற்றாண்டில், உலகில் மிகவும் அழகான நகரமாகக் கருதப்பட்ட ரோமில் சிறந்த வாழ்வைப் பெற, அங்குச் செல்வதன் மூலம் அநேகர் அந்நியர்களாக வாழ்வார்கள். ஆபிரகாமும், மற்றும் எபிரெயர் நிருபத்தின் ஆசிரியரும் ஒரு சிறந்த உலகத்தைப் பற்றி அறிந்திருந்தார்கள்.

அப்போஸ்தலர் 7:2 ஆனது இதைக் குறிப்பிட்டபோதிலும், ஆபிரகாமின் உண்மையான அழைப்பு ஆதியாகமத்தில் பதிவு செய்யப்படவில்லை. ஆதியாகமம் 12:1-3 ல் நாம் காண்பது இரண்டாம் அழைப்பாகும்.[37] அவருடைய அழைப்பானது, **ஈசாக்கும் யாக்கோபும்** கூடப் பெற்றுக்கொண்ட வாக்குத்தத்தத்தையும் உள்ளடக்கியிருந்தது (வசனம் 9).

வாக்குத்தத்தம் என்பது ஒரு தேசத்தை மட்டுமல்ல, ஆனால் அது வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட வித்தான இயேசு கிறிஸ்துவையும்கூட உள்ளடக்கியதாயும், மற்றும் அவர் நமக்குப் பெற்றுத்தந்த எல்லா ஆசீர்வாதங்களுமாயும் கூட உள்ளடக்கியதாயும் இருந்தது (கலா. 3:16). ஆபிரகாம் **கூடாரகங்ளில்** (அல்லது "ஆசாரிப்புக்கூடாரங்கள்"; வசனம் 9) வாழ்வதற்க்கு விருப்பம் உள்ளவனாய் இருந்தார், ஏனென்றால் அவர்

வாக்குத்தத்தத்தின் பகுதியாக இருந்த (வசனம் 10) ஒரு பரலோக **நகரத்தையே எதிர்நோக்கியவராய்** (ἐκδέχομαι, *எக்டெக்கோமை*) இருந்தார். கிரேக்க வார்த்தையின் அர்த்தம் என்னவென்றால் அவர் பார்த்துக்கொண்டிருந்தார் என்பதாகும். அவரது விசுவாசத்தின் உறுதியே மேலோங்கி நின்றது. அவரது வாழ்க்கை "காணப்படாதவைகளில்" நம்பிக்கை வைப்பது என்ற விசுவாசத்தின் தன்மையை விளக்குகிறது (வசனம் 1). அவரது விசுவாசம் அசாதாரணமானதாய் இருந்தது. வீடு மற்றும் பாதுகாப்பினை விட்டு விட்டு, தெரியாத இடத்தை நோக்கி செல்வது என்பது எவ்வளவு கடினமாய் இருந்திருக்கும்! தேவன் முற்பிதாக்களுக்குப் பரலோகத்தைப் பற்றிய சில அறிவைக் கொடுத்திருக்க வேண்டும், என்றாலும் நமக்கு அதைப்பற்றி எழுதப்பட்ட பதிவுகள் இல்லை. அது வெள்ளத்தால் அடித்துச் செல்ல முடியாத அல்லது கடுமையான வீச்சுகளுடன் மீண்டும் மீண்டும் அடித்து ஆட்டுக்கடாக்களைப் போன்ற ஆண்களால் நெடுஞ்சாண்கிடையாக வீழ்த்த முடியாத ஒரு நீடித்த நகரமாக இருக்கும் என்பதாக "அஸ்திவாரங்கள்" என்ற கருத்தாக்கம் கூறுகிறது.

தேவனின் ஆரம்பகால விசுவாசிகள், ஏனோக்கின் பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட போக்குவரத்திலிருந்து, அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்நாள் காத்திருக்கிறது என்று ஊகித்திருக்கலாம். நம்மால் முடியும் என்பதைப்போல, முன்னர் சென்றவர்களிடமிருந்து அவர்கள் கற்றுக்கொள்ளலாம். "முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோமர் 15:4). அவர்களது கற்றலின் பெரும்பகுதி, வாய்வழி கற்பிப்பினால் இருக்கலாம். பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள அநேக பழக்கவழக்கங்கள் நமக்குச் சிறிது சொல்லப்பட்ட அல்லது எதுவும் சொல்லப்படாதவைகளின் (உயிர்ப்பலியிடுதல், தசமபாகம் செலுத்துதல், மற்றும் முற்பிதாவின் ஆசாரியத்துவம் போன்றவை) தோற்றமாக உள்ளன.

**தேவனுடைய** சீஷர்கள் அவரை ஒரு பெரிய, நிரந்தர நகரத்தைக் கட்டிடும் **கட்டிட கலைஞர்** மற்றும் கட்டியெழுப்புபவர் என்று அறிந்தார்கள். இதுவே ஆபிரகாம் எதிர்நோக்கிய நகரமாய் இருந்தது. அவன் பூமிக்குரிய எந்த நகரத்தையும் சேர்ந்தவர் அல்ல. ஆபிரகாம் எபிரோனுக்கு அருகில் மக்பேலா என்னும் நிலத்தை வாங்குவதற்கு முன்பு, அவர் ஒரு நிலத்தையும் சொந்தமாகக் கொண்டிருக்கவில்லை, மற்றும் வெளிப்படையாக அடக்கம் பண்ணப்படும் ஒரு இடமானது, சொத்தை சொந்தமாக வைத்திருப்பதாகக் கருதப்படவில்லை (ஆதி. 23:6ஐ பார்க்க). ஆபிரகாம் சொந்தமாக "ஒரு அடி நிலத்தைக்கூட" வைத்திருந்ததில்லை (அப். 7:5) என்று ஸ்டீபன் கூறினார்.

நம்முடைய விசுவாசம், ஆபிரகாமைப் போன்று, உண்மையுள்ளவர்களுக்காகப் பரலோகத்தை வடிவமைத்தும், மற்றும் தாமே கட்டி உண்டாக்கின தேவனில்தான் உள்ளது (வசனம் 10).

தெய்வீக "கட்டிட கலைஞர்" (τεχνίτης, *டெக்னிடேஸ்*), அல்லது "கட்டியெழுப்புபவர்," உலகின் அசல் "தொழில்நுட்ப வல்லுநராக" இருக்கிறார்; நம்முடைய தேவன் எல்லா வல்லுநர்களுக்கும் மேலான வல்லுநராக இருக்கிறார். உலகம் உண்டானது முதல் நம்முடைய நித்திய வீடு காட்சியளித்தது (மத். 25:34). ஆயத்தமான ஒரு கூட்ட மக்களுக்காக ஆயத்தமான அந்த ஸ்தலத்தின்மீது, இயேசு இப்போது இறுதி ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறார் (யோவான் 14:1-3).

தேவன் மீது விசுவாசம் வைத்தது, மற்றும் பரலோக நகரத்தைப் பற்றி அறிந்திருந்தது, ஆபிரகாம் முன்னேறுவதற்குப் பொறுமையைத் தந்தது (வசனம் 10). அவருடைய எதிர்பார்ப்புகள், அவருடைய ஆசைகள் மற்றும் நம்பிக்கைகள் "அவர் பரலோக நகரத்திற்குள் நுழையும் வரையிலும் திருப்தியடையாது."[38] நித்திய நகரமே, ஆபிரகாமுடைய உண்மையான குறிக்கோளாக இருந்தது போலவே, நம்முடைய குறிக்கோளுமாக இருக்க வேண்டும். அவருக்குச் சொந்தமாகப் பூமி எதுவும் இல்லாவிட்டாலும், அவருடைய கவனம் பரலோக நகரத்தின் மீது இருந்ததால், அது அவரை வாழ்நாள் முழுவதையும் பொறுமையாய் நடத்திச் செல்வதற்கு உதவியது-அவர் சுமார் நூறு ஆண்டுகளாக வாக்குத்தத்த பூமியில் வசிக்க முடிந்தது.[39]

இந்த அத்தியாயத்தில், நீண்ட காலத்திற்கு முன் வாழ்ந்த ஆபிரகாம் மற்றும் மற்ற அனைவரையும் உண்மையான மக்கள் என்று இதன் ஆசிரியர் அங்கீகாரம் செய்தார். எஃப். எஃப். புரூஸ் கருத்து, "… நம்முடைய வரலாற்று ஆசிரியர், ஆபிரகாம் மற்றும் மற்ற அனைவரையும் உண்மையான வரலாற்றுக் கதாபாத்திரங்கள் என்று பட்டியலிடப்பட்ட இந்தப் பெயர் பட்டியலின் வரிசையிலும், மேலும் இவர்களது அனுபவத்திலிருந்து வருங்காலச் சந்ததியினரும் கற்றுக்கொள்ளலாம் என்பதை உறுதிச் செய்கிறது."[40] இந்த ஆத்துமாக்கள் எல்லாம் இப்போதும்கூட உயிரோடிருக்கின்றன, மற்றும் "[தேவனுக்கு] வாழ்கின்றன" (லூக். 20:38; மத். 22:32; மாற்கு 12:27 பாருங்கள்). ஆதியாகமத்தில் உள்ள முற்பிதாவின் காலத்தை, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வரலாற்றாசிரியர்கள் "பழங்கதை" அல்லது புனைதல் என்ற பார்வையில் பார்த்து, இயேசுவின் மீதும், மற்றும் புதிய ஏற்பாட்டின்மீதும் உள்ள விசுவாசத்தை அழிக்க முயல்கிறார்கள்.

**வசனங்கள் 11, 12.** ஆரம்பத்தில், ஒருவேளை சொன்னவர் ஒரு தேவதூதன் என்று கூடச் **சாராள்** உணராமல், ஒரு குழந்தையைப்பற்றிய தேவதூதனின் வாக்குத்தத்தத்தின் மீது இறை நம்பிக்கை அற்றவளாய் இருந்தாள் (ஆதி. 18:9-15). சாராளின் விசுவாசமானது பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படவில்லை என்பதால், மொழிபெயர்ப்பில் அவளுடைய விசுவாசம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இருந்தன. இந்த வகையில் வசனத்திற்கு ஒரு தீர்வு

வழங்க வேண்டும்: “விசுவாசத்தினாலே வாக்குத்தத்தம் அளித்தவரை அவன் விசுவாசிக்கத்தக்கதாக எண்ணியதிலிருந்து அவரும்கூட [ஆபிரகாமும்கூட] சாராளுடனே சேர்ந்து அவர் வயது கடந்த போதும், ஒரு குமாரனைப் பெற்றுக்கொள்ளுகிறதற்கு வல்லமை பெற்றார்.”[41] சாராள் தன் உள்ளத்திலே நகைத்தாள், மற்றும் பின்பு தான் நகைக்கவில்லை என்று மறுத்தாள். ஆபிரகாமின் நகைப்பு எந்தவிதமான கடிந்து கொள்ளுதலையும் பெறவில்லை என்றாலும்கூட, அவள் நகைத்ததற்காகக் கடிந்து கொள்ளப்பட்டாள் (ஆதி. 17:17; 18:12-15). ஆபிரகாமின் நகைப்பு, விசுவாசத்தின் உள்ளூர ஏற்படும் ஒரு நகைப்பாக இருந்திருக்க வேண்டும். ஆண்டுகள் முன்னோக்கி நகர்ந்ததும், ஆபிரகாமின் விசுவாசம் சாராவினுடையதாயும், மற்றும் அதனால் அவள் **கர்ப்பமாவதற்கான பெலனைப் பெற்றாள்**. குழந்தை ஈசாக்குப் பிறந்தபோது, தேவன் என்னை நகைக்கப்பண்ணினார் என்று அவள் அறிவித்தாள் (ஆதி. 21:6). அவளுக்கு அவரில் முழு விசுவாசம் இருந்தது என்று அவளது அறிக்கை தெரிவித்தது, அது அவளுடைய குழந்தையின் பிறப்பின் மூலம் பலப்படுத்தப்பட்டது.

ஈசாக்குப் பிறந்தபோது, சாராள் தொண்ணூறு வயதானவளாய் இருந்தாள் என்பது அற்புதமான உண்மையாக இருக்கிறது (ஆதி. 17:17). பவுல் இந்த நிகழ்ச்சியைப் பற்றி, ரோமர் 4:18-21-ல் பேசியுள்ளார். ஒரு குழந்தைக்குத் தகப்பனாகும் தகுதியைப் பொருத்தமட்டில், ஆபிரகாமின் **சரீரஞ்செத்தவனென்று** எண்ணத்தகுமாறு இருந்தது (வசனம் 12; ரோமர் 4:19). ஒரு மனிதனின் கண்ணோட்டத்தில், “ஆபிரகாமுக்கு, ஒரு மகனுக்குத் தகப்பனாகும் வாய்ப்பு, ஒரு மரித்த மனிதனுக்கு இருப்பதைப்போல் இருந்தது.”[42] எனினும், தேவன் ஆபிரகாமை **வானத்தின் நட்சத்திரங்களைப்** போலத் திரளாகவும், பல **சந்ததிகளின்** தகப்பனாகவும் வைப்பேன் என்ற அவருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றினார் (ஆதி. 22:17).

புகழ்பெற்ற ஹபல் தொலைநோக்கி மற்றும் பிற வழிமுறைகளின் மூலம், விண்வெளியில் என்ன இருக்கிறது என்பதைப் பற்றி அதிகம் கற்றுக் கொண்டோம், மற்றும் நட்சத்திரங்கள் எண்ணற்றவை என்பதை, முன்பை விடச் சிறப்பாக நாம் புரிந்து கொள்கிறோம் (வசனம் 12). அவைகளில் பெருமளவிலான நூறு கோடி புறநிலை யதார்த்த செய்திக்கூறுகளுக்கான சான்றுகள் நம்மிடம் உள்ளன. பண்டைய கிரேக்கர்கள், அவைகளது எண்ணிக்கை சுமார் மூவாயிரம் என நினைத்தார்கள். எத்தனை பேர் “ஆபிரகாமின் சந்ததியாராக” பிறந்தார்கள்? அரேபியர்களும், மற்றும் இஸ்ரவேலர்களும் பெருமளவில் இன்னும் பிறக்கிறார்கள், அதன் மூலம் ஆபிரகாமுக்கு தேவனுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார்கள். நிச்சயமாக, எல்லாக் கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கி ஆவிக்குரிய சந்ததியாரான ஒரு பெரிய சரீரத்திலேயும் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறினது

(கலாத்தியர் 3:26-29).

## தேவனுடைய வாக்குத்தத்தத்தை அடையாத போதிலும், இவைகளே விசுவாசமாய் இருந்தன (11:13-16)

**13இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள். 14இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். 15தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. 16அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே.**

13 முதல் 16 வரையான வசனங்களில் உண்மையாக விசுவாசத்தில் நடக்கிறவர்களின் பண்புகள் சித்தரிக்கப்பட்டுள்ளன. இந்த நடத்தையானது வாழ்க்கைக்கான ஒரு அர்ப்பணிப்புக்கும் அப்பாற்பட்டதாக இருக்கிறது, மேலும் இது வாழ்வின் முடிவுபரியந்தம் விசுவாசத்தில் பயணிக்கும் ஒரு வாழ்க்கை முறையைக் குறிக்கிறது.

**வசனம் 13.** இந்தச் சூழலில், தனிப்பட்ட நபர்கள் **வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், விசுவாசத்தில் மரித்தார்கள்**. இந்த வசனம், அவர்கள் "விசுவாசத்தின் மூலம்" என்பதைவிட "விசுவாசத்தோடே" (κατά, *கடா*, "இணக்கமாக" என்ற அர்த்தத்தில்) மரித்தார்கள் என்ற வேறுபட்ட ஒரு வெளிப்பாடாக இருப்பதாகக் குறிப்பிடுகிறது. அவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையவில்லை, ஆனால் அவர்கள் அனைவரும் "விசுவாசத்தோடே" மரித்தபொழுதிலும், "விசுவாசத்தின் மூலம்" வாழ்ந்தார்கள்.[43]

4 முதல் 11 வசனங்களில் பெயரிடப்பட்டுள்ள தெய்வீக நபர்கள் - **பார்த்த** [வாக்குத்தத்தங்களை] மற்றும் **தூரத்தில் இருந்து அவைகளை வரவேற்ற** - விசுவாசத்தை முடிவு வரை அழியாமற்பேணியவர்களுடன் வகைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இது சரீர சம்பந்தமான பார்வையாக இருக்க முடியாது மாறாக, பரலோகம் அவர்களுக்கு உண்மையாகத் தோன்றியதால், வாக்குத்தத்தங்களில் இருந்த அவர்களுடைய விசுவாசம் மிகவும் பலமாக இருந்ததாக இந்த அறிக்கை பொருள்படுகிறது. யோவான் 8:56-ல் இயேசு சொன்னதைப் பற்றிச் சிந்தியுங்கள்: "உங்கள் பிதாவாகிய ஆபிரகாம் என்னுடைய நாளை

காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்றார்." ஆ, நமக்கும் அத்தகைய நம்பிக்கை இருந்தது!

நோவா, மற்றும் ஆபேலுடன் ஆபிரகாம், சாராள், ஈசாக்கு, மற்றும் யாக்கோபு, ஆகியோரைக் குறித்து குறிப்புகள் இருக்கின்றன - ஆனால் ஏனோக்கு மரிக்கவில்லை என்பதால், அவரை குறித்துச் சொல்லப்படவில்லை. ஒவ்வொருவரும் தேவனுடைய வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை, அவைகளின் பூர்த்திச் செய்யப்பட்ட வடிவத்தில் அடையாமல் விசுவாசத்தோடே மரித்தார்கள். ஆயினும்கூட, விசுவாசத்தோடே வாழ்வதும், மற்றும் மரிப்பதும் ஒருவனுக்கு மிக அருமையான ஆசீர்வாதத்தை தருகிறது.

விசுவாசத்தின் மூலம், அவர்கள் தூரத்திலிருந்து வாக்குத்தத்தங்களைப் பார்த்தார்கள். அலெக்ஸாண்டர் நாயர்ன், முற்பிதாக்களை நாடோடிகளுக்கு ஒப்பிடுகிறார், "நாடோடிகள் தங்களுடைய பட்டிணங்களுக்கு வனாந்தரத்தில் பிரயாணம்பண்ணும் போது தொலைவிலுள்ள கோபுரத்தை பார்க்கின்றனர் ஆனால் அந்த நாளில் இங்கு அவர்களால் போய்ச் சேர முடியாததினால் வழியில் கூடாரம் போட்டு தங்குகின்றனர்."[44] ஆபிரகாமும் யாக்கோபும் "பூமியிலே வெறுமனே அவர்கள் அந்நியனும், மற்றும் புலம் பெயர்ந்தவர்களுமாய்" இருந்ததாகக் கூறினார்கள் (ஆதி. 23:4; 47:9). "இத்தகைய காரியங்களைக் கூறும் அவர்கள்" (இவ்வுலகமானது அவர்களது இல்லம் அல்ல என்று ஒப்பக்கொள்ளுகிறார்கள்; வசனம் 14) பரலோகத்தில் உள்ள தங்களுடைய நித்திய இல்லத்தைப் பற்றித் தொடர்ந்து பேசுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

தற்காலிக ஆசீர்வாதங்களான குழந்தைகள் அல்லது நிலம் அல்லது அவர் அவர்களுடைய தேவனாய் இருப்பார் போன்ற உலகப்பிரகாரமான இந்த வாக்குதத்தங்களை விட, தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்களானது இந்த நாடோடிகளுக்கு மேலானவைகளை உள்ளடக்கியதாய் இருந்தது. கூடுதல் ஆன்மீக ஆசீர்வாதங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. ஆபிரகாமின் சந்ததியின் மூலமாகப் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி. 12:3; 22:18). இந்த "சந்ததி" கிறிஸ்து என்று கலாத்தியர் 3:16 விளக்குகிறது. ஆகையால் ஆபிரகாம் இரண்டு குடும்பங்களின் தகப்பன்; ஒன்று மாம்சத்திலிருந்தும், மற்றும் மற்றொன்று விசுவாசத்திலிருந்தும் ஆகும். கிறிஸ்துவுக்குள் தேவனுடைய புத்திரராயிருக்கிற ஒவ்வொருவரும், இப்போது விசுவாசத்தின் ஆவியில் ஆபிரகாமின் புத்திரராய் இருக்கிறீர்கள் (கலா. 3:26-29).

உங்கள் பிதாவாகிய கோத்திரத் தலைவன் என்னுடைய நாளை காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான் என்று ஆபிரகாமின் விசுவாசத்தைக் குறித்து இயேசு தெரிவித்தார் (யோவான் 8:56-58). இந்த உலகத்தை குறித்து நமக்கு ஆபிரகாமின் மனப்பான்மையைப் போன்ற

மனப்பான்மை இருந்தால், எப்பொழுதும் செய்வதுபோல் இந்த உலகத்தால் நம்முடைய கவனத்தை ஈர்க்க முடியாது.

ஆபிரகாமும், மற்றவர்களும் **அந்நியர்களும் மற்றும் பரதேசிகளுமாய்** இருந்தார்கள் என்று ஒப்புக்கொண்டார்கள். ஆபிரகாம் இந்த ஒப்புதலை, தன் வாழ்க்கையின் முடிவில் கொடுத்தார் (ஆதி. 23:4). அவர் கானானில், ஒருபோதும் வீட்டில் இருந்ததில்லை. ஆதியாகமம் 47:9 ல், யாக்கோபும் பார்வோனிடம், கிட்டத்தட்ட அதே வார்த்தைகளைச் சொன்னார். அதே மொழியைப் பயன்படுத்தும் அவர்களின் பயன்பாடு, அந்தச் சந்ததியார் தங்கள் அன்றாட உரையின் ஒரு பகுதியாகப் பயன்படுத்தப்படும் ஒரு பொதுவான வெளிப்பாடாக அது இருந்தது என்று கூறப்படுகிறது.

ஆபிரகாம் இறுதியாக, ராஜா அபிமெலேக்குடன் ஒரு நல்ல உறவை பெற்றிருந்த போதிலும், பாலைவனத்தின் அரேபியக் குலமரபுத் தலைவரைப் போன்ற அவனுக்கு, அன்னியராக மற்றும் உரிமைகள் இல்லாமல் இருப்பது கடினமாக இருந்திருக்க வேண்டும் (ஆதி. 20; 21). அவனுடைய விசுவாசம், பரலோகத்தில் தேவனுடைய பிரசன்னத்திற்குச் செல்வதற்கு, அவனை ஆவலோடு இருக்கச் செய்தது.

**வசனங்கள் 14-16.** முற்பிதாக்கள் ஒரு **தேசத்தை** (πατρίς, *பட்ரிஸ்*), அல்லது "சுயதேசத்தை," **அவர்களுக்குச் சொந்தமாக நாடினார்கள்** (வசனம் 14). இதன் விளைவாக, அவர்கள் அவர் எங்குச் செல்லச் சொல்லுகிறாறோ, அங்கெல்லாம் தேவனைப் பின்தொடர்ந்து சென்றனர். அவர்கள் அனைவருமே **மேன்மையான ஒரு தேசத்தையே** (வசனம் 16), அதாவது **அவர்களுக்கே சொந்தமான** (வசனம் 14) **பரமதேசத்தையே விரும்பி**[னார்கள்]. என்றென்றும் பின்னால் விட்டுவிட்டு வந்த ஊர் தேசம் இருந்தாலும், அவர்களுக்குப் பூமிக்குரிய தாயகம் இருக்கவில்லை. அவர்கள் மனதில், எப்போதும் நித்தியத்திற்கான மதிப்புகளையே வைத்திருந்தார்கள்.

உண்மையுள்ள அந்த முற்பிதாக்களால் **தேவன்** பெருமை அடைந்தார், ஏனெனில் அவர்கள் முதலில் ஆவிக்குரிய காரியங்களைத் தேடினார்கள், மற்றும் **அவர்களுடைய தேவனென்னப்பட அவர் வெட்கப்படுகிறதில்லை** (வசனம் 16; யாத். 3:6 பார்க்கவும்). 16-ம் வசனத்தின் வார்த்தைகள், 2:11, 12-ஐ நினைவூட்டுகிறது, மற்றும் சங்கீதம் 22:22-ல் உள்ள மேற்கோளும், இயேசு அவருடைய சீஷர்களை "சகோதரர்" என்று அழைக்கப்படுவதற்கு இது பயன்படுத்தப்படுகிறது. பவுலைப் போன்ற முற்பிதாக்கள், நூற்றாண்டுகளுக்குப் பிறகும், பரலோகத்திற்குரிய பலனைப் பெறுவதற்கு, எல்லாவற்றையும் இழக்க விருப்பமுள்ளவராக இருந்தனர் (பிலி. 3:8 பார்க்கவும்). அவர்களுக்கு இரட்சிப்பைக் கொண்டுவர, கிறிஸ்து பரிபூரணப் பலியாக எவ்வாறு மரிப்பார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை, ஆனால்

அவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பினார்கள்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் "கைவேலையல்லாத வீடு" ஒன்றை அவர்கள் பார்ப்பார்கள் (2 கொரி. 5:1). தேவன் அழைத்தபடியினால், அவர்கள் அவர் மீது தங்கள் முழு கவனத்தையும் வைத்தனர் மற்றும் தாங்கள் விட்டுவந்த தேசத்தைப்பற்றி அதிகம் சிந்திக்கவில்லை (வசனம் 15). பூமிக்குரிய காரியங்களில் வாழ்ந்துகொண்டிருப்பதைவிட, நாம் பரலோகத்தை நினைவில் வைத்திருந்தால், அதற்காக நாம் எவ்வளவு காலம் காத்திருக்க முடியும்!

ஆபிரகாமும் அவருடைய குடும்பமும் உண்மையிலேயே எந்தத் தேசத்தைச் சேர்ந்தவர்களோ, அந்தப் பரமதேசத்தைப்பற்றிய உரைநடையை வசனம் 16 இத்துடன் முடிக்கிறது. அவர்கள் ஊர் அல்லது கானானை, தங்களுடைய வீடு என்று கருதவில்லை. பரமதேசத்தின் மீதிருந்த அவர்களுடைய நம்பிக்கை, நம்பிக்கையுடனான நகரம் நிறைவடைவது இந்த வாழ்நாளில் அவர்களுக்கு இருக்காது என்பதை அவர்கள் இறுதியில் உணர்ந்துகொண்டபோது, விரக்தியிலிருந்து அது அவர்களை வெளிவர வைத்தது. "பூமிக்குரிய வாழ்க்கையில் திருப்தியடைவதற்குப் பதிலாக, இந்தப் பரலோக நம்பிக்கை விடாமுயற்சியின் ஒரு அடிப்படையாக இருப்பதை ஆசிரியர் உறுதிப்படுத்துகிறார்."[45]

## பாடுகள் மூலம் சோதனைக்குள்ளான உண்மையுள்ள மனிதர்கள் (11:17-29)

**11:17-22**

**[17]மேலும் விசுவாசத்தினாலே ஆபிரகாம் தான் சோதிக்கப்பட்டபோது, ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான்.**
**[18]ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று அவனோடே சொல்லப்பட்டிருந்ததே, இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்களைப் பெற்றவன், மரித்தோரிலிருந்து எழுப்ப தேவன்**
**வல்லவராயிருக்கிறாரென்றெண்ணி, [19]தனக்கு ஒரேபேறானவனையே பலியாக ஒப்புக்கொடுத்தான்; மரித்தோரிலிருந்து அவனைப்**
**பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான். [20]விசுவாசத்தினாலே**
**ஈசாக்கு வருங்காரியங்களைக்குறித்து யாக்கோபையும் ஏசாவையும்**
**ஆசீர்வதித்தான். [21]விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன்கோலின்**
**முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான். [22]விசுவாசத்தினாலே**
**யோசேப்பு இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தைவிட்டுப் புறப்படுவார்களென்பதைப்பற்றித் தன் அந்தியகாலத்தில் பேசி, தன் எலும்புகளைக்குறித்துக் கட்டளைகொடுத்தான்.**

**வசனங்கள் 17-19.** ஈசாக்கை ஒரு **பலியாக** ஒப்புக்கொடுத்த **ஆபிரகா[முடைய]** சோதனையை ஒப்பிடும்போது, அவருடைய மற்ற சோதனைகள் அனைத்தும் முக்கியமற்றதாக இருந்தன.[46] அவர் தனது வீட்டை விட்டு வெளியேறி, அறியப்படாத தேசங்களுக்குச் செல்லுமாறும், மற்றும் கொஞ்சம் ரொட்டியையும் தண்ணீரை மட்டுமே கொடுத்து இஸ்மவேலையும் மற்றும் அவனது தாயையும் அனுப்பி விடுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டார் இருப்பினும், ஈசாக்கை ஒரு பலிபீடத்தின்மீது வைக்க வேண்டுமென அவன் கேட்டுக்கொள்ளப்பட்டபோது, அவர் உயர்ந்த **சோதனையை** எதிர்நோக்கினான்.

"பிதாவே, உம்முடைய குணத்திற்கு இது ஒவ்வாததாகத் தோன்றுகிறது; இது உமது வாக்குத்தத்தத்திற்கு முரண்படுவதாகத் தோன்றுகிறது" என்று ஆபிரகாம் இந்தக் கட்டளைக்குப் பல நியாயமான விவாதங்களைக் கொடுத்திருக்கலாம். எனினும், எந்த மனரீதியான ஆட்சேபனையும் அவனது விசுவாசத்தை வெல்ல முடியவில்லை, எனவே ஆபிரகாம் இரண்டு நாட்களுக்கு மேல் சிந்திக்க மிகுதியான நேரத்துடன், நாற்பது மைல் தூரம் பயணம் செய்தான். அவன் தூக்கமில்லாத இரவுகளைக் கடந்துவந்திருப்பார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை, ஆனாலும் அவருக்கு மிகவும் பிடித்தமான ஆத்துமாவுக்கு மிக நெறுங்கிய தன் மகனை உயிர்ப்பலியாகக் கொடுக்க வேண்டியதிருந்தது. ஆபிரகாம் மனிதப் பலியாகக் கொடுக்கும் இந்தச் செயலுக்கும் கீழ்ப்படிய முடியும் என்பதை வெளிப்படுத்திய போது, தேவன் தம்முடைய **வாக்குத்தத்தத்தைப்** புதுப்பித்தார் (ஆதி. 22:11-18).

கர்த்தருடைய தூதன் அவனை நிறுத்தியபோது, அவன் ஏற்கனவே ஈசாக்கைக் பலி கொடுக்கும் நடைமுறையில் இருந்தான் என்பதாக வசனம் 17-ல் பயன்படுத்தப்பட்ட கிரேக்க பதத்தின் வினையின் காலம் குறிக்கிறது.[47] அவன் ஈசாக்கை "வழங்க முயற்சித்தான்." ஆபிரகாமின் விசுவாசத்தின் வலிமையைப் பற்றி எந்தச் சந்தேகமும் இல்லை.

ஈசாக்கு தேவனுடைய வாக்குத்தத்தங்களில் ஒரு மாற்ற முடியாத பகுதியாக இருந்ததால், ஆபிரகாம் பலியாக ஒப்புக்கொடுத்ததைத் தொடர்ந்து, தேவன் அவனை திரும்பவும் உயிர்பிப்பார் என்று அவன் முடிவு செய்தான் (வசனம் 19). தேவன் ஜீவன், மரணம் ஆகிய இரண்டையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளார் என்பதை அவன் அறிந்திருந்தான். ஈசாக்கை உயிர்ப்பலியிடுவதற்கான தார்மீகக் கேள்வியை, ஆசிரியர் விவாதிக்கவில்லை. இதுபோன்ற பலியை தேவன் ஏற்றுக்கொள்ளவும், மற்றும் அவனுடைய உத்தமத்தை இன்னும் காத்துக்கொள்ளவும், இதுதான் ஒரே வழியாய் இருந்தது என்று எண்ணி, ஆபிரகாம் நியாயமாக நடந்துகொண்டதாகத் தெரிகிறது.[48]

“நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும் போய், தொழுதுகொண்டு, உங்களிடத்துக்குத் திரும்பி வருவோம் என்றான்” என்கிற இந்த உண்மை ஆதியாகமம் 22:5 ல் ஆபிரகாமின் கூற்றில் மறைமுகமாக இருக்கலாம். இப்படிபட்ட நம்பிக்கை கொண்டிருக்க ஆபிரகாமுக்கு முன் உதாரனமாக இதற்கு முன் மரித்தவர்களைத் தேவன் எழுப்பினார் என்பதற்கான எந்தப் பதிவும் இல்லை. இந்த உயிர்தெழிதலானது ஆபிரகாமின் ஒப்பற்ற விசவாசத்தினாலேயே சாத்தியமானது.

ஆபிரகாம் இதனைத் தேவனுடைய அக்கறையாக எடுத்துக்கொண்டதாகக் காணப்படுகிறது என்று எஃப். எஃப். புரூஸ் குறிப்பிடுகிறார், ஆபிரகாம் அல்ல தேவனே தம்முடைய வாக்குத்தத்தங்களையும் கட்டளையையும் சரிசெய்வதார். தேவன் அங்கு இருந்தார்.[49] இது சரி என்றால் இது விசுவாசத்தின் ஒரு அற்புத செயலாகும். அவன் அதை வெளிப்படையாகச் செய்ததால், அதை அவன் நியாயப்படுத்தினதால், “தேவன் சாராளிடமும் தன்னிடமும் இந்தக் குமாரனே தங்களுடையவன் என்று தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதையும், அவனது பெரிதளவிலான வாழ்க்கையானது, கருத்தரிக்க மனித சக்திக்கு உட்பட்டு இயலாததாக இருந்தது என்றும், ஆனால் அவ்வாறு செய்யத் தேவன் நமக்கு வல்லமை அளித்துள்ளார் ஆகையால், அவர் அவனை மறுபடியும் தன்னிடத்தில் கொடுக்க முடியும் என்று அவன் நினைத்திருக்கலாம்.” ஆபிரகாம் என்ன நினைத்தானோ, அதில், கவனம் கொள்ளாமல், கட்டளையிடப்பட்டபோது, ஆபிரகாம் உடனடியாகக் கீழ்ப்படிந்து வெளியேறினான் என்பதாக மட்டுமே நமக்குச் சொல்லப்பட்டுள்ளது.

ஆபிரகாமை தன் மகனை பலியிடும்படி கேட்டுக்கொண்ட தேவன் அவருக்கு அவனை எப்படிக் கொடுக்க முடியும்? தேவனாலே எல்லாம் கூடும் (மத். 19:26; மாற்கு 10:27; லூக். 18:27) என்பதால், **மரித்தோரிலிருந்தும் கூட மக்களைத் தேவன் எழுப்ப முடியும் என்று ஆபிரகாம் கருதினான்** (வசனம் 19). உண்மையில், தேவைப்பட்டால், தேவன் கல்லுகளினாலே பிள்ளைகளை உண்டுபண்ண முடியும் (லூக். 3:8 பார்க்கவும்). தேவனுடைய முந்தைய ஆசீர்வாதங்களிலிருந்து ஆபிரகாம் கற்றுக்கொண்ட விஷயங்களிலிருந்து, அவன் தன்னுடைய விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததாலும், மற்றும் மற்றொரு உயிர்த்தெழுதலைப்பற்றி எந்த அறிவும் அவனுக்கு இல்லை என்பதாலும், அது உண்மையிலேயே ஒரு பெரிய விசுவாசமாக இருந்தது.[50]

ஆரம்பகாலக் கிறிஸ்தவர்கள் ஈசாக்கை கிறிஸ்துவோடு ஒப்பிடுகையில், மோரியா மலையின் மீதான இந்தச் சம்பவம், ஒரு அசாதாரணச் சம்பவம் போன்று இருந்தது.[51] வசனம் 19-ல் வழக்கத்திற்கு மாறான **ஒரு வகை மாதிரியை** கொண்டுள்ளது

(παραβολή, *பரபோலே*). ஈசாக்கு ஒரு வகையில், மரணத்தில் இருந்து தப்ப முடியாத, ஆனால் "மரித்தவர்களிடமிருந்து எழுப்பப்படும்" தேவனுடைய குமாரனைப் போலவே இருந்தான் (ரோமர் 6:4, 9). இருப்பினும், இந்தக் கணக்கீடும்கூட ஒரு வகையாக, அல்லது எல்லா நீதிமான்களுடைய உயிர்த்தெழுதலையும் முன்னிலைப்படுத்தும் மாதிரியாக இருக்கிறது.[52] யோவான் 8:56-ல், இயேசு தம்மை இந்தப் பொதுவான பிரதிநிதித்துவத்தில் குறிப்பிட்டுள்ளதாகச் சிலர் நினைக்கிறார்கள். ஈசாக்கைப் பலியிட்டு, மரித்தோரிடமிருந்து திரும்பப் பெற்றது, ஒரு அடையாள அர்த்தமாக இருந்தது. ஆபிரகாம் ஈசாக்கு மரித்துபோனதாக எண்ணினான், ஆகையால், அது அவனுக்கு ஒரு உயிர்த்தெழுதலாக இருந்தது.

**ஒரேபேறான குமாரன்** (வசனம் 17) என்ற சொற்றொடரின் மொழிபெயர்ப்பு, யோவான் 3:16-ல் (μονογενής, *மோனோஜெனேஸ்*) பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையிலிருந்து தான் பிறந்தது. "ஒரு வகையில் ஒரே குமாரன்" அல்லது "பிரத்தியேகமான குமாரன்" என்பது சிறந்த பொருள் மற்றும் சிறந்த நல்ல மொழிபெயர்ப்பாக இருக்கலாம். பலி கொடுக்கும் அந்த நேரத்தில், ஈசாக்கு ஆபிரகாமிற்கு ஒரே மகன் அல்ல, ஆனால் அவன் நிச்சயமாக "பிரத்தியேகமான குமாரனாக" இருந்தான்.

**வசனம் 20.** தன் தகப்பனிடமிருந்து முற்பிதாவின் ஆசீர்வாதத்தைப் பெற்றிருந்த **ஈசாக்கு**, அதைப்போலத் தன் குமாரரை **ஆசீர்வதிக்க** வல்லவனாய் இருந்தான். ஆகையால், ஏவுதலின் படி அவன் தேவனுடைய சித்தத்தை பேசினான்.

**யாக்கோபையும் ஏசாவையும்** ஈசாக்கு ஆசீர்வதிக்கும் சம்பவம் ஆதியாகமம் 27:26-40-ல் காணப்படுகிறது. வஞ்சிக்கப்பட்டு, தவறுதலாக அவன் யாக்கோபை ஆசீர்வதித்து விட்டான். இருப்பினும், தேவன் சரியான குமாரன் ஆசீர்வதிக்கப்படும்படியாகத் தனது உயர்ந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நிராகரித்து விடுவார், மற்றும் கவனித்துக் கொள்வார் என்று அவன் நம்பினான். அதன் பின்னர் அவன் ஏன் அதை மாற்றவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

இது வஞ்சனை மூலம் ஏற்பட்டது போல் தோன்றினாலும் கூட, என்ன நடக்க வேண்டுமென்று தேவன் அனுமதித்திருந்தாரோ, அது அவருடைய சித்தத்தின் நோக்கமாக இருந்தது என்பதை ஈசாக்கு நம்பியிருக்க வேண்டும். நிச்சயமாக, அவன் "விதியை" நம்பவில்லை. மாறாக, அவனது குமாரரின் செழுமையை முன்னறிவிப்பதில், தேவனின் மனதுடன் அவர்களுக்காக அவன் பேசிக்கொண்டிருந்தான் என்பதை அவன் அறிந்திருந்தான். ஒருவேளை - மக்கள் பெரும்பாலும் செய்வதுபோல் - மூத்தவன், வலிமையானவன், மற்றும் இருவரில் இன்னும் அதிகமான உடல் வலிமைமிக்கவனே தேவனுடைய தெரிவாக இருக்கலாம் என்று தேவனுடைய சித்தத்தை அவன்

தவறாகப் புரிந்து கொண்டான். ஆபேல் காயீனைவிடப் பலவீனமானவன்; யாக்கோபு, ஏசாவை விடப் பலவீனமானவன்; மற்றும் தாவீது அபிஷேகம்பண்ணின சமயத்தில், தன் சகோதரர் எல்லாரிலும் பலவீனனும், சிறியவனுமாயிருந்தான். தேவன் "மாம்சத்தின் வழியில் அல்ல, விசுவாசத்தின் வழியிலேயே" தேர்ந்தெடுக்கிறார்.[53]

ஆரம்பத்தில், அடுத்தடுத்து நிகழ்வுகள் ஏசாவின் சந்ததியினரை (ஏதோமியர்கள்) மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் காணப்பட்டனர் ஆனால் இறுதியில் சவுலும் தாவீதும் அவர்களை வென்றனர் (1 சாமு. 14:47; 2 சாமு. 8:14). கடைசியாக, கி.மு. 135-106-ல் இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட மேக்கபீன் காலத்தின்போது, இஸ்ரவேலில் ஆட்சியில் இருந்த ஜான் ஹிர்கானஸ், ஏதோமியர்களை வென்று, அவர்களை யூத தேசத்தின் ஒரு பகுதியினராக மாறிவிடுவதற்காக, விருத்தசேதனம் செய்யும்படி அவர்களைக் கட்டாயப்படுத்தினான்.[54] இதனில் "எண்ணற்ற ஞானம், இறையாண்மையை மீறல், மற்றும் அற்புதமான தேவனுடைய இரக்கம்" ஆகியவை நம்மை ஈர்க்கிறது.[55]

**வசனம் 21.** தன் ஆரம்பகால வாழ்நாளில், **யாக்கோபு** தான் விரும்பியதைப் பெற, தன் சொந்தத் திட்டத்தை நம்பியிருந்தான். தேவனை மறைமுகமாக நம்புவதில், அவனுக்குச் சிக்கல் இருந்தது. இந்த வசனம், அவனுடைய முதிர்ந்த விசுவாசத்தைப் பிரதிபலிக்கிறது.

முற்பிதாக்கள் மரணத்திற்குச் சற்று முன்பு, அவர்களுடைய சந்ததிகளுக்கு ஆசீர்வாதங்களை அளித்தார்கள். இவைகள் தேவனிடமிருந்து வந்த வெளிப்பாடுகளாய் இருந்தன, ஆகவே விசுவாசத்தினால் அவைகள் வழங்கப்பட்டன. இந்த ஆசீர்வாதம், மூத்தவனைக் கவனிக்கத்தவறி விடக்கூடும்-இந்த நிகழ்ச்சியில், ரூபன் - மற்றும் அதிக விசுவாசத்துடன் இருக்கும் ஒருவனுக்கு வழங்கப்படும். **யோசேப்பு** தனது கனவுகளைப் பற்றிச் சகோதரரிடம் சொன்னபோது, நீண்ட காலத்திற்கு முன்னர் குறிப்பிட்டபடி, யோசேப்பு [உடைய] இரண்டு **குமாரரின்** மீதான ஆசீர்வாதம், அவனது சகோதரருக்கு மேலாக யோசேப்பை கௌரவித்தது (ஆதி. 37:5-11). இதன் விளைவாக, யாக்கோபு யோசேப்புடைய குமாரரை, அவனுடைய சொந்தக்குமாரனாக ஏற்றுக்கொண்டான் மற்றும் அவர்கள் இருவரையும் ஆசீர்வதித்து, அவர்களிலிருந்து இரண்டு கோத்திரங்கள் வருவதன் மூலம், யோசேப்புக்கு இரண்டு பங்கைக் கொடுத்தான்.

யோசேப்பின் புத்திரர் மனாசே, மற்றும் இளையவன் எப்பிராயீம் ஆக இருந்தார்கள். யாக்கோபு அவர்களை ஆசீர்வதித்தபோது, அவன் வேண்டுமென்றே, தன் கைகளைக் குறுக்காக நீட்டி, தீர்க்கதரிசனமாக எப்பிராயீமுடைய மூத்த சகோதரனுக்குப் பதிலாக, எப்பிராயீமுக்கு அதிக ஆசீர்வாதம் அளித்தார் (ஆதி. 48:5-20). இந்த இரண்டு

கோத்திரங்களில், எப்பிராயீம் பெரியவனானான்; உண்மையில், தீர்க்கதரிசிகள் அவ்வப்போது முழுமையான வடக்கு ராஜ்யமும் “எப்பிராயீம்” என்று பேசினார்கள் (ஓசியா 11:1-3, 8, 9 ஐ காண்க). இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கானானை கொடுக்கும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது யாக்கோபு வைத்திருந்த **விசுவாசத்தின்** காரணமாக, அவன் தன்னுடைய குமாரரை விசுவாசத்தினால் ஆசீர்வதித்தான். பின்னர், அவன் ஒவ்வொரு மகனின் சந்ததியினரின் எதிர்காலம் பற்றி முன்னறிவித்தான் (ஆதி. 49).

அவர்கள் எவ்வளவு மகத்தான பாரம்பரியத்தை வழங்கினார்கள்! யாக்கோபின் குமாரர் தங்கள் எதிர்காலத்தை முன்னறிவித்த தீர்க்கதரிசனங்களைத் திரும்பிப் பார்க்க முடிந்தது. இஸ்ரவேலர் உண்மையில் விதியின் மக்களாக இருந்தனர். தேவனுடைய தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள் என்பது, அவர்களுக்குச் சரியான பெருமையின் ஒரு அளவீட்டைத் தந்தது, இருப்பினும் அது யூதர்களின் அகந்தையினால் சிதைந்திருக்கலாம்.

யாக்கோபு **தன்கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்.** இந்த வசனம், மீண்டும் ஒருமுறை LXX-ஐ பின்பற்றுகிறது, ஆனால் மசோரெட்டிக் உரையில் ஒரு உயிரெழுத்து அடங்கியிருக்கிறது, அது “படுக்கை” என்ற வார்த்தையாகப் பொருள்படுத்துகிறது.[56] யாக்கோபு “தன்கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்” என்பதாக லத்தீன் வல்கேட் வாசிப்பு அறிவுறுத்துகிறது, அதாவது ஒரு நபரைப் பற்றிய வெளிப்புற வடிவத்தின் ஒரு பிரதிநிதித்துவத்திற்கு ஒப்பாகத் தன்கோலிலே அவன் குனிந்து வணங்கினான் என்பதாகும். “கிரேக்க பாஷை ஆராதனைப் பொருளை குறிக்கவில்லை, ஆனால் அது ஆராதனைக்குரிய தோற்றத்தைக் குறிக்கிறது.”[57] தேவனுடைய தீர்க்கதரிசன சித்தத்தை நிறைவேற்றியபோதோ, யாக்கோபு சாதாரணமாக ஒரு வயதானவனாக, தன்கோலின் முனையிலே அல்லது ஒருவேளை அவனது படுக்கையில் சாய்ந்து இருந்தான்.

**வசனம் 22.** ஆதியாகமம் 50:24, 25ல் விசுவாசம் என்ற இந்த வார்த்தையானது, மறைமுகமாக வெளிப்படுத்தப்படுகிறது. கானான் தேசமானது, அவருடைய மக்களுக்கு அவருடைய அன்பளிப்பாக இருக்கும் என்று **யோசேப்பு**, தேவனுடைய வாக்குத்தத்தங்களில் முழு நம்பிக்கை வைத்திருந்தான். “தேவனோ அவனுடனேகூட இருந்தபடியால்,” அவன் எல்லாச் சோதனைகளிலும் அவனுடைய நம்பகத்தன்மையை அழியாமற்பேணினான் (அப். 7:9, 10). அவன் பதினேழு வயதில் இருந்து, எகிப்தில் கிட்டத்தட்ட வாழ்நாள் முழுவதையும் செலவிட்ட போதிலும், அது தனது வீடு இல்லை என்று அவனுக்குத் தெரியும். அவனது தகப்பனார், அவனுக்கு நன்கு கற்றுக் கொடுத்திருந்தார், அதனால் அவன் மற்றொரு வசிக்குமிடத்தைத்

தேடிக்கொண்டிருந்தான். எபிரெயர்கள் எகிப்தில் அடிமைகளாவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, கானானில் மக்கள் அவரைச் சேவிப்பார்கள் என்று தேவன் வாக்குறுதி அளித்திருப்பதை அவன் அறிந்திருந்தான் (ஆதி. 15:13-16).

விசுவாசத்தினாலே யோசேப்பு எகிப்திலிருந்து வெளியேறுவது **யாத்திராகமத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது** (எகிப்திலிருந்து "புறப்படுதல்" [AB]; ஆதி. 50:24, 25). வாக்குத்தத்த பூமியை பெறுவதற்குத் திரும்பும்போது ("இல்லையென்றால்"), அவர்கள் அவனது எஞ்சியுள்ளவற்றை அவர்களுடன் எடுத்துச் செல்லுமாறு அவன் தனது மக்களிடம் தெரிவித்தான். அவனுடைய உடல் (குறிப்பாகப் பண்டைய எகிப்தில்), அதை பதனீடு செய்வதன் மூலம் (ஒரு உடல்) பாதுகாக்கப்பட்டதால், தருணம் வரும்போது கானானில் அவனுடைய **எலும்புகள்** அடக்கம் செய்யப்படலாம் (யாத். 13:19). யோசுவா 24:32-ன்படி, கடைசியாக, யோசேப்பின் எலும்புகள் சீகேமுவில் இளைப்பாறுதலுக்கு வைக்கப்பட்டன. இந்த உதாரணமும் கூட "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும்" என்பதான ஒன்றாகவும், மற்றும் "காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என்பதின் உதாரணமாக இருக்கிறது (11:1). சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறவிருக்கும் அந்தப் பெரிய நிகழ்வினை, விசுவாசத்துடன் யோசேப்பு எதிர்பார்த்தான்.

யாத்திராகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்க்கதரிசனமானது, பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டின் நிறைவேறுதலாய் இருந்தது (1 கொரி. 10:1, 2 பார்க்க). இது உண்மையில் நடந்ததா என்று சந்தேகிப்பவர்கள், யூத வரலாற்றில் இது ஒரு முக்கிய விஷயமாக இருந்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். "யாத்திரை" அல்லது "புறப்படுதல்" என்ற சொல்லானது புதிய ஏற்பாட்டில் அரிதாக இருக்கிறது. லூக்கா 9:31-ல் இயேசுவின் மரணத்தைப் பற்றி மற்றும் 2 பேதுரு 1:15 ல் பேதுருவின் மரணத்தைப் பற்றி குறிப்பிடும் போது மட்டுமே இது பயன்படுத்தப்பட்டுள்ளது. மரணம் சரியாக ஒரு "வெளியேறுவது" மட்டுமல்ல, ஆனால் உண்மையில் அது "வெற்றிகரமான ஒரு விடுதலையாகும்" என்பதே புதிய ஏற்பாட்டின் பிரதான கருத்தான விசுவாசமாய் இருக்கிறது.[58]

**11:23-29**

**23மோசே பிறந்தபோது அவனுடைய தாய்தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள். 24விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, 25அநித்தியமான பாவ சந்தோஷங்களை**

**அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, [26]இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிகப் பாக்கியமென்று எண்ணினான். [27]விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தைவிட்டுப் போனான். [28]விசுவாசத்தினாலே, முதற்பேறானவைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு, அவன் பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான். [29]விசுவாசத்தினாலே அவர்கள் சிவந்தசமுத்திரத்தை உலர்ந்த தரையைக் கடந்துபோவதுபோலக், கடந்துபோனார்கள்; எகிப்தியர் அப்படிச் செய்யத்துணிந்து அமிழ்ந்துபோனார்கள்.**

ஆபிரகாமுக்குப் பிறகு, பழைய ஏற்பாட்டில் விசுவாசத்தின் இரண்டாவது பெரிய மனிதனாக மோசே விளங்குகிறார். மோசேயின் சரித்திரக் கதை "ஒரு கிரேக்க நாடகத்தின் கட்டாய முறையில் கூறப்பட்டுள்ளது."[59] மோசேயின் வாழ்க்கையில் முதலில் விவரிக்கப்பட்டுள்ள விசுவாசத்தின் முன்மாதிரியாக, அவனுடைய பெற்றோரான அம்ராம் மற்றும் யோகெபேத் இருந்தார்கள் (யாத். 6:20-ல் இவர்களுடைய பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன). அவர்களுடைய விசுவாசம் மிகவும் தைரியமானதாக இருந்தது. அது பார்வோனுடைய கட்டளைக்கு விரோதமாகச் செயல்பட அவர்களுக்கு உதவியது.

**வசனம் 23. மோசேயின்** தாய் **விசுவாசத்தின்** மூலம் என்ன செய்தாள் என்பதை பழைய ஏற்பாட்டில் வாசிக்கலாம் (யாத். 2:1-10), ஆனால் நிச்சயமாக **அவனது தகப்பனாரும்** விசுவாசமுள்ளவராக இருந்திருக்கக் கூடும்.[60] ஒன்று சேர்ந்து அவனது பெற்றோர் அவனை மறைத்தார்கள்.

தங்கள் மகன், வாழ்க்கையில் ஒரு தெய்வீக நோக்கம் கொண்ட ஒரு பிரத்தியேகமான குழந்தை என்று தேவன் அம்ராம் மற்றும் யோகெபேத்துக்கு வெளிப்படுத்தியிருக்கலாம். எபிரெயர், தங்கள் மக்களுக்கு ஒரு மீட்பர் அனுப்பப்படலாம் என்ற யோசனையுடன் இருந்திருக்க வேண்டும். பெற்றோராக, தங்கள் குழந்தை கொல்லப்பட அனுமதிப்பது, தேவனுடைய சித்தத்திற்கு எதிரானது என்று அவர்கள் அறிந்திருந்தார்கள், மற்றும் அவனைக் காப்பாற்ற தீர்மானித்தனர். "தேவனுடைய பார்வையில் திவ்விய சவுந்தரியமுள்ளவனாயிருந்தான்" என்று நம்முடைய வேத வசனம் அவனைக் குறித்து (அப். 7:20) குறிப்பிடுகிறது.

ராஜாவின் கட்டளைக்கு மோசேயின் பெற்றோர் பயந்து அவனை எகிப்தியருக்கு ஒப்படைத்திருக்க வேண்டும். எனினும், புதிதாகப் பிறந்த ஒரு குழந்தையை வெளியே காண்பித்து மரிப்பதற்கு அனுமதிக்கும்

புறமதப் பெற்றோர்கள் போல் அவர்கள் இருக்கவில்லை. அதற்குப் பதிலாக, அவர்கள் தங்கள் மகனை மிதக்கக்கூடிய ஒரு சிறிய கூடையிலே வைத்தார்கள். இது தேவன் மீதும், மற்றும் அவருடைய பாதுகாப்பின்மீதும் உள்ள நம்பிக்கையின் ஒரு செயலாகும். அவன் ஒரு **அழகிய சிறுவனாக** இருந்தபடியால், அவர்கள் செய்ததைப் போலவே அவர்கள் நடந்துகொண்டார்கள் (யாத். 2:2 ஐ பார்க்கவும்), மற்றும் **அவர்கள் ராஜாவின் அரசாணையைப் பற்றிப் பயப்படவில்லை**. பார்வோனுக்கு அவர்கள் பயப்படவில்லை இது அவர்கள் தேவனைக் கௌரவித்ததை குறிக்கிறது.

யூத சரித்திரத்தில், மோசேயின் அழகு மற்றும் ஞானம் ஆகியவற்றை ஏறத்தாள நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு மிகைப்படுத்தியுள்ளது. "அவன் பிறந்தவுடன் [அவன்] வழக்கத்தை விட அதிகமான ஒரு அழகாகவும், மற்றும் உயர்குடியில் பிறந்த தோற்றமும் கொண்டவராகவும் காணப்பட்டார் என்று ஃபிலோ கூறுகிறார்."[61] அவன் சாதாரணக் குழந்தை இல்லை என்பதை குறிப்பதற்காக "அழகு" என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கலாம். அவன் மேன்மையான நோக்கத்திற்காகப் படைக்கப்பட்டவன் என்பது விளக்குகிறது மற்றும் இதற்கு மேற்பட்டவைகள் அனுமானங்கலாக இருக்கிறது. கற்றுக் கொள்ளும் ஒவ்வொரு காரியங்களிலும் மோசே ஒரு நிபுணராகச் சித்தரிக்கப்படுகிறார்.[62] அவன் தலைமையில் எகிப்திய இராணுவத்தின் தலைமைத் தளபதியாக எத்தியோப்பியர்களுக்கு எதிராக ஒரு பயணத்தை மேற்கொண்டதாக ஜோசப்ஸ் குறிப்பிடுகிறார்.[63] யூபாலெமஸ், ஒரு கிரேக்க வரலாற்று யூத எழுத்தாளர், மோசேயை எழுத்துக்களைக் கண்டுபிடித்தவர் எனப் பெயரிட்டார்.[64]

"நம் மகனை நீரோட்டம் கடலுக்கு கொண்டு சென்றால் என்ன செய்வது? இந்த சிறிய கூடையை காற்று அலைகளை தண்ணீரில் மூழ்கடிந்து விட்டால் என்ன செய்வது?" என்பதாக அம்ராம் மற்றும் யோகெபேத்துக்கு ஆச்சரியமாக இருந்ததா? அவர்கள் விசுவாசத்தோடு செயல்பட்டபோது, அந்த வாய்ப்புகள் அவர்களைத் தொந்தரவு செய்ததாகக் காணப்படவில்லை. இஸ்ரவேலர் ஒரு இரட்சகரை தேடிக்கொண்டிருந்திருக்க வேண்டும், பின்னர் இயேசு வந்தபோது அவர்கள் தங்கள் சந்ததியார் மேல் பிரியமாய் இருந்ததினால், அவர்களுடைய இரட்சகரை எதிர்பார்த்திருந்தார்கள். அவர்களின் விண்ணப்பத்தின் கூக்குரல் கேட்கப்பட்டது, மற்றும் பதில் அளிக்கப்பட்டது (யாத். 3:9).

மோசேயின் பெற்றோருக்கு தேவன் மீதுள்ள ஒரு வலுவான, நிரந்தரமான விசுவாசத்தின் கூறுகளைப் பற்றி, இந்தச் சுருக்கமான குறிப்பில் நாம் காண்கிறோம். அது தேவனால் வழங்கப்பட்ட சாத்தியங்களைக் கண்டறிந்த ஒரு விசுவாசமாயும், ராஜாவின் ஆணை இருந்த போதிலும் தைரியமாகச் செயல்படும் ஒரு விசுவாசமாயும்,

மற்றும் தேவனின் ஏற்பாட்டில் நம்பிய ஒரு விசுவாசமாயும் இருந்தது.

மோசேயின் பெற்றோரின் விசுவாசம், அவன் வளர்ந்த பொழுது அவனது நம்பிக்கையாக மாறியது. மோசேயின் விசுவாசத்தின் ஐந்து வெவ்வேறு சம்பவங்களை இந்த வசனம் குறிப்பிடுகிறது.

**வசனம் 24.** மிகப் பெரிய தேசத்தில் ஒரு இளவரசன் என்று பின்னர் அறியப்பட்டு வாழ்வதை மோசே தேர்ந்தெடுத்திருக்கலாம், ஆனால் அவன் அவ்வாறு செய்யவில்லை. **விசுவாசத்தினாலே மோசே, அவன் வளர்ந்த போது, பார்வோனின் குமாரத்தியின் மகன் என்று அழைக்கப்படுவதற்கு மறுத்துவிட்டான்.** "மறுத்தல்" என்பதற்கான கிரேக்கச் சொல் (குறிப்பாகக் கிரேக்க மொழியில்) இறந்த காலத்தைக் குறிப்பதாக இருக்கிறது. மேலும் எகிப்தை நிராகரிக்கும் ஒரு குறிப்பிட்ட செயலைக் குறிக்கிறது.

இதை தேர்வு செய்வதன் மூலம், மோசே எதை மறுக்கிறார்? பார்வோன் தட்மோஸ் I-ன்[65] ஒரே மகள், ஹட்செப்ஸூட்டின் சுவீகாரப்புத்திரனாக மோசே இருந்தான், மற்றும் அவள் நீண்ட காலத்திற்கு முன்பே திருமணம் செய்துகொண்டிருந்த போதிலும் அவளுக்கு எந்தக் குழந்தையும் பிறக்கவில்லை என்று சில எழுத்தாளர்கள் கருதுகின்றனர். மோசே பார்வோன் குடும்பத்தில் இருந்திருந்தால், எகிப்தின் மகுடம் மோசேக்கு வழங்கப்பட்டிருக்கும் என்பது சாத்தியமாய் இருக்கிறது.

**வசனம் 25.** புறக்கணித்துவிட்டு எகிப்தில் இருந்து செல்வது, தகுந்த எண்ணம் இல்லாமல் முடிவு செய்யப்படவில்லை, ஆனால் அது ஒரு மாற்ற முடியாத முடிவாக இருந்தது. பார்வோனுடைய வீட்டிலே அவனது நிலையை விட்டுக்கொடுத்ததே, மோசே **தேவ ஜனங்களுடன் அன்பின்றி நடத்தப்படுதலை சகித்துக்கொள்ளத்** தேர்ந்தெடுக்கப்பட்டான். மோசேயின் நாட்களில், அடிமைகள்மீது மிகவும் தாக்குதல் நடத்துதல் மற்றும் அவமதிப்பு செய்தல் கடுமையாக இருந்தது. இயேசுவைப் போல, மோசே ஏழைகள்மீது இரக்கமுள்ளவனாகவும், மற்றும் அவனது மக்கள் மத்தியில் துன்பம் அனுபவித்தவனாயும் இருந்திருக்க வேண்டும்.

மோசே தனது தீர்மானத்தை நிறைவேற்றியதில், எகிப்தின் செல்வத்தை "தேவனுடைய அபிஷேகத்தின் மீதான களங்கத்துடன்" ஒப்பிட்டான் (NEB). இஸ்ரவேல் மக்கள் "தேவனால் அபிஷேகம்" பண்ணப்பட்டவர்களாய் இருந்தார்கள், ஆனால் *christos*, கிறிஸ்டோஸ் என்ற வார்த்தை, கிறிஸ்துவைத் தவிர வேறொருவருக்கும் இங்கேயோ அல்லது வேறு எங்குமோ எபிரெயர் நிருபத்தில் பயன்படுத்தப்படவில்லை என்று இது கூறுகிறது. சொற்றொடர் "தெரிந்தெடுக்கப்பட்ட மக்களை" குறிக்கிற ஒன்றென்றால், பின்பு மோசே அவர்களுடன் பாடுபடுவதைத் தேர்ந்தெடுத்தான் என்று வசனம் பொருள்படுகிறது. பின்வரும் நூற்றாண்டுகளில், தேவனால்

நியமிக்கப்பட்ட (அல்லது “அபிஷேகம் பண்ணப்பட்ட”) மற்ற தூதர்கள் பாடுபடப்போவதைப்போல, அவனும் பாடுபட்டிருக்க வேண்டும். “கிறிஸ்துவோடு” அவன் சேர்ந்துகொண்டது சிறந்த பதிப்பாகக் காணப்படுகிறது. மேசியாவின் துன்பமானது, அவமானத்தின் உச்சத்தின் அடையாலம். யூத கிறிஸ்தவர்களின் உறுதிப்பாடு, வலிமையை இழக்கும் ஆபத்தில் இருந்தது, ஏனென்றால் கிறிஸ்துவோடு இணைந்த களங்கம், மோசேயின் தேவனைப்பற்றிய பக்திவைராக்கியத்தை வாசிப்பதன் மூலம் மிகவும் ஊக்கமளிக்கும்.

**பாவம் நிறைந்த இன்பமயங்களுக்கு** இரையாகிவிடுவது எளிதாக இருக்கிறது. மேலும், உங்களில் ஒருவனாகிலும் “பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகலாம்” (எபி. 3:13). எகிப்தை அல்லது இஸ்ரவேலரை வழிநடத்தும் முடிவு மோசேயின் கையில் இருந்தது, மற்றும் அவன் இஸ்ரவேலரை வழிநடத்துவதைத் தேர்வு செய்தான். “யோசேப்பு இந்த நாட்டில் ஆட்சிக்கு வந்தான், அவன் மரிக்கும் வரை இங்கேயே இருந்திருக்கிறான். அவன் தேவனையும், மற்றும் அவருடைய ஜனங்களையும் நன்கு சேவித்தபடியால், நானும் ஏன் அவ்வாறு செய்ய முடியாது?” என்று அவன் நியாயப்படுத்தியிருக்கலாம். ஆனால், மோசே அப்படி நினைத்திருந்தால், விசுவாசத்தின் காரணமாக தெளிவாக அவன் அதை மனதில் இருந்து தள்ளிவிடுவான் எனத் தெரிகிறது. எகிப்தின் தற்காலிக செழிப்பு மற்றும் ஒழுக்கங்கெட்ட வாழ்க்கைமுறை ஆகியவற்றை போதுமான அளவு அவன் பார்த்திருந்தான்.

**வசனம் 26. எகிப்தின் பொக்கிஷங்களைக்** காட்டிலும், மிக உயர்ந்த மதிப்புடையதாக தேவனுடைய காரியங்களை மோசே **கருதி**[னான்].[66] எகிப்தின் செல்வம் ஏற்கனவே புகழ்பெற்றது. 1922 ஆம் ஆண்டு, ஆறு வருடங்களாக தோண்டி எடுக்கப்பட்ட பிறகு, ஹோவர்ட் கார்ட்டர் மற்றும் லார்ட் கார்னர்வோன் ஆகியோரால் ராஜா டூட்டன்ஹாமென் கல்லறையில் இந்த பெரும் செல்வத்தில் சில கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கல்லறை கிட்டத்தட்ட 3,500 ஆண்டுகளுக்கு மூடப்பட்டு கிடந்தது. இறுதியாக, இந்த அரிய கண்டுபிடிப்பு, இளமையான ராஜாவை அடக்கம் செய்த பூ வேலைகள் செதுக்கப்பட்ட தங்கப் பிரகாசம் கொண்ட பழங்கால கல் சவப்பெட்டி மற்றும் குறிப்பிடத்தக்க பெரும்பாலும் மிகுதியான எண்ணற்ற மற்ற பொருட்களையும் வெளிப்படுத்த திறக்கப்பட்டது. கல்லறையிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு தங்க முகமூடி, உலகின் மிக அழகான பொக்கிஷங்களில் ஒன்றாக இருக்கிறது. சிறுவயது ராஜாவின் சரீரம், ஒன்றினுள் ஒன்று வைக்கப்பட்ட, இரண்டும் திட தங்கத்தால் செய்யப்பட்ட பெரிய பூ வேலைகள் செதுக்கப்பட்ட பழங்கால கல் சவப்பெட்டிகளினுள் இருந்தது! ராஜா டட், பதினெட்டு வயதில் அல்லது பத்தொன்பது வயதில் மரித்தார்; ஆனால் அவருடைய கல்லறை, பூர்வ எகிப்தின்

செல்வத்தை சக்திவாய்ந்த விதத்தில் விளக்குகிறது என்பதே, அவர் பிரபலமாக அறியப்படுவது போல், அவரை விட முக்கியமானது ஆகும்.

மோசே மற்றும் ராஜா டட் நூறு ஆண்டுகள் மட்டுமே உள்ள இடைவெளியில் வாழ்ந்து வந்தனர். டட் அவரது செல்வத்தின் நினைவாக வாழ்ந்தார்; மோசே தேவனின் நினைவுகளிலும், மற்றும் எல்லா நேரத்திலும் விசுவாசத்திலும் வாழ்ந்தான். மோசே தாழ்மையுள்ள இஸ்ரவேலை வழிநடத்தும் பாதையை தேர்ந்தெடுத்தான், ஏனென்றால் அது தேவனுடைய வழியாக இருந்தது. ராஜா டட் -ன் வாழ்க்கை, புகழ் மற்றும் செல்வம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும்தான் என்று அறிவிக்கிறது. எகிப்தின் செல்வமும் வல்லமையும் அழிந்து போயின; ஆனால் தேவனின் செல்வமும் வல்லமையும் என்றும் நிலைத்திருக்கும். பூமிக்குரிய செல்வத்தின் இச்சை, அடிமைப்படுத்துவதாயும், மற்றும் அழிந்து போவதாயும் இருக்க முடியும். மோசே ஏராளமான ஒடுக்கப்பட்ட மக்களோடு பகிர்ந்துகொள்வதைத் தெரிந்துகொண்டும், மற்றும் முழுவதும் அவர்களது பாடுகளின் மத்தியில் அவர்களுக்குள் ஒருவனானான்.

**கிறிஸ்துவின் நிந்தை** என்பது, கிறிஸ்து தம்முடைய சொந்த ஜனங்களால் உண்டான நிந்தையை தாங்கக் கூடிய அதே மாதிரியான நிந்தை எனப் பொருள்படக்கூடும் (பார்க்க 13:13). ஓரளவிற்கு, ஒவ்வொரு பரிசுத்தவானும் அதைத் தாங்க வேண்டும் (2 தீமோ. 3:12). எபிரெயருக்கு எழுதிய நிருபத்தை பெற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவுக்கு விசுவாசமாக இருந்ததால், பாடுகளை அனுபவித்தார்கள் என்பதால், மோசேயின் முன்மாதிரியானது அவர்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருந்தது.

மோசேயின் சிறந்த ஊழியமானது, கிறிஸ்துவை நோக்கி வழிநடத்துவதாயும், மற்றும் கிறிஸ்துவை சுட்டிக்காட்டுவதாயும் இருந்தது. கிறிஸ்துவின் செயலுடன் தொடர்புடையதான ஒருவித வெளிப்பாட்டை மோசே பெற்றிருந்தான் என்பதை இது குறிக்கிறது. இந்த சவாலை ஏற்றுக்கொள்வதில், மோசே தேவ ஜனங்களுடனும், குறிப்பாக கிறிஸ்துவின் அவமானத்துடனும் அவர் பின்னர் பட போகிறபாடுகளை அடையாளப்படுத்தி காட்டினார்.[67] அவன் “கிறிஸ்துவின் நிந்தையை” மிகவும் மதிப்புமிக்கதாகக் கருதினான் என்பது இதன் அர்த்தமாக இருக்கலாம். வரப்போகிற மேசியாவைப் போலவே அவன் இருந்தான் என்பது அவனக்குத் தெரியாது என்றாலும், பின்னர் அவன் கற்றுக்கொண்டான் (உபா. 18:15-18). ஆபிரகாம் கிறிஸ்துவை அறிந்திருந்தால் (யோவான் 8:56), மோசேயும் மேசியாவைப் பற்றி நிச்சயமாக அறிந்திருப்பான். ஒருவேளை, பவுலைப் போலவே, மற்றவர்களுக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்கு நஷ்டமென்று அவன் எண்ணினான் (பிலி. 3:7-10). மோசே

அறிந்ததையும், மற்றும் யோபு கண்டதையும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அது "துன்மார்க்கனின் கெம்பீரம் குறுகினது என்பதும், மற்றும் மாயக்காரனின் சந்தோஷம் ஒரு நிமிஷம்மாத்திரம் நிற்கும் என்பதும்" ஆகும் (யோபு 20:5).

மோசேயின் தீர்மானத்தில், நாம் உந்துதலைக் காண்கிறோம்: **அவன் பலனுக்காகக் காத்திருந்தான்.** "பலன்" என்ற வார்த்தை, கிரேக்க வார்த்தையான (μισθαποδοσία) மிஸ்தாபோடோசியா-ல் இருந்து வருகிறது, மற்றும் இது 2:2 மற்றும் 10:35 ஆகியவற்றிலும்கூட காணப்படுகிறது. இது எபிரெயர் நிருபத்தில், ஒரு முக்கியமான சிந்தனையை பிரதிபலிக்கிறது, அதாவது "பலன்" அல்லது "தண்டனை" என்று பொருள்படுகிறது. KJV, "பலனுக்கேதுவான" என மொழிபெயர்க்கிறது.

மோசே, தான் எதை தேர்வு செய்ய வேண்டும் என்று பார்த்தபோது, அவன் எதிர்கால பலனை, பூமிக்குரிய செல்வத்தைவிட சிறந்ததாகக் கண்டான், மற்றும் அது எகிப்தின் செல்வத்தையும் வல்லமையையும் நிராகரிப்பதற்காக அவனுக்கு வழி வகுத்திருக்கலாம். மேலும் தற்காலிக ஆபத்துக்கள் மற்றும் நிந்தைகள் அனைத்தையும் ஈடுசெய்யும் என்று நம்பினான். எகிப்தியனை கொன்றுவிடுவதற்கு முன்பேகூட, அவன் இந்த முடிவை எடுத்திருக்கலாம்.

**வசனம் 27. ராஜாவின் கோபத்திற்குப் பயப்படாமல்** என்று சொல்வது, யாத்திராகமம் 2:11-15-ல் சொல்லப்பட்டுள்ள எகிப்தியனைக் கொன்றபின், மோசே தப்பியோடினான் என்பதற்கு முரணாகத் தெரிகிறது. எகிப்துக்கு பதிலாக தேவனை சேவிப்பதற்கான விருப்பத்தை பற்றி அவன் பயப்படவில்லை என்றாலும், அவன் தன்னுடைய சொந்தப் பாதுகாப்பிற்காக அஞ்சியிருக்கலாம்.[68] "அவன் பயந்திருந்தான் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அவன் எகிப்தை விட்டுச் சென்றதற்கு இது காரணமல்ல; இது ஒரு விசுவாசமுள்ள செயலாக இருந்தது."[69] அவனை எங்கும் கண்காணிக்கவும் மற்றும் அவனைக் கொல்லவும் கூடிய வல்லமை உள்ள வெறுக்கத்தக்க ஒரு ராஜாவின் கோபத்திலிருந்து தப்பி ஓட பெரும் தைரியம் தேவைப்பட்டது; ஆனால் அவனுடைய விசுவாசமும்கூட, அவனுடைய தைரியத்தைவிட மிக முக்கியமானது. விசுவாசத்தினால் அவன் செயல்பட்டதால், தேவன் அவனைக் காப்பாற்றினார். "மோசே எகிப்தைவிட்டு வெளியேறியபோது, ஒரு சுயதேசம் இல்லாமல் பூமியில் நாடோடிகளாகத் திரிந்த தனது முன்னோர்களை போல இருந்தனர்."[70] காலப்போக்கில், இஸ்ரவேலின் தேவன் மீதான விசுவாசம் முழுமையாக வளர்ந்தது, மற்றும் அவனுடைய பயம் குறைந்துவிட்டது.

மோசே தனது முதல் பயணத்தில், ராஜாவிற்கு பயப்படவில்லை என்பது திட்டமிடப்பட்டது போல் தெரிகிறது என்று காண்பிக்க வாதங்கள் வழங்கப்பட்டன. இருப்பினும், வசனம் கூறுவது போல,

இந்த விட்டுச்செல்லுதல் விசுவாசத்தின் ஒரு செயல், பின்பு அவன் விட்டுச் சென்றான், ஏனென்றால் அவன் எதை விசுவாசித்தானோ, அதை எதிர்கால பயன்பாட்டிற்காக தேவன் அவனுக்காக வைத்திருந்தார். தேவனைச் சேவிப்பதற்கான அவனுடைய ஆசையைவிட, அச்சம் எதுவாக இருந்தாலும், குறைந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

இரண்டு சந்தர்ப்பங்களில் மோசே எகிப்தை விட்டு வெளியேறினான் என்பதால், மோசேயின் அச்சம் குறித்த வெளிப்படையான முரண்பாட்டைக் கண்டறிந்து அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காக, ஒரு மாற்று பார்வை முன்மொழியப்பட்டது. அவன் ஒருமுறை பார்வோனுக்குப் பயந்து வெளியேறினான் (யாத். 2), ஆனால் மற்றொருமுறை, அவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து வழிநடத்திய சமயமாய் இருந்தது (யாத். 13). யாத்திராகமத்திற்கு தொடர்பான இந்த நிகழ்வுகள், எபிரெயர் 11 இன் கணக்கில் காலவரிசைப்படி பட்டியலிடப்பட்டிருந்தால், 27 ஆம் வசனத்தின்படி, வெளியேறியது கானானுக்கு அல்ல, மீதியானுக்கே ஆகும்.[71] இருப்பினும், இந்த வசனம் அதிகமாக யாத்திராகமத்தைக் குறிப்பதாய் இருக்கிறது.[72]

அவன் பார்வோனுக்கு முன்னால் போவதற்கு தகுதியற்றவனாக இருப்பதாகக் கூறினாலும் (யாத். 4:10), மோசே உடனடியாக நீதிமன்றத்தின் பேச்சுத்திறமையையும் மற்றும் அதை பயன்படுத்தும் தைரியத்தையும் மீண்டும் பெற்றுக்கொண்டான். வனாந்திரத்தில் அவனுடைய நாற்பது ஆண்டுகளில், அவன் தன்னுடைய ராஜ திறமைகளை கிட்டத்தட்ட மறந்துவிட்டான், ஆனால் விரைவில் அவன் பார்வோனுக்கு முன்பாக பயப்படாமல் இருக்குமாறு மாறிவிட்டான் (யாத். 5-12). பார்வோனைக் கண்டு பயப்படாமல், மெய்யாக **விசுவாசத்தினால்** [அந்த] **அவன் எகிப்தை விட்டு வெளியேறியது**, இரண்டாவது முறையாக இருந்தது. அவன் செங்கடலைக் கடந்து, தேவனை வணங்கும்படி வனாந்திரத்திற்குள் நுழைந்தான்.

மக்கள் வெகுஜனமாக வெளியேறிய சமயத்தில், ராஜாவின் பெருங் கோபத்தை பழைய ஏற்பாடு குறிப்பிடவில்லை, ஆனால் அடிமைகள் அவர்களை விட்டுச்சென்றபோது, அவன் பின்தொடர்ந்தான் என்றும், மற்றும் அவர்கள் புறப்படுவதன் மூலம், ராஜாவின் விருப்பங்களை அவர்கள் மீறியதாக தெரிவிக்கிறது (யாத். 14:5-9). இந்த நேரத்திலும் கூட, மோசே சகித்துக்கொண்டான். விசுவாசத்தினால் அவன் "சகித்ததிலிருந்து," அவன் மக்களை வழிநடத்தினான். சில நேரங்களில், அவன் கிட்டத்தட்ட தனியாக தேவனுடன் நன்றாக நிலைத்து இருந்தான்.

**காணாதவரைக் காண்பதாக** அவன் நினைவுபடுத்துகிறான் என்பதே, அவனுடைய சகிப்புத்தன்மைக்கு ஒரு காரணமாய் இருந்தது.

முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்த அனுபவத்தின் விளைவாக, மோசே தேவனைப் "பார்த்தான்" (யாத். 3:2-6). யாத்திராகமம், மோசேக்கு தேவனுடனான விசேஷ உறவை, ஒரு சிநேகிதனைப்போல "முகமுகமாய்" என்பதாக, அடிக்கடி குறிப்பிட்டுள்ளது (33:11; பார்க்க எண். 12:7, 8).

மோசே, "கர்த்தருடைய தூதனானவர்" என அழைக்கப்படும் ஜீவாலித்து எரிகிறதும் வெந்து போகச்செய்யாததுமான அக்கினியை பார்த்தான் (யாத். 3:2). அவன் பார்த்தது, தேவனின் வெளிப்பாடாக இருந்தது, பின்பு அவர் தேவனாக இல்லை. எனினும், இந்த பகுதி, மோசே தேவனை நோக்கிப்பார்க்கப் பயந்ததினால், தன் முகத்தை மூடிக்கொண்டான் என்று விளக்குகிறது (யாத். 3:6). மோசே தேவனின் ஒரு சிறப்பு வெளிப்பாட்டை காண அனுமதிக்கப்பட்டான், ஆனால் பெரிதளவில் தேவனின் "முகத்தை" எவரும் பார்க்க முடியாது. யோவான் அப்போஸ்தலன் மோசேயின் அனுபவத்தை நிச்சயமாக அறிந்திருந்தான், மற்றும் அவன் "தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்" என்று எழுதினான் (யோவான் 1:18). மோசே பார்த்தது தேவனின் "ஒரு பகுதியாக" இருந்தது (யாத். 33:20-23), ஒரு "தெய்வீக மகிமையின் பின்ஒளிர்வு, அதன்மூலம் பேச" முடியும்.[73] இந்தக் காட்சியை, இரவில் ஒரு ஜெட் என்ஜினில் இருந்து எரியும் நெருப்பிற்கு ஒப்பிடப்படலாம். ஒருவன் நெருப்பைக் காணலாம், ஆனால் உண்மையில், முன்னோக்கி விமானத்தை நகர வைக்கும் இயந்திரத்தில் உள்ள சக்தியை பார்க்க முடியாது. தேவனை விவரிக்க எந்த மேற்கோளும் போதுமானதாக இல்லை, ஆனால் ஒருவேளை இந்த யோசனை பயனுள்ளதாக இருக்கும்.

மோசேயின் முட்செடி எரியும் அனுபவத்தை 27-ம் வசனம் குறிப்பிடுவதில்லை என்பது மற்றொரு வாய்ப்பாக இருக்கிறது. நிருபத்தின் ஆசிரியர் "காணப்படாதவைகளின் உறுதியானது" என்பதை, "விசுவாசத்தினாலே" மோசேக்கு காணப்படுவதைப் பற்றி எளிமையோடு சிந்தித்திருக்கலாம் (11:1).

**வசனங்கள் 28, 29.** பஸ்காவை ஆசரிப்பதற்காக எபிரெயரை மோசே வழிநடத்தியபோது, தேவனுடைய சித்தத்தின்படி அவன் செயல்பட்டான் (வசனம் 28). வரவிருக்கும் வெள்ளம் குறித்து அவன் எச்சரிக்கப்பட்டபின், நோவாவைப் போலவே அவன் இருந்தான்; அதாவது, அவன் வருவதைப் பற்றிய எந்தவிதமான சரீர சம்பந்தமான சான்றையும் காண முடியவில்லை என்றாலும் கூட, தேவனுடைய கட்டளைக்கு இசைவாக, ஒவ்வொருவரும் முழுமையாக பதிலளித்தார்கள். **விசுவாசத்தினால்** [மோசே] **பஸ்காவை அனுசரித்தான்**, அல்லது அதை "நிறுவினான்" (பின் குறிப்பாக ASV-ல் குறிப்பிடப்பட்டுள்ளது உள்ளது). "வைத்து" என்ற வார்த்தை

போயியோ (ποιέω, *போயியோ* "தயாரிக்க" அல்லது "செய்ய") என்பதாகும். ஆனால் இந்த சூழலில் "நிறுவ" என்று பொருள்படும்.[74] பஸ்கா துவங்கி விட்டது, மற்றும் எபிரெயர் நிருபம் எழுதப்படுகிற காலம் வரைக்கும் அது தொடர்ந்து அனுசரிக்கப்பட்டது என்பதை இது குறிக்கிறது.

பஸ்கா பலியானது மனிதனால் உருவாக்கப்பட்டது அல்ல. இது ஒரு ஆட்டுக்குட்டியை அடித்து, அதன் **இரத்தத்தை தெளித்தும்**, மற்றும் அதன் மாமிசத்தை உண்ணுவதற்கும், இஸ்ரவேலரின் தலைப்பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்கும் வெளிப்படையான தொடர்பு இருக்காது. மோசே வெறுமனே தேவனுடைய கட்டளைகளைக் குறித்து, அவருடைய வார்த்தையை எடுத்துக்கொண்டான். என்ன செய்ய வேண்டும் என்பதை, மக்களிடம் அவன் சொன்னான், மற்றும் கீழ்ப்படியும் விசுவாசத்தின் காரணமாக, **தலைப்பிள்ளை** எல்லாம் காப்பாற்றப்பட்டன. கிறிஸ்துவின் பலி பஸ்காவுக்கு மாதிரியாக இருக்கிறது. கிறிஸ்துவே நமது பஸ்கா ஆட்டுக்குட்டி (வசனம் 28; 1 கொரி. 5:7).

பழைய ஏற்பாட்டில் "மரண தூதனைப்பற்றி" குறிப்பிடப்படவில்லை. யாத்திராகமம் 12:11-14ல் குறிப்பிடப்பட்டுள்ள "தேவதூதனைப்" போல் எங்கும் குறிப்பிடப்படவில்லை; அங்கே தோன்றிய சங்காரக்காரன், தேவனாய் இருந்துள்ளார். வசனம் 13 கூறுகிறது, "நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்துதேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்." யாத்திராகமம் 12:23 ஆனது, ஒரு "சங்காரக்காரனையே" குறிக்கிறது; அவன் வெளிப்படையாக தேவன் இல்லை. இருப்பினும், தேவதூதர்கள் தேவனுடைய கட்டளையின்படி செய்கிறார்கள், மேலும் அவர் எதையும் செய்யவும் சொல்லவும் முடியும் (யாத். 22:15-18). எகிப்தில் மரணம் நேரிட்டபோது, இஸ்ரவேலர் தகுந்த பாதுகாப்பில், சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். **விசுவாசத்தினால்தான்** இஸ்ரவேலர் காப்பாற்றப்பட்டார்கள் (வசனங்கள் 28, 29).

அநேகமாக மக்கள் சாப்பிட்டு முடித்தவுடன், அவர்களுக்கு பார்வோனிடமிருந்து புறப்படுமாறு கட்டளை வந்தது (யாத். 12:29-32). சீக்கிரத்தில், மக்கள் **செங்கடலை** அடைந்தனர் (வசனம் 29), அது இலக்கியரீதியாக, எபிரேய மொழியில் "நாணல்களின் கடல்" எனப்படும். பெயரைக் குறிப்பிட்டு, இந்த வாக்கியம் LXX ல் "செங்கடல்" என மாற்றப்பட்டது.[75] பார்வோன் இராணுவம் இஸ்ரவேலரை பிடிக்க வந்த போது, அவர்களுடைய அழிவு தவிர்க்க முடியாதது. அதாவது கர்த்தர் அவருடைய இரட்சிப்பை மீண்டும் அளிக்கும்வரை இது தவிர்க்க முடியாததாக இருக்கிறது (யாத். 14:10-14).

தேவன் சமுத்திரத்தை **வறண்ட நிலமாக** ஆக்கினார் (யாத். 14:16). ஜனங்களுடைய விசுவாசம் பலவீனமாக இருந்தபோதிலும், அவர்கள் இன்னும் உலர்ந்த தரையில் சமுத்திரத்தின் வழியாக அணிவகுத்துச் சென்றனர். முன்னோக்கிச் செல்லுங்கள் என்ற தேவனுடைய கட்டளையாலும், மற்றும் விசுவாசத்தாலும், அவர்கள் செயல்பட்டனர். விசுவாசத்தினாலும், மற்றும் **கடந்து சென்றதாலும்**, அவர்கள் கர்த்தருடைய மீட்பினை அறிந்துகொண்டார்கள். அவர்கள் விசுவாசத்தினாலே மீட்க்கப்பட்டு, அந்நாளிலே காக்கப்பட்டார்கள், அதே சமயத்தில், ஒவ்வொரு **எகிப்திய** படைவீரனும் **மூழ்கடிக்கப்பட்டான்** என்பதை கவனிக்க வேண்டும் (யாத். 14:28, 30). எகிப்தியர் பார்வையினால் மட்டும் நடந்தார்கள்; கடல் திறந்திருந்ததை அவர்கள் பார்க்க முடிந்தது. தேவனிடமிருந்து ஒரு வார்த்தையும் வராமல், துணிகரமாக அவர்கள் முன்னோக்கிச் சென்றார்கள்; இவ்வாறு செயல்படுவதற்கு, எந்தவிதமான மெய் "விசுவாசமும்" அவர்களுக்கு இல்லை. அவர்கள் அனைவரும் மூழ்கடிக்கப்படுவதே இயற்கையான விளைவாக இருந்தது.

## ராகாப் மற்றும் இஸ்ரவேலரின் விசுவாசம் (11:30, 31)

**[30]விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழுநாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது. [31]விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள்.**

**வசனம் 30.** வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை வெற்றிகரமாக சுதந்தரித்ததை பார்க்கும்போது, இஸ்ரவேலரின் **விசுவாசம்** மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த அத்தியாயம், இஸ்ரவேல் கோத்திரமானது தேவன் கட்டளையிட்டதைச் செய்ய, ஒன்றுபட்ட ஒரு விசுவாசத்தில் ஒன்றாக இணைந்திருந்ததை சித்தரிக்கிறது.

அணுகுமுறைப் பாணியில், எபிரெயர் நிருபத்தில் 11:29-38 வசனங்கள், மிகவும் அழகான மற்றும் மிகவும் உருக்கமான பத்திகளில் ஒன்று என குறிப்பிடப்பட்டுள்ளது. விசுவாசமானது, "ஒருவனை எப்போதும் முன்னோக்கியே இயக்குகிறது, பின்வாங்கலின் பெருவாழ்வினை, அது அனுமதிக்காது" என்பதை நமக்குக் காண்பிக்கிறது.[76]

வசனம் 29ன் விளக்கத்தின் அடிப்படையில் இந்த வசனம் மிகப் பெரியதொரு வேறுபாட்டைக் காட்டுகிறது. எகிப்தியர்கள் மூழ்கியிருந்தாலும், இஸ்ரவேலர்கள் கடல் வழியாக கடந்துசென்றதையும், காப்பாற்றப்பட்டதையும் இந்த நிருபத்தின் ஆசிரியர் சரியாக குறிப்பிட்டுள்ளார். இந்த சம்பவம், இஸ்ரவேலில் ஒரு தேசிய சரித்திரமாக மாறியது; வருடங்கள் கழித்து, சங்கீதங்களாக அது

நினைவுகூரப்பட்டது (78:13; 135:8, 9; 136:10-15).

விசுவாசத்தினாலே எரிகோவைச் **சூழ்ந்துகொண்ட** நீதிமான்களுக்கும், மற்றும் உள்ளே அழிந்துபோன அவிசுவாசிகளிடையேயும் இரண்டாவது வேறுபாடு ஒன்று காணப்பட்டது (வசனங்கள் 30, 31). சிதறிக்கிடந்த இரத்தம், தலைப்பிள்ளைகளின் உயிர்களை காப்பாற்றுவதை விட அதிகமாக, அணிவகுத்துச்செல்லுதல் மற்றும் ஆர்ப்பரித்தல் வலுவூட்டப்பட்ட மதில்கள் வீழ்த்தாது. விசுவாசத்தினால், இஸ்ரவேலர் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தார்கள், மற்றும் அவர் செய்யப்போவதாக வாக்குறுதி அளித்தபடி, அவர் அவர்களை ஆசீர்வதித்தார்.

**எரிகோவின் மதில்கள்** கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தால் **சரிந்தது**. இஸ்ரவேலரின் திரள் கூட்டத்தினரைக்கொண்டு எவ்வளவாய் அணிவகுத்துச் சென்றாலும், அத்தகைய சுவர்களை வீழ்ச்சியடையச் செய்திருக்க முடியாது. ஒரு பாலத்தை கடக்கும் வீரர்களால், அந்த பாலம் குலுக்கல் மற்றும் வீழ்ச்சி அடையாமல் இருக்கவும், மற்றும் படிக்கட்டு உடையாமல் இருக்கவும் ஒரு தளத்தை உருவாக்குவதைத் தடுக்க வேண்டும், ஆனால் அலங்கங்கள் அவைகளைச் சுற்றி அணிவகுத்துச் செல்வதாலோ, அல்லது தரையின்மீது மிகுந்த அல்லது ஆரவாரத்துடன் நடந்து செல்லுவதாலோ விழுவதில்லை (யோசுவா 6).

அப்போஸ்தலர் 21:38ல் குறிப்பிடப்பட்டுள்ள எருசலேமின் மதில்கள் அவருடைய வார்த்தையினால் விழுந்துபோயிற்று, ஆனாலும் அவைகளின்படி செய்யாதிருந்தார்கள் என்று ஒரு எகிப்திய எழுச்சியாளர் கூறினார்.[77] அது இராணுவத்தின் இடிபாடுகள் அல்ல, ஆனால் இஸ்ரவேல் ஜனங்கள் **ஏழு நாட்களுக்குப்** பட்டணத்தைச் சுற்றி நடந்தபோதும், மற்றும் மகா ஆரவாரத்தோடே முழங்கியபோதும், தேவன்மீது உள்ள விசுவாசமே, எரிகோவின் அலங்கம் இடிந்து விழுவதற்கு காரணம் ஆயிற்று (யோசுவா 6:1-5, 12-20). ஏழு நாட்களும் அணிவகுத்து சுற்றி நடந்தபோது, குடியிருப்பவர் அவர்களை நிந்தித்தார்கள், ஆயினும் என்ன நடந்தது என்பதைப் பொறுத்து, அவர்களுடைய விசுவாசம் பெரிதாகிவிட்டது. பிரதான உலக மதங்களைக் காட்டிலும், மத நம்பிக்கைகளை வைத்திருக்கும் பொல்லாதவர்களுடைய அக்கிரமம் முடிந்தபோது, எரிகோவின் வெற்றி அவர்களிடமிருந்து வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை இஸ்ரவேலர் சுதந்தரித்துக்கொள்வதற்கு தேவனின் முத்திரை ஒப்புதல் வைக்கப்பட்டது (ஆதி. 15:13-16).

எரிகோவை வெல்வது, முழு முகாமிற்கும் பெரும் உற்சாகத்தை அளித்திருக்க வேண்டும். இஸ்ரவேல் ஜனங்களுக்கு தெய்வீக உதவியின்றி இருந்திருந்தால், கனமான அலங்கங்கள் மற்றும் வலிமைமிக்க வீரர்களுடன், அது அவர்களுக்கு வல்லமைமிக்க எதிரியாக இருந்திருக்கும்.[78] கானானின் உள் பள்ளத்தாக்குகளைக்

கைப்பற்றும் முன், எரிகோவின் இராணுவ முகாம் தோற்கடிக்கப்பட வேண்டியிருந்தது. அலங்கங்கள் விழுந்தவுடன், இஸ்ரவேல் ஜனங்கள் விரைவாக சென்று முழு பூமியையும் கைப்பற்றுவதற்கு போதுமான விசுவாசம் இருந்திருக்க வேண்டும்.

**வசனம் 31. ராகாப் என்னும் வேசி**, இஸ்ரவேல் வேவுகாரர்களிடம் குற்றத்தை ஒத்துக்கொண்டு, தன் விசுவாசத்தை வெளிப்படுத்தினாள். அந்த விசுவாசம் நேரிடையாக அடையப் பெறாத தகவலிலிருந்து மட்டுமே வந்தது, ஆனால் தேவனாகிய கர்த்தரே "உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்" என்பதை அவள் நம்பினாள் (யோசுவா 2:8-11; 6:22-25). அந்த அறிக்கை, பொதுவாக எரிகோவின் மக்கள் நம்பியிருந்த அனைத்திற்கும் முரண்பட்டது. அவளுடைய விசுவாசம், வேவுகாரர்களைப் பாதுகாப்பதற்கும், மற்றும் அவர்கள் புறப்படுவதைப் பற்றி பொய்யுரைப்பதற்கும் அவளை வழிநடத்தியது; அது அவள் குடும்பத்தை காப்பாற்றுவது பற்றி வழிவகுக்கவும், மற்றும் அது அவளுடைய இரட்சிப்பிற்கும் வழிநடத்தியது. எரிகோ மக்களின் கீழ்ப்படியாமை, அவர்கள் ஆட்சி தூக்கியெறியப்பட வழிநடத்தியது. அந்த விசுவாசத்தால் அவளுடைய வாழ்க்கை மாறியது, அது கீழ்ப்படிதலுடன் அவளது நியாயப்படுத்தலுக்கு வழிவகுத்தது (யாக். 2:25). பின்பு ராகாப், சல்மோனின் மனைவியும் போவாஸின் தாயும் ஆனாள், மற்றும் போவாஸ், ஈசாயின் தந்தை ஓபேதைப் பெற்றவன். எனவே, அவள் தாவீது ராஜாவின் மகா பெரும் பாட்டியாகவும், மற்றும் கடைசியில் மேசியாவின் மூதாதையராகவும் இருந்தாள் (மத். 1:5, 6). இஸ்ரவேலரோடு தேவன் இருந்த அறிக்கையை, எரிகோவில் உள்ள மற்ற ஜனங்கள் நம்பவில்லை; இதன் ஒரு விளைவாக, அவர்கள் அழிந்து போனார்கள்.

## ஜெயம் பெற்ற வீரர்கள் மற்றும் பாடனுபவித்த விசுவாச வீரர்கள் (11:32-38)

**32பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையுங் குறித்து நான் விவரஞ் சொல்ல வேண்டுமானால் காலம் போதாது. 33விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், 34அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். 35ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறு சிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை**

**அடையும்படிக்கு, விடுதலை பெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்; [36]வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்; [37]கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்; [38]உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்.**

பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்கள், வசனம் 32 தொடங்கி, மூன்று குழுக்களாக முன்வைக்கப்பட்டுள்ளனர். ஜெயம் பெற்ற வீரர்கள் என்ற பெயரைக்கொண்ட முதலாவது குழுவானது, இராணுவ வெற்றிகளை வென்றது அல்லது கடுமையான ஆபத்துக்களில் இருந்து விடுவிக்கப்பட்டது (வசனங்கள் 32-34). இரண்டாவதாக, பாடனுபவித்த வீரர்களுக்கு உரித்ததாயிருக்கிறது (வசனங்கள் 35-38). மூன்றாவதாக, ஒரு இறுதி அறிக்கை (வசனங்கள் 39, 40), எல்லா காலங்களிலும் உள்ள அனைத்து விசுவாசிகளையும் ஒன்றாக இணைக்கிறது.[79] கிறிஸ்துவின் திருச்சபை இல்லாமல், இவைகளில் எதுவும் "பூரணமாக" இருந்திருக்க முடியாது. நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துவின் மூலமாய், அவர்களும், மற்றும் நாமும் ஜெயத்தைப் பெற முடியும்.

**வசனம் 32.** தேவபக்தியுள்ளவர்கள் ராஜ்யங்களை வெற்றி கொண்டார்கள், அதேசமயம் உட்குறிப்பில் இருந்து, அநீதியானவர்கள் தோற்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டனர் என்று நாம் யூகிக்கிறோம் (வசனங்கள் 32-38). இங்கே குறிப்பிடப்பட்டுள்ள எபிரெய வரலாற்றில் இருந்து, ஒவ்வொரு அத்தியாயங்களிலும் மேன்மையான பாடங்களை கற்றுக்கொள்ள முடியும். இந்த பத்தியானது, இஸ்ரவேலரின் எந்த குழந்தையாலும் பாராட்டப்பட்ட பெரும் தேசபக்தி உரையின் ஒரு பகுதியாக இருக்கலாம்.

நிருபத்தின் ஆசிரியர், **மேலும் நான் என்ன சொல்லுவேன்?** மற்றும் **காலம் என்னைத் தோல்வி அடையச் செய்யும்** என்பதனில் ஒரு போதகரால் பயன்படுத்தப்படக்கூடிய சொற்களை தேர்ந்தெடுத்துள்ளார். எழுதுவதில், நேரம் இல்லை, அது இடைவெளியாய் இருக்கிறது, அதாவது தடைசெய்யப்பட்டுள்ளது. இங்கே, ஒரு பிரசங்கத்தில் நேரத்தைக் கையாள்வதில், நேரம் கடந்து போகிறது என்பதாக நாம் பார்க்கிறோம்.

வேதாகமம், விசுவாசத்தின் அற்புதமான உதாரணங்களை உள்ளடக்கி இருக்கிறது-உண்மையில், நிருபத்தின் ஆசிரியர் அவருக்குக் கிடைத்த எல்லாவற்றையும் பயன்படுத்திக்கொள்ள

முடியாது, அல்லது அவருக்கு அவைகள் எல்லாம் அவசியமாக இருப்பதில்லை. பின்வருபவை, நிருபத்தைப் பெறும் ஒவ்வொருவராலும் அறியப்பட்டிருக்கும் பெயர்கள் மற்றும் செயல்களின் ஒரு பட்டியலாய் இருக்கிறது. சில விளக்கங்கள், வேதாகமத்தில் குறிப்பிடப்படாத மக்களை குறிக்கலாம். இந்த வசனத்தை அடிப்படையாகக் கொண்டு, நாம் நித்தியத்தைப்பற்றி அறிந்திடும் வரை, அவர்களை நாம் மதிக்கிறோம். நிருபத்தின் ஆசிரியர், அசாதாரணமாவதற்கு விரும்பவில்லை என்பதால், அவர் தனது பட்டியலிலிருந்து தேவையற்ற விவரங்களைப் புறக்கணிக்கிறார்.

நியாயாதிபதிகள் மற்றும் 1 மற்றும் 2 சாமுவேல் ஆகிய புத்தகங்களிலிருந்து, ஆறு குறிப்பிட்ட பெயர்கள் இந்தப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. இவைகள் மூன்று ஜோடிகளாக பிரிக்கப்படலாம், ஒவ்வொரு ஜோடியிலும் உள்ள தனி நபர்கள் தலைகீழ் கால வரிசையில் வித்தியாசமாக அறிமுகப்படுத்தப்படுகிறார்கள்: ஒவ்வொரு ஜோடியின் தனி நபர்களும் தலைகீழ் காலவரிசைப்படி அறிமுகப்படுத்தப்பட்டார்கள்: **கிதியோனுக்கு** முன்னால் **பாராக்** இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தினான், **சிம்சோனுக்கு** முன்னர் **யெப்தாவும்**, மற்றும் **தாவீதை சாமுவேல்** அபிஷேகம் செய்தபோது, அவன்[உடைய] ஊழியம் ஒரு முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. இந்தப் பெயர்கள் மூன்று முக்கியமான பிரிவுகளை பிரதிநிதித்துவம் செய்கின்றன: நியாயாதிபதிகள், ஒரு ராஜா, மற்றும் பின்னர் **ஒரு தீர்க்கதரிசி**.

பெயரிடப்பட்ட முதல் நபர் கிதியோனாய் இருக்கிறான், (நியா. 6:11-8:32) ஐந்தாம் நியாயாதிபதியும், மற்றும் விசுவாசத்தினால் மீதியானியரை அவன் தோற்கடித்தான். குறைந்தபட்சம் ஒரு இலட்சத்து முப்பத்தி ஐயாயிரம் மிதீயானிய படைவீரர்களை எதிர்கொள்ள, கிதியோனின் இராணுவத்தில் மிக அதிகமாக முந்நூறு ஆண்கள் மட்டுமே இருந்தார்கள் (நியா. 7:6; 8:10 பார்க்க).

பாராக் (நியா. 4:1-5:31) மற்றும் அவனது பதினாயிரம் ஆண்கள், தொளாயிரம் இருப்பு ரதங்கள், மற்றும் இஸ்ரவேல் இராணுவத்தை விட மிகப்பெரிய ஒரு இராணுவத்தைக்கொண்ட கானானியர்களை தோற்கடித்தனர். கானானியரின் சேனாபதி சிசெரா அந்த நேரத்தில் கொலை செய்யப்பட்டான், ஆனால், இஸ்ரவேலின் நான்காவது நியாயாதிபதியாக இருந்த தெபொராள் என்னும் தீர்க்கதரிசியானவளின் ஆலோசனையைப் பின்பற்றாதபடியால், சேனாபதி பாராக்கினால் அவன் கொலை செய்யப்படவில்லை. மாறாக, சிசெரா ஒரு பெண்ணால் கொல்லப்பட்டான் (நியா. 4:8, 9, 21). யுத்தத்திற்காக, தெபொராளை அருகில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற பாரக்கின் விருப்பம், அவனுக்கு அவளை வழிநடத்திய தேவன் மீதுள்ள விசுவாசம் வைத்திருப்பதை நிச்சயமாகக் குறிக்கிறது, ஆனால்,

அவனது விசுவாசம், வலுவாக இல்லை. வெற்றிக்கு அவனுக்கு மரியாதை கிடைக்கவில்லை என்றாலும், தேவ மகிமைக்காகவும், மற்றும் இஸ்ரவேல் ஜனங்களுக்காகவும், அவன் இன்னும் இராணுவத்தை யுத்தத்திற்கு வழிநடத்திச் சென்றான்.[80]

சிம்சோன் (நியா. 13:24-16:31), பதின்மூன்றாம் நியாயாதிபதி, பிறந்ததிலிருந்து ஒரு நசரேயனாயிருந்தான், மற்றும் பல பெலிஸ்தியர்களைக் கொன்றான். சிம்சோன் ஒரு பாவியாக இருந்தான், ஆனால் அவன் தனது பாவங்களுக்காக எபிரெயர் நிருபத்தின் ஆசிரியரால் பாராட்டப்படவில்லை. சிம்சோனின் மிகப்பெரிய பலவீனம், தேவபக்தியற்ற பெண்களுடன் காதல் உணர்வு கொண்டதால்தான் ஆகும். அவன் புதுப்பிக்கப்பட்ட பலத்துடன் ஆசீர்வதிக்கப்பட்டான், ஆனால் அவன் கொன்றுபோட்ட பெலிஸ்தியருடன் தனது சொந்த வாழ்க்கையை இழந்தான். தேவனின் மீதுள்ள விசுவாசம், அவனை அதிகாரத்தின் ஒரு இறுதி வல்லமையை செயல்விளக்கம் செய்ய அவனுக்கு உதவியது.

ஒன்பதாம் நியாயாதிபதியாகிய யெப்தா (நியா. 11:1-12:7), (சிம்சோனைப் போல) பரிபூரணமாக இருந்தான். அவன் தனது மகளைப் பற்றி கண்மூடித்தனமான ஒரு பொருத்தனை செய்தான், ஆனால் அதைப் பாதுகாப்பதில் அவனது வார்த்தையில் உண்மையுள்ளவனாக இருந்தான். அவசர அவசரமாக பேசிய போதிலும், அவனது பொருத்தனை, இன்னும் விசுவாசத்தில் இருந்தது. அவன் தேவனிடம் சத்தியம் செய்திருந்தான், மற்றும் அதைத் திரும்பப் பெற முடியாது என்று அவன் தெளிவாக நம்பினான். அவனது மகள் ஒரு மனித பலியாக கொடுக்கப்பட்டாளோ அல்லது வெறுமனே பிரம்மாண்டமான ஒரு வாழ்க்கைக்கு உறுதியளித்தானோ, என்பது (இதனால் “அழுது [கொண்டு], ஏனென்றால் [அவளுடைய] கன்னிமையினிமித்தம் காரணமாக”; நியா. 11:37) விவாதத்திற்குரியதாக இருக்கிறது. ஒரு முறைகேடாகப் பிறந்த மகனானபடியினால், யெப்தாக்கு எந்த வம்சவழி சொத்து கிடையாது, ஆனால் அவனுடைய மகள் அவனுக்கு சந்ததியை கொடுத்திருந்தால், அவன் ஒரு நீடித்த வம்சத்தை கொண்டிருக்கலாம். இந்த காரணத்திற்காக, அவளது தொடர்ச்சியான கன்னித்தன்மை மிகவும் துக்ககரமானதாய் இருந்தது. அந்த நேரத்தில் இஸ்ரவேலருக்கு ஒரு ராஜா இல்லையென தீர்மானிப்பதற்கான சூழ்நிலையை, தேவன் விவேகத்துடன் ஏற்பாடு செய்திருக்கலாம். யெப்தா அம்மோனியரைத் தோற்கடித்தான், மற்றும் வெளிப்படையாக இஸ்ரவேல் ஜனங்களுக்கு சிறிது காலத்திற்குப் பின், அவனுடைய வாரிசுகள் அனுபவிக்குமாறு, ஒரு சமாதானத்தைக் கொண்டு வந்தான்.

தாவீது (1 சாமு. 16-2 சாமு. 24), இஸ்ரவேலின் இரண்டாவது ராஜா, வேதாகமத்தின் வாசகருக்கு நன்கு அறியப்பட்ட ஒரு சரித்திரக்

கதையை விட்டுச்சென்றுள்ளான். அவன் நீதியின் ஆட்சியை ஊக்கந்தளராமல் நடத்தி வந்தான், மற்றும் அவனது இறுதி பாடலில், கர்த்தருடைய நீதியினைப் போற்றினான், தேவன் "நேர்மையான" மனிதர்களை மிக்க மகிழ்ச்சியுடன் ஆளப்போகிறார் என்று கூறுகிறான் (2 சாமு. 23:2-7). தாவீது கிறிஸ்துவின் வருகைக்கு அடையாளமாக இருந்தான். அவனது உயரிய விசுவாசமானது, அவனது தீர்க்கதரிசன சங்கீதங்கள் மூலம் பரிந்துரைக்கப்படுகிறது; அவனது வாழ்க்கையிலும், மற்றும் எழுத்துக்களிலும், அவருடைய உயரிய குமாரனான இயேசுவின் மரணம், மற்றும் உயிர்த்தெழுதலில் நிறைவேற்றப்பட்டது என்பதை நாம் முன்கூட்டியே காண்கிறோம். "நம்பிக்கைக்குரிய கிருபைகளை தாவீதுக்கு காண்பிப்பேன்" என்ற சொற்றொடர் (ஏசாயா 55:3, 4), கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை எதிர்நோக்குகிறது (அப். 13:32-35). தாவீதுடைய தார்மீக பலவீனத்தை விட, அவனுடைய விசுவாசம் அதனை ஈடுசெய்கிறது, எந்த நிலையற்ற மனிதனும் தகுதியுடையவன் என்பதால், அவன் இங்கே பட்டியலிடப்பட வேண்டும்.

சாமுவேல் (1 சாமு. 2:21-25:1) இஸ்ரவேலின் பதினைந்தாம் மற்றும் கடைசி நியாயாதிபதியாக இருந்தான், ஆனால் அவனும்கூட ஒரு தீர்க்கதரிசியாக இருந்தான். அவன் ஒரு நல்ல மனிதனாக இருந்தான் ஆனால் அவனது முன்னோடியான ஏலியைப் போன்ற, தனது குமாரர்களை சீரான ஒரு கட்டுப்பாட்டிற்குள் வளர்க்காமல் போனான் (1 சாமு. 3:12, 13; 8:1-7). ஆகையால், அவனுடைய மரணத்திற்குப் பிறகும், அவனுடைய குமாரர், அவனுடைய ஸ்தானத்திற்கு வர முடியாது. உடன்படிக்கையின் பெட்டியும் பெலிஸ்தியருடனே தங்கியிருந்தபோதும்கூட, தேவன் அவர்களுடன் இருந்தார் என்பதை சாமுவேல் மக்களுக்கு நினைப்பூட்டினான். உடன்படிக்கையின் பெட்டி திரும்பி வந்தபோது, சாமுவேல் "அதை ஒரு இருளுடைய இடத்தில் விட்டு விட்டான், ஏனென்றால் தேவனுக்குப் பதிலாக, மக்களுடைய விசுவாசம் உடன்படிக்கையின் பெட்டியின்மீது போய் விடாதவாறு, மறுபடியும் குறிப்பிட்ட ஒரு இடத்தில் வைக்க வேண்டும்" என்றான்.[81] அவனுடைய குமாரர்களை ஒழுங்காக வளர்க்க தவறிவிட்ட போதும், அவன் எல்லா வழிகளிலும் விசுவாசமுள்ளவனாக இருந்தான்.

பட்டியலில் உள்ள ஒவ்வொரு நபரிடமும் காணப்பட்ட, வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஆன்மீக குறைபாடுகளைக் கவனியுங்கள். அவர்கள் தங்கள் மக்களுக்கு வெற்றி, சமாதானம், மற்றும் நீதி ஆகியவற்றைக் கொண்டுவந்தாலும், இந்த விசுவாச வீரர்கள் பாவ உணர்வுடையவர்களாக இருந்தனர்:

> தேவன் சாதாரண ஆண்கள் மற்றும் பெண்கள் மூலமாக, அவருடைய நோக்கங்களை நிறைவேற்றினார், ஆனால் ஒவ்வொருவருக்கும் பலவீனங்கள் இருந்தன. நோவா குடித்து வெறித்திருந்தான்,

> ஆபிரகாம் தன் மனைவியைப் பற்றி பொய் சொன்னான், சாராள் ஆகாரிடம் இரக்கமற்றவளாய் இருந்தாள் [மற்றும் அவளை வெளியே விரட்டி விட்டாள்], ஈசாக்கு தன் மனைவியைப்பற்றி பொய் சொன்னான், யாக்கோபு தன் தகப்பனை ஏமாற்றிவிட்டான், யோசேப்பு அவனது இளமையில் ஒரு கோள் சொல்பவனாக இருந்தான். மோசே ஒரு எகிப்தியனைக் கொன்றான், மற்றும் மேரிபாவில் தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை, இஸ்ரவேல் ஜனங்கள் பலவிதமான தீய செயல்களில் ஈடுபட்டார்கள், ராகாப், சிம்சோன் ஆகிய இருவரும் பாலியல் முறைகேடுகளில் ஈடுபட்டிருந்தனர். பாராக், தெபொராளின் உதவியில்லாமல், யுத்தத்திற்குச் செல்ல மறுத்துவிட்டான், யெப்தா எதிரியைத் தாக்கும் ஒரு நபராக அவனது வாழ்க்கையின் ஒரு பகுதியாகவும், மற்றும் விவேகமற்ற ஒரு பொருத்தனையை உச்சரித்தான், தாவீது பத்சேபாளுடன் விபச்சாரம் செய்தான் - சாமுவேல் தன் குமாரரை கர்த்தருடைய காரியத்தில் இழந்தான்.[82]

இந்தப் பாவங்கள் தேவனின் பெரிதான கிருபையை மட்டும் காட்டுகின்றன. அவர்களிடம் தவறுகள் இருந்தபோதிலும், அவர் அவர்களுடைய விசுவாசத்தின் காரணமாக, இவர்களை பெரும் வீரர்களாக ஆக்கினார்.

**வசனங்கள் 33, 34.** எபிரெய வரலாற்றில் குறிப்பிட்ட மனிதர்களைப் பெயரிடுவதற்கும் கூடுதலாக, எழுத்தாளர் பொதுவாகச் சிறந்த செயல்களைச் செய்திருந்த மற்றவர்களையும் குறிப்பிட்டுள்ளார். பட்டியலிடப்பட்ட ஒன்பது அருஞ்செயல்களும் மூன்று பிரிவுகளில் அடங்குகின்றன. ராஜ்யங்களை ஜெயித்து, நீதியை நடப்பித்து, வாக்குத்தத்தங்களைப் பெற்றவர்கள் தொடர்பாக முதல் பிரிவினர் குறிப்பிடப்பட்டுள்ளனர். பெரும்பாலும் இஸ்ரவேலர்கள், குறைந்த வல்லமையுள்ளவர்களாக, யுத்தம் செய்ய விசுவாசத்தில் முன்னேறும் பொழுது அந்நிய ராஜ்யங்கள் முறியடிக்கப்பட்டன. நீதி அவர்களது தேவனுடைய இயல்பைப் பிரதிபலிப்பதால், விசுவாசமுள்ள இந்த மனிதர்கள் அதைத் தேர்வு செய்தனர் (வசனங்கள் 33, 34).

இரண்டாம் பிரிவினர் பொறுமை உள்ளவர்களாக இருந்தனர் (வசனங்கள் 35, 36). தேவனை உண்மையாகப் பின்பற்றுபவர்கள் பெரும் துன்புறுத்தலை எதிர்கொண்டார்கள், இருப்பினும் அவர்கள் அதை மேற்கொண்டார்கள். மூன்றாம் பிரிவினர் அதைப்போல அதிகமான துன்பங்களைச் சகித்துக் கொண்டதாக விவரிக்கப்படுகின்றனர், ஆனால் அவர்களும் ஆச்சரியமான விதத்தில் மீட்பைப் பெற்றனர் (வசனங்கள் 37, 38).[83]

இவர்களையும், மற்றவர்களையும் குறித்துக்காட்டிய பல்வேறு நடவடிக்கைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை, ஏனென்றால் அவைகள் **விசுவாசத்தினால்** செய்யப்பட்டவைகள் (வசனம் 33).[84] சில தனிமனிதர்கள் **ராஜ்யங்களை ஜெயித்தார்கள்**. மற்றவர்கள் **நீதியை நடப்பித்தார்கள்**. “எல்லா ஜனத்திற்கும் நியாயமும் நீதியும்

செய்துவந்த," சாமுவேல் (1 சாமு. 12:1-5) மற்றும் தாவீது போன்றவர்களின் மூலம் நியாயம் நிறைவேற்றப்பட்டதை இது குறிப்பிடுகிறது. (2 சாமு. 8:15).

**வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள்** என்பது ஒருவேளை அவர்களின் வாழ்க்கையில் நிறைவேறிய தேவனுடைய சில வாக்குத்தத்தங்கள் என்று பொருளாகிறது. நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள் "வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், மரித்தார்கள்" என்றும் "வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்" என்றும் எபிரெயர் 11:13, 39 நமக்குக் கூறுகிறது, எனினும், எந்த முரண்பாடும் இல்லை. இந்த இரண்டு வசனங்களும் கிறிஸ்துவுக்குள் நமக்கு அளித்த இறுதி ஆசீர்வாதங்களை உள்ளடக்கிய வித்தியாசமான வாக்குத்தத்தத்தைக் குறிக்கின்றன. விசுவாசமுள்ளவர்களான ஆண்கள் மற்றும் ஸ்திரீகளும் நிச்சயமாகப் பழைய ஏற்பாட்டில் மற்ற வகையான "வாக்குத்தத்தங்களைப் பெற்றனர்." ஜனங்கள் யோசுவாவின் கீழ், தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணி இருந்த கானானைப் பெற்ற போதும் "தேசத்தையெல்லாம்" சுதந்தரித்த போதும், தேவன் இஸ்ரவேலுக்குக் கொடுத்த அவரது வார்த்தையை நிறைவேற்றினார் (யோசுவா 21:43). சனெகெரிப் எத்தனம் பண்ணின படையெடுப்பு மற்றும் சங்கரிப்பில் இருந்து எருசலேம் மீட்கப்பட்டதை ஏசாயா பார்த்தான் (2 இராஜா. 19). தானியேல் பாபிலோனிய சிறையிருப்பின் முடிவைக் கண்டான் (தானி. 9). விசுவாசம் உள்ளவர்கள் மேசியாவைப் பார்க்க உயிரோடு இருக்கவில்லை என்றாலும், அவர்கள் மேசியாவின் வருகை பற்றிய தேவனுடைய வாக்குத்தத்தங்களை நம்பினார்கள். தேவனுடைய வாக்குத்தத்தத்தின் கடைசியான நிறைவேறுதல் 11:35 ல் நித்தியத்தின் "சிறந்த உயிர்த்தெழுதல்" என்பதில் காணப்படுகிறது.

**சிங்கங்களின் வாய்களை அடைத்த** தனி மனிதர்களும் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளனர். சிம்சோன் (நியா. 14:6, அவனுடைய வரலாறு 13 முதல் 16 வரையிலான அதிகாரங்களில் கூறப்பட்டிருக்கிறது), தாவீது (1 சாமு. 17:34, 35) ஆகியோரை இது உள்ளடக்கியுள்ளது. குறிப்பாக, தானியேலைப் பற்றிச் சிந்திப்போம். இந்த விஷயத்தில், தானியேலின் விசுவாசம் அவனைக் காப்பாற்றுவதற்கு ஒரு தேவதூதரை தேவன் அனுப்பும்படியாகச் செய்தது என்பது தெளிவாகிறது (தானி. 6:22).

விசுவாசமுள்ள சிலருக்கு தேவன் **அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்** (வசனம் 34). தானியேல் 3-ம் அதிகாரத்தில் சாத்ராக், மேஷாக் மற்றும் ஆபேத்நேகோ ஆகியோரின் விஷயத்தில் இது நிச்சயமாகப் பொருந்தும். தேவன் அவர்களை விடுவிக்காமற் போனாலும், ஒரு சிலையைத் தாழ விழுந்து பணிந்து கொண்டு அவரை மறுதலிக்காதபடி அவர்களுடைய விசுவாசம் மிகவும் பெரிதாக

இருந்தது. நாம் ஒன்றும் அறிந்திருக்காத இதேபோன்ற வேறு நிகழ்வுகள் இருந்திருக்கலாம்.

பல்வேறு விசுவாசிகள் **பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள்**. பழைய ஏற்பாட்டில் மரணத்தில் இருந்து தப்பித்தல் என்பது தாவீது கோலியாத்தின்மீது பெற்ற ஜெயத்தையும், சவுலிடம் இருந்து தப்பி ஓடியதையும் (1 சாமு. 18:10, 11; 19:10) உள்ளடக்கியுள்ளது. எலியா யேசபேலின் மரணதண்டனையைத் தவிர்த்தான் (1 இராஜா. 19:1-6), மேலும் 2 இராஜாக்கள் 6:18 ல் சீரியர்கள் குருடாக்கப்பட்டபோது எலிசா (2 இராஜா. 6:14-23, 31-33) யேசபேலின் மகன் யோராமிடம் இருந்து காப்பாற்றப்பட்டான். மேலும் ஆசிரியர் எஸ்தர் ராஜாத்தி பற்றியும், எஸ்தர் 4:13, 14ல் தேவனுடைய முன் உணர்தல் மூலம் காப்பாற்றப்பட்ட யூதர்களைப் பற்றியும் எண்ணி இருந்திருக்கலாம்.

சிலர் **பலவீனத்தில் பலன்கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்**. இந்த விளக்கம் "இரண்டு சிறிய வெள்ளாட்டுக் கிடைகளைப்போல" சேனையை உடையவனாய் இருந்தும், பலமுள்ள ஆராமியர்களை (சீரியர்களை) முறியடித்த ஆகாப் ராஜாவுக்கும் பொருந்தும் (1 இராஜா. 20:27). பாராக்கைப் போல (நியா. 4:14), தாவீது பலவீனத்தில் பலன் கொண்டவர்களில் ஒருவனாக இருந்தான் (1 சாமு. 17:49-51). ஒரு காலம் வரை பலவீனமாக இருந்த பிறகு, புறஜாதிகளின் கோவிலையும் பெலிஸ்தரின் பெரிய கூட்டத்தையும் அழிக்க வல்லவனாக இருந்த சிம்சோனையும்கூட நாம் கருத்தில் கொள்ளலாம் (நியா. 16:19-30).

வேத வசனங்களில் பதிவு செய்யப்படாத நிகழ்வுகளின் குறிப்புகளும் இதில் அடங்கும். கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் யூதாஸ் மக்கபேயஸ் சிரியாவின் சக்தி வாய்ந்த படைகளுடன் யுத்தம் செய்து யூதர்கள் மீதான அடக்குமுறையின் நுகத்தை விலக்கினான். அந்தியோகஸ் எப்பிபானின் கீழ், சிரியா (ஆராம்) ஹெலனிய கலாச்சாரத்தையும் மதத்தையும் பின்பற்ற அனைத்து யூதர்களையும் கட்டாயப்படுத்த முயற்சித்தது. யூதாஸ் மக்கபேயஸ் ஒரு சிறிய படையுடன் சிரியா மீது பெரும் வெற்றியைப் பெற்றான். இது வேதாகமத்தில் இடம் பெறாத ஒரு நிகழ்வு என்றாலும்,[85] அந்த விடுதலையில் அதிகம் பெருமை அடைந்தவர்களான இஸ்ரவேல் மக்களால் நிச்சயமாக நன்கு அறியப்பட்டதாக இது இருக்கிறது.

இந்த அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ள எல்லா மனிதர்களும் மரிக்கும் வரை விசுவாசமுள்ளவர்களாய் இருந்து "நற்சாட்சி பெற்றிருந்தனர்" (வசனம் 39). தேவன் மீதுள்ள அவர்களின் நம்பிக்கையால் - சில சமயங்களில் சரீர பிரகாரமாகவும் - ஆவிக்குரிய வழியிலும் அவர்கள் பலப்படுத்தப்பட்டனர்.

**வசனம் 35.** இந்த வசனம் வரலாற்றின் மறு பக்கத்தைக் கூறத் தொடங்குகிறது: சிலர் தங்கள் விசுவாசத்தின் காரணமாகப் பெரிதும்

துன்புறுத்தப்பட்டனர். எனினும், தேவன், அவரது ஞானத்தில், நீதிமான் உயிரோடெழுப்பப்படுவதை எதிர்நோக்க முடியும் என்ற நிச்சயத்தை வழங்கினார். ஒரு சில சந்தர்ப்பங்களில், **மரித்தவர்கள்** உயிரோடெழுப்பப்பட்டனர். இவ்விதமான இரண்டு அற்புதங்கள் எலியாவின் மூலமும் (1 இராஜா. 17:17-24) எலிசாவின் மூலமும் (2 இராஜா. 4:18-37) நடத்தப்பட்டன. மீண்டும் வாழ்வைப் பெற்ற பிள்ளைகளின் துயரமடைந்த தாய்மார்களின் விசுவாசம் இல்லாமல், இந்த **உயிர்த்தெழுதல்**[கள்] ஒருவேளை நடந்திருக்காது. புதிய ஏற்பாட்டில், மரித்தவர்களின் உயிர்த்தெழுதல் எல்லாவற்றுடனும் **ஸ்திரீகள்** சில வழிகளில் தொடர்புடையவர்களாக இருந்தனர். லூக்கா 7:11-17-ல், குறிப்பிடப்பட்ட அந்த ஒருவன் நாயீன் என்னும் ஊராளான ஒரு கைம்பெண்ணின் மகன். மாற்கு 5:22-24, 35-42-ல் குறிப்பிடப்பட்டிருப்பது யவீருவின் மகள் (மேலும் பார்க்க மத். 9:18, 19, 24, 25; லூக். 8:41, 42, 49-56). யோவான் 11:1-44 ல் லாசருவை எழுப்புவதில், இயேசுவுடன் மரியாளும் மார்த்தாளும் இருந்தார்கள். ஒரு வாழ்க்கைக்குப் பின்பு என்பது பற்றிப் பழைய ஏற்பாட்டில் சிறிதளவு போதிக்கப்பட்டிருந்தாலும், பல யூதர்கள் அதை நம்பினார்கள். பொது மக்கள் கண்டவற்றைப் பல இறை வல்லுனர்கள் கண்டதில்லை.

உரையில் குறிப்பிட்டுள்ள வேறுசிலர் **விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்**. இங்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் (ετυμπανίζω, *தும்பாநீஜோ*, "முரசு") என்ற வார்த்தை வழக்கமாக ஒரு விலங்குத் தோலால் இழுத்துக் கட்டப்பட்ட உருளை வடிவ கொள்கலனைக் குறிப்பிடப்படுகிறது, ஆனால் சித்திரவதை என்ற சூழலில், ஒரு சக்கரத்தில் ஒருவரை இழுத்துக் கட்டி அதன்பின் பெரும்பாலும் மரணப் பரியந்தம் அடிப்பதாகும். மக்கபேயர்களின் நாட்களில், சட்டவிரோத உணவுகளை ருசிப்பதை விட இழுத்துக் கட்டப்படவும் மரணப் பரியந்தம் அடிக்கப்படவும் தன்னைத்தானே அனுமதித்த யூத எழுத்தாளர்களில் ஒருவனான எலியாசரின் விஷயத்தில் இது நடந்தது, இது பொதுவாக இங்குக் குறிப்பிடப்பட்ட சம்பவமாகக் கருதப்படுகிறது.[86] மேலும் இரண்டு ஏற்பாடுகளின் இடைப்பட்ட காலத்தின்போது, ஏழு சகோதரர்கள் உயிர்த்தெழுதலில் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையின் காரணமாக, உருச்சிதைவையும் மரணத்தையும் ஏற்றுக்கொண்டார்கள்.[87]

இந்த மக்கள் தேவன் மீதுள்ள தங்கள் விசுவாசத்தைக் கைவிட்டால் மட்டுமே உபத்திரவம் நிறுத்தப்பட்டது; ஆனால் அது தேவனுடைய மக்களுக்குச் செலுத்த வேண்டிய மிகப் பெரிய ஒரு கிரயமாக இருந்தது. **மேன்மையான உயிர்த்தெழுதலை அடைய விரும்பியதால்** அவர்கள் அதைச் சகித்துக் கொண்டார்கள். என்ன இந்த "மேன்மையான உயிர்த்தெழுதல்"? அவர்கள் அனைத்து மரித்தோரின் உயிர்த்தெழுதல் மற்றும் தங்கள் பூமிக்குரிய வாழ்க்கையில் விடுவிக்கப்படுவதற்குப்

பதிலாகத் தேவனோடு நித்தியத்திற்குள் பிரவேசிக்க விரும்புவதில் நம்பிக்கை கொண்டிருந்தார்களா? மாறாக, இந்த ஆய்வுக்கட்டுரையில் உரையாற்றிய எபிரேய கிறிஸ்தவர்கள், ஒருவேளை, அவர்களுடைய விசுவாசத்திற்காகப் பாடுபட விருப்பமில்லாமல் இருந்தார்கள் என்ற ஒரு தாக்கத்தை நாம் காணலாம்.

**வசனம் 36.** சிலுவையில் இயேசுவிற்கு வந்தது போல் தேவனுடைய மக்களுக்கு **நிந்தைகள்** அடிக்கடி வருகின்றன (மத். 27:41-44; மாற்கு 15:31, 32; லூக். 23:35-39). பொதுமக்களும் தனது சொந்தக் குடும்பத்தினரும் தன்னைப் நகைப்புக்கு உள்ளாக்கினார்கள் என்றும் இந்தச் சந்தேகத்திற்கு இடமில்லாத பரிகாசம், தான் தேவனுடைய நாமத்தில் பேசுவதை விட்டுவிடும் விருப்பத்தைத் தனக்கு ஏற்படுத்தியது என்றும் எரேமியா குற்றம் கூறினான் (எரே. 20:7-10). பின்னர், அவன் அடிக்கப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டான் (எரே. 37:15). அதன்பின் அவன் உளையாயிருந்த துரவிலே போடப்பட்டான். அங்கிருந்து எபெத்மெலேக் என்னும் எத்தியோப்பியனால் தப்புவிக்கப்பட்டான் (எரே. 38:6-13). பாரம்பரிய வழக்கப்படி, எரேமியா எகிப்தில் யூதர்களால் கல்லெறியப்பட்டான் (வசனம் 37). யூதாவின் ராஜாவாகிய யோவாஸ் என்பவனால் யோய்தாவின் குமாரனான சகரியா கொல்லப்பட்டான் (2 நாளா. 24:20-22). மத்தேயு 23:37ல் கர்த்தர் இவ்வகையான நடத்துதல் எனத் தன்னைத்தானே மறைமுகமாகக் குறிப்பிட்டார். வெளிப்படையாக, சில எபிரெய கிறிஸ்தவர்கள் இத்தகைய துன்புறுத்தல்களை அடைந்திருந்தார்கள் (எபி. 10:33; 13:13).

**பல சாட்டைகள் இணைக்கப்பட்ட ஒரு மர கைப்பிடியைப்** பயன்படுத்தி அடிகள் நிகழ்த்தப்பட்டன; பாதிக்கப்பட்டவரின் முதுகைச் சிராய்த்துக் காயப்படுத்த உலோக துண்டுகள் அல்லது ஈயப் பந்துகள் பொறுத்தப்பட்டன. சில நேரங்களில் உள் உறுப்புகள் வெளிப்படுத்தப்பட்டன, மேலும் துன்புறுத்தப்பட்ட சிலர் அதனால் மரித்தார்கள். பாதிக்கப்பட்டவர் சிறிது காலத்திற்குப் பின்புவரை வலி மிக்கச் சூழ்நிலையைக் கொண்டிருக்கும் அளவு, துன்புறுத்துவதற்குப் பயிற்சி பெற்றவர்கள், கடைசி அடிகளை வரம்புக்குள் கொண்டுவருவதில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக இருந்தனர்.[88]

**கட்டுகளும் காவலும்** பொதுவாக மதப் பாரபட்சத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது (எரேமியா, எரே. 37:4-21; அனனியா, 2 நாளா. 16:7-10). கர்த்தருடைய செய்தியைப் பேசியதற்காகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பலருள் மிகாயா தீர்க்கதரிசியும் ஒருவனாவான் (1 இராஜா. 22:26, 27).

**வசனம் 37. அவர்கள் கல்லெறியுண்டார்கள்** என்பது பழைய ஏற்பாட்டு நாட்களில் மரணத் தண்டனையின் அதிகாரபூர்வமான முறையைப் பிரதிபலிக்கிறது (லேவி. 20:27; உபா. 21:21; யோவான் 8:3-5). இயேசு எருசலேமுக்காகப் புலம்பி, கல்லெறியுண்ட தேவனுடைய

தீர்க்கதரிசிகளைக் குறிப்பிட்டார் (மத். 23:37; லூக். 13:34). புதிய ஏற்பாட்டுக் காலங்களில் இயேசுவைப் பின்பற்றிய முதல் இரத்தசாட்சியான ஸ்தேவான், அவ்விதமாக மரித்தான் (அப். 7:58, 59).

சிலர் **இரண்டாக அறுப்புண்டார்கள்**. பழைய ஏற்பாட்டிலோ தள்ளுபடி ஆகமத்திலோ இதைப் பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை; ஆனால் நன்கு அறியப்பட்ட ஒரு பாரம்பரியத்தின்படி மனாசேயின் ஆட்சியில் ஏசாயாவுக்கு இது நிகழ்ந்தது. அவனது பாவத்திற்காக வருந்தி தன்னைத் தாழ்த்தி விண்ணப்பம் செய்தபடியால், மனாசேயை பின்னர் தேவன் மன்னித்து, அவனுடைய சிங்காசனத்தை மீண்டும் நிலைநிறுத்தினார் என்பதாக நாம் காணலாம் (2 நாளா. 33:9-13). அவன் ஒரு கொடூரமான குற்றம் செய்த குற்றவாளி, ஆனால் பின்னர் மன்னிக்கப்பட்டான் என்பது தேவனுடைய மிகுந்த இரக்கத்தை விளக்குகிறது என்று கூற வேண்டும்.

**பரீட்சைபார்க்கப்பட்டார்கள்** என்றால், இந்த மனிதர்கள் அத்தகைய உபத்திரவத்திலிருந்து விடுதலை பெறச் சம்மதியாமல், அதை மறுத்துவிட்டனர் என்பதாகும். தேவன் மீதுள்ள விசுவாசம் இங்கே ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கவில்லை, ஆனால், "இனிவரும் பலனைக்" குறிப்பதாகும் (எபிரெயர் 11:26; KJV). சில கையெழுத்துப் பிரதிகளில் அது இல்லை என்ற அடிப்படையில், "பரீட்சைபார்க்கப்பட்டார்கள்" என்ற வார்த்தை RSV-ல் தவிர்க்கப்பட்டது. அது உள்ளடக்கிய கையெழுத்துப் பிரதிகள் ஒரு நகலெடுப்பவரின் பிழை காரணமாக அவ்வாறு இருக்கலாம். "பரீட்சைபார்க்கப்பட்டார்கள்" என்பதற்கான வார்த்தை πειράζω (*பெய்ரஜோ*), என்பதாகும். "இரண்டாக அறுப்புண்டார்கள்" என்பது πρίζω (*ப்ரைஜோ*) என்ற இதே போன்ற வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[89]

மற்றவர்கள் **பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள்**. காலங்காலமாக மிகவும் துன்புறுத்தப்பட்டிருந்த விசுவாசிகளின் எண்ணிக்கை தேவனுக்கு மட்டுமே தெரியும். பல வருடங்களாகப் பெருந்திரளானோர் அவர்களுடைய விசுவாசத்திற்காக மரித்திருக்கிறார்கள். இன்றும்கூட, உலகின் சில பகுதிகளில் உள்ள கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் விசுவாசத்திற்காக தொடர்ச்சியான ஆபத்தையும் மரண அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளுகின்றனர். விசுவாசத்தில் நிலைத்திருக்க ஆறுதல், பலம், ஊக்கம் ஆகியவற்றை எபிரெயர் 11, அவர்களுக்கு அளிக்கிறது.

ஆகாபின் ஆட்சியில், பலர் கொல்லப்பட்டனர் (1 இராஜா. 19:10). யோசியா என்ற ஒரு நல்ல இளமையான ராஜா, பார்வோன் நேகோவால் கொல்லப்பட்டான் (2 இராஜா. 23:29). ஆசிரியரின் சிந்தை தோவேக்குவால் கொல்லப்பட்ட தேவனுடைய எண்பத்தி ஐந்து ஆசாரியர்களையும் உள்ளடக்கி இருந்தன (1 சாமு. 22:18). எரேமியாவும்

இரத்த சாட்சிகளாக மரித்தவர்களில் ஒருவனாக இருக்கலாம். (கொல்லப்பட வேண்டும் என அவன் எதிர்பார்த்தான் என்று எரேமியா 26:14-16 குறிப்பிடுகிறது.) மக்கபேயர்களுடைய கலகத்தின் தொடக்கத்தில், ஓய்வுநாளில் தங்களைத் தாங்களே கொன்று குவிக்க யூதர்கள் அனுமதித்தனர் என்று நாம் பார்க்கலாம்.[90] கல்லெறிதலையும் உபத்திரவங்களையும் அனுபவித்தவர்கள் பழைய ஏற்பாட்டில் பதிவாகியுள்ளார்கள், ஆனால் இதே போன்ற கதைகள் தள்ளுபடி ஆகம புத்தகங்களில் பதிவாகியுள்ளன. இந்த “புதிரான” புத்தகங்கள் வேதாகமத்தின் ஒரு பகுதியாக இல்லை என்றபோதிலும், அவற்றில் இடம் பெற்ற கதைகள் யூதர்களுக்குத் தெரிந்ததாக இருந்தன.

**செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும்** என்பது வறுமை மற்றும் சமூகத்தில் இழிவாகக் கருதப்படுவதன் அறிகுறியாகும். ஒரு மேய்ப்பனாகிய தாவீது, செம்மறி ஆடுகளைத் பராமரிக்க மட்டுமே தகுதியானவன் என்று அற்பமானவனாகக் கருதப்பட்டான். (1 சாமு. 17:15, 28, 34-36). இந்தக் கடிதத்தைப் பெற்றவர்களில் அநேகர் ஏழ்மையானவர்களாக இருந்தனர். பவுல் செய்ய முயன்ற உதவி அவர்களுக்குப் பெரும்பாலும் தேவையானதாக இருந்தது (ரோமர் 15:26; கலா. 2:10).

“செம்மறியாட்டுத் தோல்களைப்” பற்றிய குறிப்பு தனது வீட்டில் இருந்து விரட்டப்பட்ட எலியாவையும் குறிக்கலாம், (1 இராஜா. 17:3-9; 19:3-14; 2 இராஜா. 1:8). அவனது மேலங்கி ஒரு செம்மறியாட்டுத் தோலாயிருந்தது அல்லது சில வகைக் கடினமான, உரோமத் தோலில் இருந்து செய்யப்பட்ட ஒரு ஆடையாக இருந்தது. பொதுவாகத் தீர்க்கதரிசிகள் கடினமான உரோமப் போர்வையைத் தரித்திருந்தனர் (சக. 13:4). அவர்கள் **குறைவை** அனுபவித்தார்கள் (ὑστερέω, ஹஸ்டெரிஒ), என்பது “குறைவு படவும்” அல்லது “குறைவாக இருத்தல்” என்று பொருளாகும். அவர்கள் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டவர்களாக இருந்தனர் என்றும் மிகவும் பழமையான முறையில் வாழ்ந்தனர் என்றும் இது குறிக்கிறது.

**வசனம் 38. உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை** என்பது தேவனுக்காகத் துன்பப்பட்டவர்கள் சமுதாயத்திற்குத் தகுதியற்றவர்களாக எண்ணப்பட்டார்கள் என்பது பொருளாக இருந்தபோதிலும் உண்மையில் சமுதாயம் அவர்களுக்குத் தகுதியற்றதாக அல்லது “பாத்திரமற்றதாக” இருந்தது. உலகில் உள்ளவர்களுக்குப் பிந்தைய காலத்திற்கான உடைமைகளும் அந்தஸ்தும் இருந்தாலும், அவர்களைவிட விசுவாசமுள்ள இத்தகைய மனிதர்கள் மிக உயர்ந்தவர்கள். ஆவிக்குரியவைகளுடன் உலகப்பிரகாரமானவற்றை ஒப்பிட முடியாது. தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலர்களைக் காப்பாற்ற வந்தனர், ஆனால் இஸ்ரவேலர்கள் தகுதியற்றவர்களாக நிரூபித்து மேலும் பொதுவாகத்

தீர்க்கதரிசிகளையும் அவர்களுடைய செய்திகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை. மிகவும் உன்னதமானவர்களை உலகம் அடிக்கடி நிராகரித்திருக்கிறது. எபிரெயர் 11-ல் பெயரிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிட்டுள்ளவர்களின் குணாதியசம் கேட்பவர்களுடைய மனதில் சூழ்ந்திருக்கிற இருளுக்கு மாறாகப் பிரகாசமாக ஜொலிக்கிறது.

சமுதாய உலகத்தை விட்டு வெளியேறி, அவர்கள் **பூமியின் வெடிப்புகளில்** (ὀπή, *ஓபியே*), அதாவது **குகைகள்** அல்லது கெபிகளில் வாழ்ந்தனர். எலிசா யேசபேலிடம் இருந்து ஓடி, சிறிது காலத்திற்கு ஒரு கெபிக்குள் தங்கினான் (1 இராஜா. 19:9). ஆகாபின் அரன்மனை விசாரிப்புக்காரனாகிய ஒபதியா நூறு தீர்க்கதரிசிகளை ஒரு கெபிக்குள் ஒளித்து வைத்து, யேசபேலின் கோபத்தில் இருந்து தப்பிக்க உதவினான் (1 இராஜா. 18:4, 13). குடும்பத்துடனான ஐக்கியத்தையும் இதே போன்று மத நம்பிக்கைகளையும் இழந்து தனிமைப்படுத்தப்படுவதே, ஒரு பெரிய கஷ்டமாக இருக்க முடியும்.

## அனைத்து விசுவாச வீரர்களைக் குறித்த ஒரு தொகுப்பு (11:39, 40)

**39இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள். 40அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.**

**வசனம் 39. இவர்களெல்லாருக்கும்** லௌகீக பொருட்களையும் ஆசைகளையும் விட, பின்பற்றத்தக்க நல்ல விஷயங்கள் இருந்தன. **வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்** என்றால் வரவிருக்கும் மேசியாவின் நிறைவேற்றப்பட்ட வாக்குத்தத்தத்தை அவர்கள் கொண்டிருக்கவில்லை என்பது பொருளாகும். புதிய உடன்படிக்கையின் கீழ் என்ன இருக்க வேண்டுமோ அது பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்கள் எவராலும் பெற்றுக் கொள்ளப்படவில்லை. கிரக் ஆர், கொஸ்டர் குறிப்பிட்டார்:

> இயேசு ஸ்தாபித்த விசேஷித்த உடன்படிக்கை, தேவனைச் சரியான முறையில் அணுகுவதற்குத் தேவையான சுத்திகரிப்பையும் பரிசுத்தப்படுத்துதலையும் அளிக்கிறது (7:22; 8:6). இதன் அடிப்படையில் பரம எருசலேமில் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் முழுமையாக நிறைவேறுவதை மக்கள் பார்க்க முடியும் (12:22-24), அது ஆபிரகாமுக்கும் அவனது சந்ததியாருக்கும் விசுவாசப் பயணம் நிறைவடைவதைக் குறிக்கும் நகரம் (11:10, 16).[91]

நியாயப்பிரமாணத்திற்கு உண்மையுள்ளவர்கள் கிறிஸ்துவிற்குள் நாம் கொண்டிருப்பதைப் பெற்றுக் கொள்ள அவரது வருகை மற்றும் அவருடைய பாவநிவிர்த்திக்கான செயல் வெளிப்படும் வரைக்கும் காத்திருக்க வேண்டியாதாய் இருந்தது. பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்கள், அவர்கள் உயிரோடிருக்கும்போது இறுதி வாக்குத்தத்தத்தைப் பெறவில்லை. இப்போது நாம் திவ்வியமாக நிறைவேற்றப்பட்ட வாக்குத்தத்தத்தின் காலத்தில் வாழ்கிறோம். உலகின் முடிவில் உயிர்த்தெழுதல் மட்டுமே இதற்கு அப்பால் காத்திருக்கிறது, அதை தொடர்ந்து நித்தியம் இருக்கிறது. ஆபேல் தொடங்கி, 11-ம் அதிகாரத்தில் பெயரிடப்பட்டவர்களும் பெயரிடப்படாதவர்களும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றார்கள்; அதுவே ஒரு சிறந்த வெகுமதியாக இருந்தது. நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள் அனைவருக்குமே இறுதி இரட்சிப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது என்பது பொருளல்ல. பழைய உடன்படிக்கையின் கீழ் வாழ்ந்த சிலர் பின்னர் தண்டிக்கப்பட்டனர் (1 கொரி. 10:5).

**வசனம் 40. விசேஷித்த நன்மையானது** என்பது ஒருவேளை புதியதும் சிறந்ததுமான உடன்படிக்கையுடன் அதனைத் தொடர்ந்து வரும் அனைத்து ஆசீர்வாதங்களுமாகும். நாம் கிறிஸ்துவைத் தெரிந்து கொண்டபடி, நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்ட ஜனங்கள் தெரிந்து கொள்ளவில்லை. நிச்சயமாக நல்ல உத்தரவாதத்தையும், நம்பிக்கைகளையும், வாக்குறுதிகளையும் நாம் கொண்டிருக்கிறோம். நாம் கிறிஸ்துவில் பெற்றிருக்கிற சிறந்த ராஜ்யத்திற்கான நம்பிக்கையை அவர்கள் பெற்றுக் கொள்ளவில்லை. இந்த உரை ஆசிரியரின் கருத்தான "சிறந்த" புதிய உடன்படிக்கையை திரும்பவும் நினைவுப்படுத்துகிறது.

**அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு** என்பது இரண்டு உடன்படிக்கைகளுக்கும் உட்பட்ட அனைத்து விசுவாசிகளும் இறுதி பலனை அடையும் போது, மகிமையில் ஒன்றாகச் சந்திப்பார்கள் என்பதைக் கூறுகிறது. தேவனால் மீட்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள் இல்லாமல் முழுமை பெறாது. உண்மையில் நாம் அவர்களுடன் விசுவாசத்தில் ஒரே ஜனமாக இருக்கிறோம். இப்போதும் சபையில் காணப்படுகிற விசுவாசிகளின் ஒரு பெரிய சரீரத்தின் பாகமாக உள்ளவர்களாகிய "பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கு," நாம் சேர்க்கப்பட்டு இருக்கிறோம் என்பதை எபிரெயர் 12:23 சுட்டிக்காட்டுகிறது. நாம் கிறிஸ்துவில் கொண்டிருக்கிற மிக அருமையான பாக்கியங்கள் பற்றி, பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் ஒரு போதும் அறிந்திருக்கவில்லை என்றாலும், அவர்கள் விசுவாசம் உள்ளவர்களாக இருந்தனர். சார்லஸ் வெஸ்லி இந்தப் பாமாலையில் அவருடைய வார்த்தைகளை எழுதும்போது சரியான கருத்தைக்

உடையவராய் இருந்தார்:

> இப்போதும், விசுவாசத்தில் நம் கை கோர்ப்போம்
> முன் சென்றோரோடு,
> நித்தியத்தின் கரையில்இரத்தம் தெளிக்கப்பட்டுப் பாடுவோர்
> கூட்டத்தை வாழ்த்துவோம்.[92]

விசுவாசத்தில் நாம் முன் சென்றோருடன் இருக்கிறோம். "நித்திய கரையில்" காணக்கூடியவராய் நாம் அவர்களுடன் சேர்ந்துக்கொள்வோம்.

மனிதர்கள் பலி செலுத்தும் போது தேவன் அவர்களுடைய பாவங்களைப் பொருட்படுத்தாவிட்டாலும் கூட, உண்மையில், கிறிஸ்துவே இரட்சிப்புக்கு வழியாக இருக்கிறார் (வசனம். 40; ரோமர் 3:25, 26). நம்மைப் போல், முன்னோர்கள் ஆவிக்குரிய சிந்தையில் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டனர்; அவரது இரத்தத்தால் சுத்திகரிக்கப்படுதல் இல்லாமல் இன்னும் அவர்கள் பூரணப்பட்டிருக்கவில்லை. "நம்மையல்லாமல்" முற்பிதாக்கள் பூரணப்படுத்தப்படவில்லை மேலும் "நன்மையானதொன்றை" நாம் இப்போது தேவனுடைய கிருபையின் மூலமாய்ப் பெற்றிருக்கிறோம் என்பது உண்மையுடன் கூறப்படலாம்.

நியாயப்பிரமாணத்தின்கீழ் மக்கள், இயேசுவின் ராஜ்யத்திற்கு நெருங்கி வரவில்லை என்றால், அவர்கள் உண்மையுள்ளவர்களாய் இருந்து அறிந்தது என்ன, நாம் விசுவாசத்தை எவ்வளவு அதிகமாய்ப் பற்றிக்கொண்டிருக்க வேண்டும்! ஆசிரியர் தனது வாசகர்களை - இன்று நம்மை - நாம் கர்த்தராகிய இரட்சகருக்கு உண்மையாக இருக்க வலியுறுத்தினார்.

## மேலும் ஆய்வுக்கு:
## எபிரெய நிருபத்தில் "சாட்சி"

புதிய ஏற்பாட்டில் "சாட்சி" என்பது μαρτυρέω (*மார்டுரியோ*) என்ற வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஒரு வினைச்சொல்லாக, இந்த வார்த்தை "நடக்கிற ஏதோ ஒன்றைக் காண" என்ற நவீன கருத்தை உடையதாக இல்லை. பெயர்ச்சொல் அடிப்படையில் "சான்றளிப்பவர்" அல்லது "சாட்சியைக் கொண்டு செல்பவர்." என்பது பொருள். 11:2, 39ல், "நற்சாட்சிபெற்றார்கள்" என்ற சொற்கள் *martureō*, மார்டுரியோ என்பதிலிருந்து வந்திருக்கிறது. 11:4ல் அதே வார்த்தை "சான்று பெற்றான்" என்றும் வசனம் 5-ல் "சாட்சிபெற்றான்" என்றும் மொழிபெயர்க்கப்படுகிறது. KJV மற்றும் NIV அப்போஸ்தலர் 22:20-ல் இந்த வார்த்தையை "இரத்தச்சாட்சி" என்று மொழிபெயர்க்கிறது மேலும் வெளிப்படுத்தல் 2:13; 17:6 இல் KJV இதே மொழிபெயர்ப்பைத் தருகிறது. இந்தப் பொருள் ஆரம்பகால

உலகளாவிய கிறிஸ்தவச் சமுதாயத்திலிருந்து தழுவப்பட்டது.

வேதவாக்கியங்களின் சான்றுகள் இயேசுவின் செயல்களுக்குக் குறிப்பாக அவரது உயிர்த்தெழுதலுக்குச் சாட்சி அளிக்கிறது. இந்தச் சாட்சி, நித்திய ஜீவனுக்கு வழிநடத்துகிற விசுவாசத்தை நாம் வளர்க்கத் தேவையான அனைத்தையும் நமக்கு வழங்குகிறது.

பழைய ஏற்பாட்டின் போற்றுதற்குரிய விசுவாசிகள் பெற்ற "சாட்சி" எபிரெயர் 11ல் குறிப்பிடப்பட்டுள்ள விசுவாசத்தின் அருமையான குணங்களின் ஒரு பகுதிக்குக் காரணமாகிறது. ஆபேல், ஏனோக்கு, நோவா போன்றவர்கள் அவருடைய பார்வையில் அவர்களுக்கான நியாயத்தீர்ப்பை அவர்கள் உறுதிபடுத்தும்படி, தேவன் அவர்களுக்கு வழங்கிய இத்தகைய சான்றை (அல்லது சாட்சியை) பெற்றனர். முழுமையான சிந்தையின் பிரகாரம் தனது தனிப்பட்ட வாழ்வில் பரிபூரணத்தை அடையாத நீதிமான் அல்லாத ஆபிரகாம், "தற்காலத்திலே காணாதவைகளை" குறித்த தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டான் (11:7 ல் நோவா செய்தது போல்). அவன் அவைகளை முழுமையாக விசுவாசித்தான், அவனுடைய விசுவாசத்தை "அவர் அவனுக்கு நீதியாகக் கணக்கிட்டார்" அல்லது "அதுஅவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" (KJV; ஆதி. 15:6).

ஏனோக்கை குறித்து எபிரெயர் 11:5ல் கொடுக்கப்பட்டிருக்கிற நேரடி சாட்சி அல்லது சான்று, "அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று" கூறுகிறது. "சாட்சியை" வார்த்தைகளால் அல்ல தெய்வீக செயல்பாடுகள் மூலம் கொடுக்கப்பட முடியும், ஆனால் விசுவாசத்தின் மூலம் ஒருவர் நீதிமானாக தெளிவான விழிப்புணர்வுக்குச் சரியான வார்த்தைகள் தேவைப்படும். இதுவே இன்றைக்குப் பலர் தேடுகிறது ஆகும்-அவர்கள் தேவனின் சாட்சியாக இருக்கிறார்கள் என்று அவர்கள் மிகவும் வலுவாக "உணர்கிறார்கள்." ஒரு சாட்சி அல்லது ஒருவனுக்குக் கொடுக்கப்பட்ட சாட்சியம் வெறுமனே ஒரு உணர்வைக் குறிக்காமல் ஒரு குறிப்பிட்ட செய்தியைக் குறிக்கிறது.

## கற்றுக்கொள்ள வேண்டியவை

### விசுவாசத்தின் தன்மை (11:1)

எபிரெயர் 11ல் இருந்து எடுத்துக்கொண்ட வரையறையின் படி, "விசுவாசம்" என்பது முழுமையான உறுதிப்பாட்டுடனான நம்பிக்கைக்கு ஒத்ததாகும். "உங்களிடம் விசுவாசம் இருக்கிறது ஆனால் என்னிடம் உண்மைகள் இருக்கின்றன" என்பதல்ல. கிறிஸ்தவம் என்பது பல அற்புதமான இயல்புகளைக் கொண்ட மற்றும் உண்மையான வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு மதம். வரலாற்று உண்மைகள் நம் விசுவாசத்தின் சாராம்சத்தைத்

தருகின்றன. “ஆகவே விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.” என்று இந்த விசுவாசத்தை உருவாக்குவதற்கான வழிமுறை பவுலால் ரோமர் 10:17ல் வலியுறுத்தப்படுகிறது. விசுவாசம் கடந்த கால நிகழ்வுகளை அடிப்படையாக கொண்டுள்ளது. இந்த கடந்த கால நிகழ்வுகளை பற்றி வேதாகமத்தில் பதிவுசெய்யப்படவில்லை என்றால் நமக்கு எதேனும் தெரிந்திருக்காது. வேதவசனங்கள் அத்தகைய விசுவாசத்தை உருவாக்க அத்தாட்சி அளிப்பதால், கிறிஸ்தவர்கள் திடமான விசுவாசத்தோடும், குழப்பம் நிறைந்த உலகை அமைதியான உத்தரவாதத்துடனும் எதிர்கொள்ள முடிகிறது. “விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது” என்று 11:1ல் NIV கூறுகிறது. விசுவாசம் என்பது “நாம் மேற்கொள்ள முடியும்” என்ற நம்பிக்கையாகும். விசுவாசம் என்பது “அவர்களுடைய கண்ணீர் யாவையும் [தேவன்] துடைப்பார்” என்ற நம்பிக்கையாகும் (வெளி. 21:4). வேதாகமம் சார்ந்த விசுவாசம் என்பது தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தேவன் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக நடத்துகிறாரென்று உறுதியாக நம்புவதாகும் (ரோமர் 8:28).

விசுவாசம் நமக்கு அற்புதமான காரியங்களைச் செய்கிறது. நமக்கு விசுவாசம் இருப்பதால், நாம் நம்புகிறோம். நமக்கு விசுவாசம் இருப்பதால், நாம் பரலோகத்தை வாஞ்சிக்கிறோம். நமக்கு விசுவாசம் இருப்பதால், நாம் பவுலுடன் சேர்ந்து, “நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்” என்று கூறமுடிகிறது (2 தீமோ. 1:12). விசுவாசம் கொண்டிருப்பது ஒரு அர்ப்பணிப்பை உள்ளடக்கியது. எபிரெயர் 11ல் குறிப்பிடப்பட்ட விசுவாசிகள் ஒவ்வொருவரும் தங்களுடைய விசுவாசத்திற்காக எதையாகிலும் செய்துள்ளனர். அந்த அர்ப்பணிப்பினால், “தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை” (வசனம் 16). அந்த அர்ப்பணிப்பினால், விசுவாசம் உள்ள ஒருவன் “கிறிஸ்தவன்” என்று அழைக்கப்படுவான் அதன் அர்த்தம் “கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவன்” அல்லது “சிறிய கிறிஸ்து” என்பதாகும்.[93]

ஒருவன் பார்க்க முடியாததை எப்படி அவன் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும்? “பார்ப்பது நம்பிக்கை தரும்” என்பது எபிரேயரின் கருத்தல்ல. மாறாக அது “விசுவாசித்துக் காண்பதாகும்.” நாம் பார்த்திருக்காதவற்றை நாம் நம்பி, விசுவாசத்தினால் அதைக் காண்பதற்கு ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம். எனினும், வேதாகம விசுவாசம் என்பது ஒருவன் ஏற்கனவே “பார்க்கிற” கொடுக்கப்பட்ட சத்தியங்களில் மிகவும் உறுதியாக இருப்பதாகும். மோசே

“அதரிசனமானவரைத்” (வசனம் 27) தரிசிக்க முடிந்தது. ஆபிரகாம் “அந்த நகரத்திற்குக் காத்திருந்தான்” (வசனம் 10) ஏனென்றால் அது அங்கு இருந்தது என்று அவன் விசுவாசித்தான். அவனுடைய “விசுவாசக் கண்களால்” அதை “பார்க்க” முடிந்தது. தேவன் அவனுடன் பேசி இருந்ததால், எங்கே அவர் இருந்தார் என்று அவன் அறிந்திருக்க வேண்டும்; நாம் “பரலோகம்” என்று அழைக்கிற அந்த நகரத்தில் தேவன் வாசமாயிருக்கிறார் என்று அவன் கருத்தில் கொள்ள முடிந்தது. நிச்சயமாக, அவனுடைய விசுவாசம் அவனிடம் கொடுக்கப்பட்டிருந்த சான்றுகளிலிருந்து வந்தது. நான் டோக்கியோவில் ஒருபோதும் இருந்ததில்லை, ஆனால் அந்த நகரம் இருப்பதாக நான் நம்புகிறேன். அது செய்தியில் இருந்திருக்கிறது, மேலும் அதைப் பார்த்தவர்களிடம் நான் பேசியிருக்கிறேன். என் உறவினர் பல ஆண்டுகளாக ஜப்பானில் ஒரு சுவிசேஷ ஊழியராக இருந்தார். அவருடைய நேர்மையை நான் நம்புவதால், டோக்கியோவைக் குறித்த அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்கிறேன். சாட்சிகளின் நம்பகத்தன்மையை ஏற்றுக்கொள்பவன் தனக்குக் கூறப்பட்டிருத்தவைகளை நம்புகிறான். மேலும் அவைகள் அனுமதிக்கும் தனது நம்பிக்கையைப் போல், உறுதியாக இருக்கமுடியும். பூமிக்குரியவைகளை எண்ணாமல் தங்கள் உயிரைக் கொடுத்தவர்களின் நம்பத்தகுந்த சாட்சிகளை நாம் கொண்டிருக்கிறோம், அவர்கள் கண்களினால் கண்ட சத்தியத்தைக் குறித்து அவர்கள் சாட்சி பகிர்ந்தார்கள் (1 யோவான் 1:1-3).

விசுவாசம் என்றால் “என் இரட்சிப்பைப் பற்றி நான் என்ன உணர்கிறேன்” என்பது அல்ல; மாறாக, வேதாகம விசுவாசம் என்பது நமக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தின் உண்மையான பொருளைத் தருகிறது. எபிரேயரில் உள்ள விசுவாசம் என்ற கருத்து, தேவன் மக்களிடமிருந்து எதிர்பார்க்கிற ஒரு செயலை உள்ளடக்கியது. தேவன் விரும்புகிறதும் மக்கள் செயல்படுத்த வேண்டியதுமான ஒரு வேலையாகிய, “தேவனுடைய கிரியையை” குறித்துக் கேட்டபோது, “அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது” என்று இயேசு பதிலளித்தார் (யோவான் 6:29). விசுவாசம் என்பது ஒரு தெய்வீக வரம் போல நம் மனதில் ஏதோவொரு அற்புதத்தைக் கொடுக்கும் ஒரு செயல் அல்ல. அதற்குப் பதிலாக, ஒரு திறந்த மனதில் அந்த விசுவாசத்திற்கான ஆதாரமாகத் தேவன் அளிக்கிற சான்றுகளால் உருவாக்கப்படுகிறது. இன்றைக்கு, பல ஊழியர்களிடம் “நான் விசுவாசத்தை எவ்வாறு பெற்றுக் கொள்வது?” என்று கேட்கும்போது, “நீங்கள் அதைச் சாதாரணமாகக் கேளுங்கள்” என்று அவர்கள் பதில் அளிக்கிறார்கள். இயேசு கற்பித்தது அது அல்ல. “விசுவாசம் என்பது நீங்கள் செயல்படுத்த வேண்டிய தேவன் விரும்புகிற செயல். விசுவாசத்தைக் காத்துக் கொள்வதற்கு நீங்கள் செய்ய வேண்டிய தேவன் விரும்புகிற ஏதோ ஒன்று உள்ளது.

விசுவாசத்தைப் பெற தேவையான வேலைகளைச் செயல்படுத்துவதே அதுவாகும்." என்று அவர் அழுத்தத்தோடு பதிலளித்தார். (யோவான் 6:28, 29 ஐ வாசிக்கவும்.)

நாம் சோதனைகளை எதிர்கொள்கையில், தேவன் நம்முடைய நன்மைக்காகவும் நம்முடைய விசுவாசம் பலப்படவும் எவ்வாறு அவற்றில் செயலாற்றியிருக்கிறார் என்பதைப் பார்க்கிறோம். நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரம் தேவனுடைய வார்த்தையில் நம்பிக்கை வைப்பதாகும். ஒரு இயற்கையான நிகழ்வுக்காகக் காத்திருப்பவர்கள் தாங்கள் விசுவாசத்தைப் பெற நீண்ட காலம் காத்திருக்க வேண்டும்.

## தேவன் இருக்கிறார் என்று வேதாகமம் எப்படி நிரூபிக்கிறது? (11:6)

தேவன் இருக்கிறார் என்பதை நிரூபிக்க ஒரு முறையான முயற்சியை வேதாகமம் செய்யவில்லை. இந்த வசனங்களில் காணப்படுகின்ற தேவனுடைய கிரியைகளுக்கான எல்லாக் கூற்றுகளிலும் அவரது பிரசன்னத்திற்கான அவநம்பிக்கை உடைய ஒருவனை நம்பச் செய்ய எந்த வாதமும் வழங்கப்படவில்லை என்று வேதவாக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தேவன் இருக்கிறார் என்பதை ஒருவன் மறுக்கிறான் என்றால் அவன் ஒரு "மதிகெட்டவன்" (சங். 14:1). பிடிவாதமாகவும் நிரந்தரமாகவும் அவரை நிராகரிக்கின்றவர்களை முடிவாகத் தேவன் விட்டுவிடுகிறார் (ரோமர் 1:18-24). தேவனைப் பற்றி நிச்சயமற்றதாக வேதாகமம் தொடங்கவில்லை, ஆனால் அவர் இருக்கிறார் மேலும் சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று என்ற நிச்சயத்துடன் தொடங்குகிறது (ஆதி. 1:1-3; யோவான் 1:1-3).

தேவன் என்ற கருத்து, தத்துவஞான வீண் பேச்சின் எண்ணத்திற்காக உண்டாக்கப்படவில்லை. அவர் உலகின் மாபெரும் உண்மையாக இருக்கிறார். அவர் இருக்கிறார் என்று நாம் விசுவாசிக்காவிட்டால், நாம் அவரண்டையில் சேர முடியாது. விசுவாசம், மனம் திரும்புதல், பாவ அறிக்கை மற்றும் ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஒருவன் அழைக்கப்பட்டு (யோவான் 1:11, 12), அவன் அதை அவ்வாறு செய்கிற பொழுது, அவன் இருளில் இல்லாமல், வெளிச்சத்தில் நடக்கிறான். விசுவாசமானது தெளிவற்றதும், அறியாமையினாலான உளவியல் ரீதியான மாறுபாடுள்ளதுமாக இருக்கவில்லை. தேவன் இருக்கிறார் என்பதை நிராகரித்தல் "பகுத்தறிவு இல்லாததைப் போலவே ஒழுக்கமற்றது."[94]

## ஆபேலின் விசுவாசமும் காயீனின் விசுவாசக் குறைவும் (11:4)

1966 ல் நியூயார்க் உலகக் கண்காட்சி மையத்தில், கிறிஸ்துவின் சபைகளின் கண்காட்சியில் நான் பணிபுரிந்தேன். கனடாவைச் சேர்ந்த

ஒருவர் அங்கு வந்தார், நாங்கள் பழைய ஏற்பாட்டையும் அதன் அற்புதங்களையும் பற்றிய ஒரு விவாதத்தைத் தொடங்கினோம். அவர் யோனா மற்றும் கடலின் பெரிய மீனின் வரலாற்றுக் கதையை நிராகரித்தார். நீங்கள் இயேசுவையும் அவர் கற்பித்தவற்றையும் விசுவாசிக்கிறீர்களா என்று நான் அவரைக் கேட்டேன், அதற்கு அவர் விசுவாசிக்கிறேன் என்று பதில் அளித்தார். இயேசு யோனாவின் வரலாற்றுக் கதையில் நம்பிக்கை வைத்து, அதை அவருடைய அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலின் ஒரு மாதிரியாகப் பயன்படுத்தினார் (மத். 12:38-40) என்பதைச் சுட்டிக் காட்டினேன். பழைய ஏற்பாட்டை அதன் வரலாறு மற்றும் தீர்க்கதரிசனங்களுடன், புதிய ஏற்பாடு தொடர்ந்து, அதன் முழு ஒப்புதலுடன் குறிப்பிடுகிறது. ஒருவன் பழைய ஏற்பாடு இல்லாமல் புதிய ஏற்பாட்டில் நம்பிக்கை கொள்ள முடியாது, அல்லது உண்மையில் ஒருவன் புதிய ஏற்பாடு இல்லாமல் பழைய ஏற்பாட்டில் நம்பிக்கை கொள்ள முடியாது. ஆபேல் இரண்டு ஏற்பாடுகளிலும் ஒரு வரலாற்று மனிதனாகக் குறிப்பிடப்படுகிறான் (மத். 23:35; லூக். 11:51; எபி. 12:24). அவன் வாழ்ந்த ஒரு மனிதன் என்றும், உலகில் முதன்முதலாக உடன்பிறப்பால் கொல்லப்பட்டான் என்றும் பொருள்படுகிற இந்த வேதாகமக் குறிப்புகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அன்றிலிருந்து ஒவ்வொரு கொலையும் - சகோதரன் அல்லது சகோதரியின் கொலையும், அதே உணர்வுடைய பாவமாகக் கருதப்படுகிறது.

தேவன் ஆபேலுக்கு அவனுடைய உண்மையான காணிக்கை பற்றி என்ன சாட்சியைக் கொண்டிருந்தார் என்று நமக்குத் தெரியவில்லை, ஆனால், “நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ? நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்; அவன் ஆசை உன்னைப் பற்றியிருக்கும், நீ அவனை ஆண்டுகொள்ளுவாய்” என்று அவர் காயீனிடம் வித்தியாசமாகக் கூறினார் (ஆதி. 4:7). தேவனால் அவனுடைய சகோதரன் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்குக் காயீன் பொறாமை கொண்டான், மேலும் அவன் ஒரு கடுமையான பாவத்தைச் செய்யத் துணிந்திருக்கிறான் என்பதைக் கர்த்தர் அறிந்திருந்தார். தனது இரையின் மீது பாயத் தயாராக இருக்கும் ஒரு சிங்கத்தைப் போலப் பாவத்தைச் சித்தரித்து, “பாவம் வாசற்படியில் படுத்திருக்கும்” (ஆதி. 4:7), என்று அவனை எச்சரித்தார். இருந்தாலும், அவனது பாவம் செய்யும் உந்தல்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் காயீன் கொண்டிருந்தான் என்று தேவன் குறிப்பிட்டார். நாம் தேவன் மீது சரியான விசுவாசம் கொண்டிருந்தால், பாவத்தைக் கட்டுப்படுத்துதல் நமது அதிகாரத்திற்குள் இருக்க முடியும். மனிதனின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்த வார்த்தைகள் பேசப்பட்டன, எனவே மனித இனம் நீதியின் வழியைப் பின்பற்ற இயலாதபடி செய்யும் “மொத்த ஒழுக்கக்கேடு” ஆதாமின் சந்ததியில் இல்லை. நம்முடைய விசுவாசம் உலகத்தையும்

அதின் பாவத்தையும் ஜெயிக்கிற ஜெயம் (1 யோவான் 5:4). “விசுவாசத்தினால் நீ செலுத்திய பலி உன்னுடைய இருதயத்தின் தன்மையையும் நேர்மையையும் வெளிப்படுத்தி உள்ளது. நீ நன்றாகச் செய்தாய், விசுவாசத்தில் நிலைத்திரு!” என்பதைப் போல ஒன்றை தேவன் ஒருவேளை ஆபேலிடம் கூறியிருப்பார்.

காயீனுக்குத் தேவனுடைய தண்டனை மிகவும் கடுமையானது என்று அவன் நினைத்தாலும் இரக்கமுள்ளதாக இருந்தது. காயீன், ஆபேலின் வரலாறு, நமக்கு நாமே திட்டமிட்டு ஆராதனை செய்தல் மிகவும் ஆபத்தானது என்பதை நாம் உணர்ந்து கொள்ளச் செய்வதாக இருக்க வேண்டும். ஆராதனையில் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருக்க மற்றும் நாம் செய்கிற எல்லாவற்றிற்க்கும் வல்லமையுள்ள விசுவாசம் அவசியம் என்பதைப் பழைய ஏற்பாட்டிலிருந்து இந்த எடுத்துக்காட்டுகள் வெளிப்படுத்துகிறது (கொலோ. 3:17).

### தேவன் சாட்சி கொடுத்தார் (11:4)

வசனம் 11:4 ன் படி ஆபேலுக்குச் சாட்சியம் கொடுத்தவர் யார்? தேவன் செய்தார்! எந்தப் பிரகாரத்தில் அல்லது எந்த ஆணையின் கீழ் இந்தச் சாட்சியம் அளிக்கப்பட்டு ஆணையிடப்பட்டது? தேவனுடைய நியாயஸ்தலத்தில் நாம் வேதாகமத்தைக் கேட்கிறோம். “தேவன் ஒரு வேதாகமத்தின் *மீது* ஆணையிடவில்லை. ஆணையிடப்பட்ட சாட்சியத்தை மற்றும் சாட்சிகளைக் கொண்டிருக்கிற வேதாகமத்தில் கொடுத்தார்: ‘இந்த ஜனங்கள் என்ன செய்தார்கள் என்று நான் பார்த்தேன், அவர்கள் உண்மையான மற்றும் சரியான பாதையில் இருந்தார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன்.’”[95]

### ஆபேல் மரணத்தில் பிரசங்கிக்கிறான் (11:4)

மரணம் ஆபேலின் கதையையோ அல்லது நமது வாழ்க்கை மற்றும் செல்வாக்கையோ முடிவுக்குக் கொண்டு வரவில்லை. ஆபேல் இன்னமும் என்ன சொல்கிறான் என்பதுதான் இந்த வசனத்தின் முக்கியத்துவம் ஆகும்! பல தனிநபர்கள் மரித்த பிறகு மிகவும் மதிக்கப்படுகிறார்கள். பலரின் மரணத்திற்குப் பிறகு அவர்களைக் கௌரவப்படுத்த நான் கற்றுக்கொண்டேன்.

நம்முடைய கிரியைகள் நம்மோடே கூடப்போம் (வெளி. 14:13), அவைகள் நம்முடைய வாழ்க்கையின்போது நாம் எப்போதும் போதித்த வார்த்தைகளை விட உரக்க போதிக்கக் கூடும். ஆபேலின் இரத்தம் பூமியில் இருந்து கூப்பிடுகிறது (ஆதி. 4:10). இது சிறப்பான கவிதை நடையில் இருக்கலாம் என்ற போதும், தேவன் இறுதியில் நீதிமானை நியாயப்படுத்துவார் என்ற உண்மையை அது வெளிப்படுத்துகிறது. ஆபேலின் இரத்தம் பெரிய பொருளைக் கொண்டிருக்கிறது என்றாலும், இயேசுவினுடைய இரத்தம் ஆபேலின் இரத்தத்தை விட நல்ல

விஷயங்களைப் பேசுகிறது (எபி. 12:24). ஆபேல் இயேசுவின் *நிழலாகப்* பார்க்கப்படலாம். அவனது இரத்தம் நீதிக்காகக் கூக்குரலிடுகிறது; ஆனால் இயேசுவின் இரத்தம் இரக்கத்திற்காகவும், மன்னிப்புக்காகவும், மனிதனின் பழிவாங்குதலின் முடிவுக்காகவும் கூக்குரலிடுகிறது (ரோமர் 12:17-21).

**மரிக்காத மனிதன் (11:5)**

"ஏனோக்கு தேவனுக்குப் பிரியமானவனாயிருந்தான்" என்பதால், அவன் நீதிமான் என்று நாம் கருதக்கூடும் (வசனம் 5). பழைய ஏற்பாட்டில் ஏனோக்கு, எலியா ஆகிய இருவர் மட்டுமே மரிக்காமல் வாழ்ந்தனர். மரணத்தின் வாயிலாகச் செல்லாமல் நமது பிதாவைச் சந்திப்பது என்ன ஒரு கௌரவமாக இருக்க வேண்டும்! நம்மில் பலர் மரணத்திற்குப் பயப்படுகிறார்கள், ஆனால் நாம் நிழலின் பள்ளத்தாக்கு வழியாகக் கடந்து சென்றாலும் தேவனுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். அத்தகைய கௌரவத்தை அளித்ததன் மூலம் பரலோகத்தில் உள்ள நம் தகப்பன் என்ன அற்புதமான அன்பை இந்த இருவருக்கும் வெளிக்காட்டினார்!

**நோவா வேறுவிதமாகச் செயல்பட்டிருந்தால் என்ன நடந்திருக்கும்? (11:7)**

"கர்த்தாவே, உம்முடன் என்னுடைய தனிப்பட்ட உறவின் காரணமாக, என்னைக் காப்பாற்ற நான் உம்மை நம்புகிறேன், ஆனால் ஒரு பேழையைக் கட்டுவதற்கு என்னால் நீண்ட காலம் வேலை செய்ய முடியாது." என்று கூறியிருந்தான் என்று வைத்துக் கொள்வோம், ஜலப்பிரளயத்திலிருந்து அவனையும் அவனது குடும்பத்தாரையும் காப்பாற்றியிருந்திருப்பானா? நிச்சயமாக இல்லை. அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும் (கலா. 5:6). ஒருவனுடைய ஆரம்பக் காலக் கீழ்ப்படிதல் அச்சத்தினால் தூண்டப்படலாம், ஆனால் அது முதிர்ச்சியடைந்த விசுவாசமாக வளரலாம். பவுல் வரவிருக்கிற நியாயத்தீர்ப்பின் அறிவினால் "கர்த்தருக்குப் பயப்படுதலை" அறிந்து கொண்டான் அதையே மற்றவர்களுக்கும் போதித்தான் (2 கொரி. 5:10, 11). அவன் பேலிக்ஸ் உடன் செய்தது போல, தனக்குச் செவி கொடுப்பவர்களிடத்தில் கர்த்தருக்குப் பயப்படுதலை உண்டாக்குவதற்காக பவுல் முயன்றான். (அப். 24:25).

நோவாவின் விசுவாசம் ஞானஸ்நானத்தில் நமது கீழ்ப்படிதலுக்கு ஒப்பனையாய் இருக்கிறது (1 பேதுரு 3:20, 21). விசுவாசத்தினால் அவன் ஆபிரகாமுக்கு ஒப்பான ஒரு நீதியைப் பெற்றுக் கொண்டான் (ஆதி. 15:6). நோவா "விசுவாசத்தினால் வாழ்ந்தான்"; அதற்கு மேலும், அவன் "நீதிமான்" என்று அழைக்கப்பட்டான். உண்மையில், அவன் மிக

உயர்ந்த மும்மடங்கு பாராட்டைப் பெற்றான்: “நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்” என்று ஆதியாகமம் 6:9 கூறுகிறது.

### நோவா, விசுவாசத்தினால் இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டிருந்தானா? (11:7)

“பெரும் நீர்ப்பரப்புக்கு வெகு தூரத்தில் இருந்து பிரம்மாண்டமான பேழையைக் கட்டுவது எவ்வளவு முட்டாள்தனம்!” நோவா அந்தச் சமூகத்தில் கேலிக்குரியவன் போல இருந்தான். விசுவாசமுள்ள மனிதன் அடிக்கடி சமுதாயத்தால் அவ்வாறு நடத்தப்படுகிறான்.

தேவனிடமிருந்து வரும் வார்த்தை மிக உயர்ந்த அதிகாரத்துடன் வருகிறது என்பதைப் புரிந்து கொண்டவர்களுக்கு நோவா ஒரு எடுத்துக்காட்டு. அதில் எதையும் சேர்க்க அல்லது குறைக்க அவன் தைரியம் கொள்ளவில்லை. “நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்” நோவாவின் கீழ்ப்படிதலுக்கு வேதாகமம் சிறந்த சொல்லழுத்தத்தைக் கொடுத்துள்ளது (ஆதி. 6:22).

முன்னூற்றைந்து முழ நீளமாகப் பேழையை அமைக்க நோவா தைரியம் கொண்டிருக்கவில்லை (ஆதி. 6:15-ஐ பார்க்க). அலபாமா, மான்ட்கோமரிக்கு அருகிலுள்ள ஒரு சிறையில், பேழையும் ஜலப்பிரளயமும் கொண்ட கலைச் சித்தரிப்புகளுடன் சில வேதாகம உரைகளின் ஓவியங்களைக் வழங்கினேன். ஒரு இடத்தில், நான் அந்த மனிதனிடத்தில் “நோவா முன்னூறு முழத்திற்குப் பதிலாக முன்னூற்றைந்து முழ நீளமான பேழையை அமைத்திருந்தால் என்ன நடந்திருக்கும்?” என்ற கேள்வியைக் கேட்டேன்: “அது ஒரு பாறை போல் மூழ்கியிருக்கும்!” என்று ஒரு மனிதன் பதிலளித்தான்.

நோவா பேழையைக் கட்டுவதில் கீழ்ப்படிந்தான். அவன் பலகைபாவுவதில் ஒரு கர்வாலி மரப்பலகையைச் சேர்க்கவில்லை. அவன் வெளியே மட்டும் கீல் பூசத் துணியவில்லை. தேவனுடைய ஒவ்வொரு கட்டளைக்கும் அப்படியே கீழ்ப்படிந்தது அவனுடைய விசுவாசத்தைக் காண்பிக்கிறது. தேவன் அவருடைய வார்த்தையில் கற்பித்ததைவிடக் குறைவாக நாம் செய்தால், அது ஏற்றுக்கொள்ளப்பட்ட கீழ்ப்படிதல் அல்ல. உண்மையான விசுவாசம் கட்டளையிட்டபடி வெளிப்படையாகவே கீழ்ப்படிவதாகும்.

இந்தவிதமாகக் கீழ்ப்படிந்தது, நோவாவை சட்டத்தை அதிக மதிப்பவனாகச் செய்ததா? ஒவ்வொரு பலகையையும், அவன் நேர்த்தியாகச் செதுக்கி, அவனது பேழையின் சட்டத்தில் வைத்தது, ஜலப்பிரளயத்தில் இருந்து தன்னுடைய இரட்சிப்பைப் *பெறுவதாக* நினைத்தான் என்று நீங்கள் நம்புகிறீர்களா? தாங்கள்

ஞானஸ்நானத்தின் மூலம் இரட்சிப்பைப் பெறுகிறதாக நினைத்து சிலர் ஞானஸ்நானத்தைச் சட்டபூர்வமான நிலைக்கு வற்புறுத்துகிறார்கள் என்று வாதிடுகிறவர்கள், தங்களைத் தாங்களே நியாயப்படுத்திக் கொள்கிறார்கள். தேவனுக்குக் கவனமாகக் கீழ்படிவது அவசியமான சட்டபூர்வமானதல்ல, "சட்டத்தின் நிமித்தமாக மட்டும் ஒரு சட்டத்திற்குக் கீழ்ப்படிவது" என்பதாக இது வரையறுக்கப்படலாம்.

ஜலப்பிரளயம் வரும் என்ற தேவனுடைய வார்த்தையை மட்டுமே நோவா ஆதாரமாகக் கொண்டிருந்தான், ஆனால் அவன் நம்பிக்கை வைத்து, தேவன் கூறியதை அப்படியே செய்வதற்கு அது போதுமானதாக இருந்தது. உங்களைப் பற்றி என்ன? அவனுடைய குடும்பத்திற்கு வெளியிலிருந்த எவரையும் மனம் மாறச் செய்யாததிலிருந்து நோவா தனது சமுதாய மக்களை அடைவதில் தோல்வியடைந்தான் என்பதாகத் தெரிகிறது, ஆனால் அவன் ஒரு தோல்வியை அடையவில்லை. அவர்களிடம் நீதியைப் பிரசங்கிக்க அவன் முயற்சி செய்தான் (2 பேதுரு 2:5). நம்மைச் சுற்றியுள்ளவர்கள் இழந்து போன நிலையில் இருப்பதைத் தேர்வு செய்தாலும், தேவனுடைய வார்த்தையில் நாம் உண்மையாக இருந்தால், நாம் தோல்வி அடைவதில்லை. "ஆண்களிடமும் பெண்களிடமும் நாம் சொல்வது மட்டுமல்லாமல், தேவன் நமக்குக் கூறுகிறதை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்கிறோம் என்பதினாலும் அவர்கள் கவரப்படுகின்றனர்"[96] பேழையின் கதவுகள் மூடப்பட்டு, பெருமழை பெய்ய ஆரம்பித்தபின், அவர்கள் மனந்திரும்ப இன்னும் கொஞ்சம் நேரம் கொடுக்கப்பட்டிருந்தால், "சுவிசேஷகனாகிய நோவா எவ்வளவு பெரியவர்" என்று நாம் பெருமை அடைந்திருப்போம்! எனினும், மனந்திரும்புதலுக்கான தேவனுடைய நேரம் எப்போதும் முடிவடைந்து விடுகிறது, "இனி காலம் செல்லாது" இப்பொழுதே "அநுக்கிரககாலம்," இப்பொழுதே "இரட்சணிய நாள்" என்று அவர் கூறுவார் (2 கொரி. 6:2).

### துக்கம் நிறைந்த இவ்வுலகத்தின் வழியாக அலைந்து திரிதல் (11:8)

ஒவ்வொரு விசுவாசப் பயணமும் ஒரு புனித யாத்திரை ஆகும். "எபிரெயர்" என்பது "ஆற்றின் மீது கடப்பது." போல "கடந்து செல்லும்" என்ற பொருளாகும். ஆபிரகாம் அறியாத இடங்களுக்குச் சென்றபோது தேவன் மீது நம்பிக்கை வைத்தான்.[97] அவன் எப்பொழுதும் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தில் முன்னேறினான் (வசனம் 8). பெரும்பாலான அன்னியர்கள் இறுதியில் சொந்த தேசத்திற்குச் செல்ல வேண்டும் என விரும்புவார்கள், ஆனால் கோத்திரப் பிதாக்கள் அவ்வாறு செய்வதில்லை. இது, வனாந்தரத்தில் இஸ்ரவேலின் பாவமாக இருந்தது. இஸ்ரவேலர்கள் தள்ளிவைக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டாலும், தங்களுடைய அடிமைத்தன தேசத்தைத் தங்கள் தேசமாகக் கருதி திரும்பிச் செல்ல விரும்பினார்கள். ஆபிரகாம், ஈசாக்கு

மற்றும் யாக்கோபு இதை ஒருபோதும் அவ்வாறு கருதவில்லை (11:8, 15).

எஞ்சியிருக்கும் நாட்களில் கூடாரங்களில் வாழ்கிறதை எதிர்பார்த்து, தங்களுடைய தேசத்தை விட்டுச் செல்வது ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் கடினமாக இருந்திருக்க வேண்டும். ஒரு புதிய தேசத்திற்கும் கலாச்சாரத்திற்கும் செல்வது குறிப்பாகச் சாராளின் இதயத்தை உடைத்து இருந்திருக்க வேண்டும். மகிழ்ச்சியான வீட்டில், ஒரு மனைவி தன்னுடைய கணவன் எங்குச் சென்றாலும், அவனைப் பின்பற்றிச் செல்ல ஆயத்தமாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தில், தேவனிடமிருந்து ஒரு நேரடி அழைப்பு இருந்தது; அந்த அழைப்பைப் பின்பற்றுவதைத் தவிர ஆபிரகாமுக்கு உண்மையான வழி எதுவும் இல்லை. கானானில் ஆபிரகாமுக்குத் துன்பங்கள் ஏற்பட்டது, அவனது உடலை அடக்கம் செய்வதற்கான ஒரு நிலம் தவிர, எந்தச் சொந்த நிலத்தையும் அவன் ஒருபோதும் கொண்டிருக்கவில்லை. எகிப்தை விட்டுச் சென்ற பின் நாற்பது ஆண்டுகள் அவனது சந்ததியார்கள் அலைந்து திரியும் யாத்ரீகர்களாக இருந்தனர்.

மனித சிந்தனையின் படி, தம்முடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற தேவன் ஒரு நீண்ட காலத்தை எடுத்துக் கொள்கிறார்; ஆனால் அவற்றை எப்போதும் நிறைவேற்றுகிறார். நம்முடைய வீடு இந்த உலகம் அல்ல, ஆகவே நாம் அதில் எங்கு வாழ்ந்தாலும் என்ன வேறுபாடு வந்துவிடப் போகிறது? நாம் எப்போதும் இங்கே அந்நியராக இருக்கிறோம் (பிலி. 3:20). ஆபிரகாம் எல்லாவற்றிலும் தேவனை நம்பினான் என்பது வசனம் 8-ல் இருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயமாகும். ஆகவே நாமும் அவ்வாறு செய்ய வேண்டும். கானானிலும் மேன்மையான நகரத்தை எதிர்பார்த்திருக்கிறான் என்பதை அவன் அறிந்திருந்தான் (வசனங்கள் 10, 16).

“நான் தேவனை நம்புகிறேன். நான் அவரது வாக்குறுதிகளை நிச்சயமாக நம்புகிறேன். நான் அவரை ஒருபோதும் நிராகரிக்க மாட்டேன் ஆனால் அவருடைய சித்தத்தை இறுதிவரை கடைபிடிப்பேன்.” என்று நாம் எங்கிருந்தாலும் சந்தேகமின்றிக் கூறி, நாம் நிலைத்திருக் முடியும் என்ற நிச்சயமான இலக்கை ஒரு நாள் அடைவோம் என்று நாம் எதிர்பார்ப்போமாக.

**நம்புவதைவிடச் சந்தேகப்படுவது எளிது (11:11)**

சாராள் குறித்தகாலத்தில் ஒரு குமாரனைப் பெறுவாள் என்று கர்த்தருடைய தூதனிடம் இருந்து அவள் முதலாவது கேட்டபோது, அவள் நகைத்தது இயற்கைதான், எனினும், அவளது சந்தேகம் விசுவாசமாக மாறியது. அவளது கர்ப்பம் “செத்துப்போன” பின்பு அந்தக் கர்ப்பத்திலிருந்து ஈசாக்கு வந்ததால், அவனது பிறப்பு

கிட்டத்தட்ட ஒரு உயிர்த்தெழுதலைப் போலவே இருந்தது, அனைத்து விஷயங்களிலும், குறிப்பாக ஆவிக்குரிய அந்த விஷயத்தில், அதை நம்புவதைவிடச் சந்தேகப்படுவது எளிது. சாராளின் கர்ப்பத்தில் ஒரு குழந்தை வளர்ந்தபோது, அவள் இனியும் சந்தேகிக்க முடியாது.

விசுவாசத்திற்கான எல்லா ஆதாரங்களுக்கும், சந்தேகிப்பவன் போதிய முக்கியத்துவம் கொடுப்பதற்குத் தவறுகிறான். பெரும் எண்ணிக்கையிலான சந்தேகிப்போரை எதிர்கொள்ளப் பெரும்பாலானோரால் தனியாக நிற்க முடிவதில்லை; எனவே, குறைந்தபட்ச வெளிப்புற தோற்றத்திலாவது, அவர்கள் பெரும்பான்மையுடன் செல்ல முடிவு செய்கிறார்கள்.

"குறைந்தபட்ச எதிர்ப்பின் வழியில் தொடர்வது பெரிய, ஆறுகளையும் ஏழை மக்களையும் உருவாக்குகிறது." நோவா, ஆபிரகாம், யோசேப்பு, மோசே ஆகியோரின் விசுவாசம் இதனால்தான் வேதவாக்கியங்களிலும் தேவனுடைய சிந்தையிலும் நிலைத்திருக்கிறது. சரியானதை நமது இதயங்களில் தீர்மானித்து, குறுகிய பாதையைப் பின்பற்ற நாம் தைரியமான தேர்வைச் செய்ய விருப்பமுடையவர்களாக இருக்க வேண்டும், சிலர் வாழ்விற்கு வழிநடத்தும் குறுகிய வழியைப் பின்பற்றுகின்ற பொழுது பெரும்பாலோர் அழிவுக்கான அகலமான வழியைப் பின்பற்றுகின்றனர் (மத். 7:13, 14).

### அந்நியரும் பரதேசிகளும் (11:13)

ஒரு அன்னியனாக இருப்பது என்பது பெரும்பாலும் சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவனாக இருப்பது என்று பொருள். கிறிஸ்தவர்களாக, நாம் அப்படியாக இருக்கிறோம் (பார்க்க 1 பேதுரு 1:1; 2:11) மேலும் உலகின் விரோதத்தை அனுபவிக்கிறோம். அதை எதிர்பாருங்கள்! அந்தக் கருத்துக்குப் பழக்கமானவர்களாகுங்கள். எதற்காக? ஏனென்றால், அதன் அருவருப்பு, தேவனுடைய சாபம், பரிசுத்தக்குலைச்சல், மற்றும் அவருடைய பெயருக்கும் அவருடைய சித்தத்திற்கும் நிந்தனை ஆகியவற்றுடனான உலகத்துடன் ஒன்றும் நமக்குப் பொதுவாக இல்லை. நாம் உலகத்திலிருந்து அழைக்கப்பட்டிருக்கிறோம், அந்த உண்மையை மனதில் கொண்டு தினமும் வாழ வேண்டும் (யோவான் 15:19; 17:14, 16). பூர்வ காலக் கோத்திரப் பிதாக்கள் எங்கும் சுற்றித் திரிந்தனர். எதிரிகள் அவர்களது துரவுகளைத் தூர்த்துப் போட்டனர், மேலும் உண்மையில் அவர்கள் ஒரு சொந்த இடத்தை வைத்துக் கொள்ளவில்லை. ஒருவரது சொந்த தேசத்திலிருந்து வெளியே இருப்பதாக உணர்வது பெரும்பாலானவர்களுக்குப் பிரச்சினையாக இருக்கும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலும் கூட, பரதேசிகள் அல்லது அலைந்துதிரிகிறவர்கள் என்று கோத்திர பிதாக்கள் தங்களைப் பற்றிக்

கூறினார்கள் (ஆதி. 23:4; 28:4; 47:9). அந்த விதத்தில் நம்மைப் பற்றிப் பேசுவதில் நாம் எவ்வளவாகச் சிந்தித்துப் பேச வேண்டும்! அது நம்மை "பரலோகத்திற்குரியவர்கள்" என்பதில் அதிகக் கவனம் செலுத்துபவர்களாக்கும்.

ஒரு நாடு இல்லாமல் ஒருவர் இருப்பது பெரும்பாலான மக்களால் ஒரு சோகமாகக் கருதப்படுகிறது. பாஸ்போர்ட்கள், விசா மற்றும் அனைத்து மற்ற நடைமுறைகளுடன் இணைத்துக் கொண்ட பயணம், குடிபெயர்தல், மற்றும் குடியேறுதல் ஆகியவைகளைச் சில இடங்களில் குடியுரிமை இல்லாமல் அடைய முடியாது.

கிறிஸ்தவன் இத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்கிறான். இரண்டாவது அல்லது மூன்றாம் நூற்றாண்டு ஆவணங்களில், ஆரம்பகாலப் பரிசுத்தவான்களின் மனப்பான்மை நன்கு விவரிக்கப்பட்டது: "அலைந்துதிரிகிறவர்களாக மட்டுமே, அவர்கள் தங்களது சொந்த நாடுகளில் வாழ்ந்தார்கள். அவர்கள் குடிமக்களைப் போன்று அனைத்திலும் தங்கள் பங்கைத் தாங்கினார்கள், மேலும் அவர்கள் எல்லாக் கஷ்டங்களையும் அன்னியர்களாகச் சகித்தார்கள். ஒவ்வொரு வெளிநாடும் அவர்களுக்கு ஒரு தாயகமாகவும் ஒவ்வொரு தாய் நாடும் வெளிநாடாகவும் இருக்கிறது."[98]

இந்த முரண்பாடான கூற்று ஒரு பரிசுத்தவானின் ஆவியாக இருக்க வேண்டும். பவுல் ஒரு ரோம குடிமகனாக, தனது உரிமைகளைப் பாதுகாக்க சீசருக்கு வேண்டுகோள் விடுத்தான் (அப். 25:10), ஆனால் அவன் வெளிப்படையாக ஆலோசனை சங்கத்தில் வாக்குகள் ஏதாகிலும் பாதிக்கும் படிக ஒன்றும் செய்யவில்லை. இந்தப் புதிய "சமய மரபை" அகற்றுவதற்கு, ஒரு வகையான அரசியல் முயற்சியில் அவனது மாற்றத்திற்கு முன்புவரை அவன் சுறுசுறுப்புடன் இருந்தான். அவனது தீர்ப்பில், யூத பரிசுத்தவான்கள் எங்குக் காணப்பட்டாலும் அங்குக் கிறிஸ்தவர்களைச் சிறைப்படுத்துவதற்கான சட்ட அங்கீகாரத்தை அவன் பெற்றான் என்ற கிறிஸ்தவர்களின் "பிரிவு," சட்டம் மற்றும் ஒழுங்கை மிகவும் சீர்குலைப்பதாக இருந்தது (அப். 22:4; 26:10).

## இவர்களெல்லாரும் விசுவாசத்தில் மரித்தார்கள் (11:13)

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் மிகுந்த பாக்கியவான்கள் (வெளி. 14:13). மரணம் நம்மில் பலருக்கு மிகவும் பயங்கரமானது என்ற ஒரு முடிவை அது கொண்டுள்ளது; அநேகமாக எப்போதும், நமக்கு அன்பானவர்களை நாம் விட்டுச் செல்லவும், மரணத்திற்குப் பின் என்னவாகும் என்றும் அஞ்சுகிறோம். நமது மாமிச உடல்கள் சிதைந்துவிடும் என்று நாம் அறிந்திருக்கிறோம்; நாம் ஆவிக்குரிய உடல்களில் வாழ்வோம் என்பதாக வேதாகமம் போதிக்கிறது என்பதையும் நாம் அறிகிறோம். மரணத்தை ஜெயிப்பதில் நமது

விசுவாசம் வெற்றி பெற்று, நம்மை உண்மையான வெற்றியாளர்களாக்குகிறது. “விசுவாசமே ஜெயம்!” அது நமக்காக உலகத்தை ஜெயிக்கிறது (1 யோவான் 5:4). “ஜெயம்!” என்ற வார்த்தை நிகோஸ் (νῖκος) என்பதிலிருந்து வந்தது. “நைக்” என்ற பிராண்ட் பெயரும் இதிலிருந்து தான் வந்தது. வாழ்க்கையின் சோதனைகள் விசுவாசத்தால் ஜெயமாக்கப்படுகின்றன. மரணத்தின் கடைசியில் மிக அற்புதமானதை நாம் காண்போம்; அதன்பின் விசுவாசம் அவைகளை நமக்குச் செய்திருக்கிறதை விடவும் இந்த விஷயங்கள் தெளிவாக இருக்கும்.

**வீட்டிற்குப் பயணம் செய்வதில் விருப்பம் (11:13-16)**

கிட்டத்தட்ட எல்லோரும் அலைந்து திரிவதில் இறுதியாகச் சோர்வடைந்து அவர்களது மீதமுள்ள நாட்களில் அவர்கள் வாழக்கூடிய ஒரு வீட்டைத் தேடுகிறார்கள். நாம் எல்லோரும் ஒரு “தாயகத்தை” தேட வேண்டும். வேலையை அல்லது செல்வ வளத்தைத் தேடுவதற்காகப் பெரிய நகரங்களுக்குச் செல்லும் பலர் இறுதியில் ஓய்வு பெற தங்கள் சொந்த நகரங்களுக்கு அல்லது நாடுகளுக்குத் திரும்புகிறார்கள். கோத்திர பிதாக்கள் பூமிக்குரிய வீட்டை மட்டும் நாடி இருந்திருந்தால், அவர்கள் நிச்சயமாக ஆபிரகாம் செய்தது போல் “ஊர்” என்ற ஊருக்குத் திரும்பி வந்திருக்க அல்லது எகிப்திற்குச் சென்று இருந்திருக்கக் கூடும். எனினும், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அவருடைய தேவைகளைச் சார்ந்தது என்று தெரிந்ததால், திரும்பி வருவதற்கான நோக்கம் அவர்களிடம் இல்லை.

நமது சந்தோஷமான குழந்தைப்பருவத்தையும், சொந்த நகரத்திற்குத் திரும்புவதையும் எவ்வளவு அடிக்கடிப் பேசுகிறோம்! நிச்சயமாக, நம்மால் ஒருபோதும் முடியாது. நாம் விட்டுவிட்ட ஒன்று, ஒருபோதும் மாறாததாக இருக்காது. கோத்திர பிதாக்கள் தங்கள் பூமிக்குரிய வீடுகளில், குறிப்பாக அவர்கள் விட்டுச் சென்றிருந்த தேசத்தில் அதிகக் கவனம் செலுத்தவில்லை (வசனம் 15). அவர்களுடைய - நம்முடைய வீடு பரலோகத்தில் காத்துக் கொண்டிருக்கிறது. பரலோகத்தைத் தங்களது இலக்காகக் கொண்டிருப்பவர்கள், “எந்த மண்ணுலக நலனுக்காகவும் மிகுந்த பரலோக சிந்தையை உடையவர்களாக” இருக்கமாட்டார்கள்; மாறாக, அவர்கள் பூமியில் நன்மை செய்ய அதிக விருப்பமுடையவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சரியான வரிசையில் தங்களது முன்னுரிமைகளைக் கொண்டிருப்பதால், அவர்கள் எந்தச் சமூகத்திலும் மதிப்புமிக்கவர்கள். கோத்திர பிதாக்களைக் குறித்துத் தேவன் பெருமிதம் கொள்கிறார் மேலும் அவர்களுடைய தேவனாக இருப்பதற்கு வெட்கப்படவில்லை (யாத். 3:6). அவர் உங்களுடைய தேவனா? அவர் உங்கள் நிமித்தம் வெட்கப்படுவதற்குக் காரணம்

உள்ளதா?

இந்த வாழ்க்கையில் நமது திருப்தி, பரம வீட்டைக் காணும் நமது வாஞ்சையைக் குறைக்கிறதா? இப்போது, நான் என் வீட்டை முற்றிலுமாக அனுபவிக்கிறேன், ஆனால் எனது உண்மையான மகிழ்ச்சி என் குடும்பத்தினர் - எனது மனைவி, குழந்தைகள், மற்றும் பேரக் குழந்தைகள் மத்தியில் காணப்படுகிறது. அவர்கள் இல்லாமல், வீடு வீடாக இருக்காது. எனினும், முதியவனாக, நான் பரலோகத்தை மிக அதிகமாக நோக்கிப் பார்க்கிறேன். முதியவர்களாகவும் பலவீனர்களாகவும், அற்புதமான பரலோகம் எப்படி இருக்கும் என்பதை முழுமையாக நாம் உணர்ந்துகொள்கிறோம்.

பரலோகத்திற்கான விருப்பம் வளர எது உதவுகிறது? இது அநித்தியமானவைகளை விடப் பரமஈவைக் காணும் நமது விசுவாசத்தின் ஆற்றல். கோத்திர பிதாக்கள் நித்தியமான ஒன்றாகிய “மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்,” அதே போல் நாமும் விரும்புகிறோம், விசுவாசத்தினால் காணப்படுகிறவைகளை விடப் பரலோக மேன்மையை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இது நாம் பரம வீட்டைத் தேட வற்புறுத்துகிறது.

ஆபிரகாமோ அல்லது வேறு எந்தக் கோத்திரப் பிதாவோ, இந்த வாழ்க்கையில் தேவனுடைய வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலைப் பெற்றதில்லை. “வாக்குத்தத்தம்பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள்” (வசனம் 13).

## நம்மால் வெட்கப்படுகிறதில்லை (11:16)

தேவன் அவர்களைத் தம்முடையவர்கள் என அழைப்பதிலும், அவர் சரியாக “அவர்களது தேவன்” என்று அழைக்கப்படுவதிலும் வெட்கப்படுவதில்லை என்பதைத் தெரிந்து கொள்வதில் இஸ்ரவேலர்கள் பெருமை கொண்டனர். எனினும், பல நூற்றாண்டுகள் கழித்து, அவருடைய குமாரனில் விசுவாசம் வைக்க மறுத்துவிடுகிறதில் அவர்கள் வெட்கப்பட்டிருக்க வேண்டும். தேவனைச் சொந்தமாக்கிக் கொள்வதில் பொதுவாக உங்கள் நண்பர்களும் சக பணியாளர்களும் உங்களை வெட்கப்படுத்தினது உண்டா? நமது தேவன் நமது ஆத்துமாக்களை உற்சாகப்படுத்த உங்களுடன் தொடர்பு கொண்டிருக்க விருப்பமுடையவராக இருக்கிறார். நாமும் அவருடன் தொடர்பு கொண்டிருக்க விருப்பமுடையவர்களாக இருக்க வேண்டும். எங்கும் எவருடனும் உங்களால் முடிகிற அளவு அவரைப் பற்றிப் பேசுங்கள். கிறிஸ்துவுக்கான உங்களது உற்சாகத்தைக் குன்றச் செய்யும் தனிமைப்படுத்துதல் அல்லது விமர்சனத்திற்கான அச்சத்தை விலக்குங்கள்.

**ஆபிரகாமின் சோதனையும் தேவனுடைய இயல்பும் (11:17-19)**

வாக்குத்தத்தத்தின் மகனைக் கொலை செய்வது தேவனுக்கு அவசியமானதாக இருந்ததா? நம்மைப் பொறுத்த வரை மனிதனுடைய புரிந்து கொள்ளுதலின்படி அவ்வாறு இல்லை. ஈசாக்கைக் கொல்லும்படி தேவன் ஆபிரகாமிடம் கட்டளையிட்டிருக்க முடியாது, ஏனெனில் அது நீதிக்குரிய சட்டத்தை மீறுவதாகும் என்று இம்மானுவேல் கான்ட் கூறினார்.[99] அவிசுவாசிகளும் சந்தேகவாதிகளும் முரண்பாடுகள் கண்டுபிடிப்பதில் மகிழ்வது என்பது, தேவனின் இயல்பைப் பற்றி அவர்கள் அறிந்த அறிவிலேயே தவிர வேறொன்றும் இல்லை.

இந்தப் பலிதான் மனிதனுடைய விசுவாசத்திற்கு மேன்மையான சோதனையாக, அடுத்து வருகிற அனைத்து தலைமுறையினருக்கும் ஒரு எடுத்துக்காட்டாகக் கொடுக்கப்படுகிறது. "விசுவாசத்தின் தகப்பன்" அவருடைய விசுவாசத்திற்கான மிகப் பெரிய சோதனையை எதிர்கொள்ள வேண்டியதாய் இருந்தது. இந்த விஷயத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பை எதிர்ப்பது ஆபிரகாமால் நினைத்துப் பார்க்க முடியாதது; நமக்கும் அதே மாதிரியாகத்தான் இருக்க வேண்டும். இன்னும் திடமான விசுவாசத்தை நாம் வளர்த்துக்கொள்ள நமது இருதயங்களைச் சாத்தியமாக்க எது சிறந்தது என்பதைத் தேவன் மட்டுமே அறிந்திருக்கிறார். இந்தச் சோதனையை எதிர்கொள்ளுகிற பொழுது அது ஆபிரகாமின் விசுவாசத்தைக் குலைக்கவில்லை, ஆனால் எதிர்காலச் சோதனைக்காக அதைப் பலப்படுத்தியது. இந்தச் சோதனையில் அவன் பெற்ற வெற்றி "நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி உற்சாகம்" அளிக்கிறது (6:18). ஆபிரகாம் சோதனையைத் தாங்கி முடியுமேயானால், நம்மால் ஏன் தாங்க முடியாது? தேவனால் கூடாதது ஒன்றுமில்லை.

மனிதனுக்கான துன்பம் பெரும்பாலும் முடிவில்லாததாகவும் பயனற்றதாகவும் தெரிகிறது. இருப்பினும், விசுவாசக் கண்கள் மூலம், அது தாழ்மையுள்ள கீழ்ப்படிதலுக்கு மக்களை எவ்வாறு வழிநடத்தும் என்பதை நாம் காணலாம் (5:8, 9). நாம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை அடைவோம் என்ற நம்பிக்கையை இது மேலும் அதிகப்படுத்துகிறது (2 கொரி. 4:16-18). தாது பொருளைத் தூய்மைப்படுத்தி, அதைச் சுத்தமாக மாற்றி, கலப்படமற்ற, முன்பை விட வலுவான உலோகமாக்கும் நெருப்பைப் போல் துன்பத்தை நம்மால் காண முடிகிறது. அதே விதமாக, எஜமானின் உபயோகத்திற்காக நாம் பொருத்தமுள்ளவர்களாக ஆக்கப்படுகிறோம். நமக்கு உதவ இன்னும் சிறப்பான பொருத்தமுள்ளவராகச் செய்ய இயேசு சோதிக்கப்பட்டுப் புடமிடப்பட்டார் (எபி. 2:18).

"மிகவும் துன்புற்ற உங்கள் மூதாதையர்களைப் பாருங்கள்; சோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஆபிரகாமை பற்றி

எண்ணிப்பாருங்கள்." என்று எபிரெயர் நிருமத்தின் ஆசிரியர் கூறுகிறான். அவனது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மகனைப் பலியிடும்படி தேவன் அவனிடம் கூறுவதைவிட விசுவாசத்திற்கான எந்தச் சோதனையும் பெரிதானதாக இருந்திருக்க முடியாது (ஆதி. 22:2).

## தந்தையின் விசுவாசம் குமாரனின் விசுவாசம் ஆயிற்று (11:20-22)

ஈசாக்கு வளர்ந்து முதுமையடைந்து, அவனது கண்பார்வை மங்கினது, ஆனால் நம்பிக்கையின் பார்வையை அடைந்து அவனது தகப்பன் ஆபிரகாமின் விசுவாசத்திற்குத் திரும்பி, இவனும் தனது குமாரர்களை ஆசீர்வதித்தான். இதேபோன்று, யாக்கோபு அவனது வாழ்க்கையின் முடிவை எட்டுகையில், எப்பிராயீமுக்கும் மனாசேக்கும் வரவிருக்கும் பெரிதானவைகளை முன்னுரைத்தான் (ஆதி. 48:1-20). யோசேப்பு விசுவாசத்தினால் வரும் காலத்தைப் பார்த்தான். இஸ்ரவேலர்கள் எகிப்தை விட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இடத்திற்குச் செல்வதையும், அவனது மரணத்தையும், மேலும் அவனுடைய எலும்புகளை எகிப்திலிருந்து எடுத்துச் சென்று, கானானில் புதைப்பது எப்படி என்பதையும் அவன் கண்டான் (வசனம் 22).

நமது வாழ்க்கைச் சரித்திரத்தையும் பாரம்பரியத்தையும், பிள்ளைகளிடத்திலும் பேரப்பிள்ளைகளிடத்திலும் நாம் அதிகமாகக் கூற வேண்டும். அவர்கள் தங்களது சலுகைகளின் கீழ் வாழாமல், தானாக வாழ நாம் அவர்களுக்குப் போதிக்க வேண்டும். நமது வாழ்நாள் முழுவதிலும் தேவன் நம்மை எவ்வாறு ஆசீர்வதித்து இருந்திருக்கிறார் என்பதையும், அடிக்கடி துக்ககரமான நிகழ்வுகளையும் கூட எவ்வாறு ஆசீர்வாதமானதாக மாற்றி இருந்திருக்கிறார் என்பதையும் நாம் அவர்களுக்கு உணர்த்துவோமாக.

நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய முன் ஏற்பாட்டை விளக்கும் கதைகளைக் கேட்கும்படியாகப் பிள்ளைகளைத் தகப்பன்மார்கள் வற்புறுத்த வேண்டும். நாம் அவர்களுக்கு அவ்வாறு செய்தால் அவர்களுடைய எதிர்காலத்திற்கான அதிகத் தைரியத்தையும் விசுவாசத்தையும் அது அவர்களுக்குக் கொடுக்கும்.

## சோதனைகளின் மத்தியில் விசுவாசம் (11:23-27)

மோசேயின் பெற்றோரது விசுவாசத்தின் காரணமாக அவன் பிறந்த நேரத்தில் இருந்த ஆபத்தில் காப்பாற்றப்பட்டான் (வசனம் 23). அச்சமற்ற, உண்மையுள்ள மருத்துவச்சிகள் சிப்பிராள் மற்றும் பூவாள் ஆகியோரின் உதவியின் மூலம் அம்ராமும் யோகெபேத்தும் அவர்களது விசுவாசத்தைக் காண்பித்தனர் (யாத். 1:15-22). தங்கள் குழந்தையின் பிரசவத்திற்கு வேறு யாரையும் அவர்கள் நம்ப முடியவில்லை.

மோசே "நீ ஒரு எபிரெயன்; தேவன் தெரிந்துகொள்ளப்பட்ட

ஜனங்களில் ஒருவன், எகிப்தியனல்ல." என்ற தனது தாய்/செவிலியின் சொற் கேட்டு வாலிபனாக வளர்ந்தான். யோகெபேத்தின் விசுவாசம் அவனிடம் இருந்தது. தனது பெற்றோரின் உயிர்கள் அவன் நிமித்தம் ஆபத்துக்குள்ளாக்கப்பட்டதை அவன் அறிந்தபோது அது ஏன் அவ்வாறு இருக்கமுடியாது? கடந்த காலங்களில் ஒருவேளை நீண்டகாலமாக, நாம் எப்படிக் கனிவாக உணவளித்து, அவர்களுக்காக அக்கறை காட்டி இருக்கிறோம், ஒரு நோயின் காரணமாகத் தூக்கமில்லாத இரவுகளைக் கழித்திருக்கிறோம் என்பனவற்றைப் பற்றி நமது குழந்தைகள் நினைவூட்டப்பட வேண்டும். இந்த நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலம், நமக்கான மற்றும் இந்த உலகிற்கான அவர்களின் முக்கியத்துவத்தை நாம் நமது குழந்தைகளுக்குக் காட்ட முடியும்.

*ஹர்ல்பட் வேதாகமக் கதைகளை* என் முந்தைய காலங்களில் எனது தாய் எனக்கு வாசித்தார்கள். எனக்கு அவைகள் எல்லாம் தெரிந்ததால், இன்று எல்லாவற்றிற்கும் மேலாக அவைகள் என் விசுவாசத்திற்குக் காரணமாக இருக்கலாம். தாய்மார்களே, உங்களது விசுவாசம், அன்பு, மற்றும் அக்கறை ஆகியவைகளை உங்கள் பிள்ளைகள் செயலில் காணும் போது அவைகள் தலைமுறை தலைமுறைகளாக வாழ முடியும்.

பரலோக அதிகாரத்திடம் அவன் சமர்ப்பித்திருந்ததால் ஒவ்வொரு அழிவிற்கான முடிவுகளிலும், மோசே அதிகாரத்தை எதிர்ப்பதை அவன் ஒரு பக்குவப்பட்டவனாகச் செய்ய வேண்டியிருந்தது. அவன் குறைந்த சமூக அந்தஸ்துடைய மக்களுக்காக அரச உரிமையை விட்டு விடுதல், அரண்மனையின் மகிழ்ச்சியைவிட மோசமாக நடத்தப்படுதல், அற்புதமான செல்வத்தை மறந்து வறுமையில் நாடோடியாக இருத்தல் மற்றும் தனது ஜனங்களுக்காகவும் தேவனுக்காகவும் "கிறிஸ்துவின் நிந்தனையை" கூட ஏற்றுக் கொள்ளுதல் ஆகியவற்றை அவன் தேர்வு செய்தான். "காணக்கூடாத அவரைக் காண்பதற்கு" நாம் காத்திருக்கிறோமா? நாம் காலம் அல்லது நித்தியத்தின் அடிப்படையில் தேர்வுகளைச் செய்கிறோமா? அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளவற்றை அல்லது தேவனுடைய வழி என்று நமக்குத் தெரிந்ததைத் தேர்வு செய்கிறோமா? நாம் "பலனைப் பார்த்து," வருகிற ஒருவராகிய கிறிஸ்துவுடன் இருக்கிறதை எதிர்பார்த்தால் நம்மால் சரியான தேர்வைச் செய்ய முடியும்.

மோசே தேவன் மீது கொண்டிருந்த ஆழ்ந்த மரியாதையினால் பயத்தை ஜெயங்கொண்டான். சரீர சம்பந்தமான வியாதி அல்லது துன்பத்தில் மட்டுமே விசுவாசத்தைப் காண்பதில்லை. இந்த உலகில் எந்தத் தீங்கும் இல்லை - பார்வோன் இல்லை, சாத்தான் இல்லை என்று பாசாங்கு செய்வது இல்லை. மாறாக, இது உண்மைத் தன்மையை ஏற்றுக் கொண்டும் இன்னும் நன்மையானவைகளைக் காண்கிறதுமான கற்பனை செய்வதற்கு அப்பாற்பட்ட காரியங்களைப்

பார்க்கிறது. ஜெபத்தில் பரலோகத்திற்குள் பிரவேசித்து, நமது தேவைகளைப் புரிந்துகொண்டு, இப்போதும் உதவி செய்கிற இனிமையும் அன்பும் நிறைந்த ஒருவரை அணுகும் பாக்கியத்தை இது காண்கிறது (எபி. 4:15, 16). "காணக் கூடாதவரைக் காண்பதை" காட்டிலும் மகிமை வாய்ந்ததாக வேறு எதுவும் இருக்க முடியாது.

**பாவத்தின் சந்தோஷங்களும் விவேகமான தேர்வுகளும் (11:25, 26)**

வெளிப்படையாக, பாவத்தில் இன்பம் இருக்கிறது. எதுவும் இல்லை என்று யாராகிலும் கூறினால் அவன் பொய்யன் அல்லது முட்டாள். எனினும், பாவத்தின் இன்பம் ஏமாற்றக்கூடியது; அது முதலில் கவர்ச்சிகரமானதாகத் தோன்றுகிறது ஆனால் இறுதியில் கசப்பான ஏமாற்றத்தை உடையது. குற்றத்தின் சுமையுடன் கூடுதலாக, பாவம் எவ்வாறு துயரத்திற்கு வழிநடத்தும் என்பதற்குத் தாவீது ராஜாவின் கதை சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது. ராஜாவின் புதிய மனைவியாகிய பத்சேபாள், தனது மகனாகிய சாலொமோன் சிங்காசனத்தைப் பெற்றுக் கொள்வதை உறுதி செய்வதற்குக் கபடதாரியானாள். அவளும் தாவீதும் எப்பொழுதாகிலும் ஒன்றாகச் சேர்ந்து மகிழ்ச்சியுடன் இருந்தார்களா, அல்லது அதற்குத் தகுதி உடையவர்களாக இருந்தார்களா என்பது சந்தேகமே. ராஜாவின் பாவங்களைக் குறித்து இஸ்ரவேலர் அனைவரும் பேசியிருக்க வேண்டும்.

பத்சேபாளுடனான அவனது பாவத்தைத் தொடர்ந்து, தாவீதின் ஆட்சி குழப்பத்திற்கு உள்ளானது. தாவீதுக்கும் பத்சேபாளின் வேசித்தனத்திற்கும் பிறந்த குழந்தை விரைவில் மரித்தது. தாவீதின் குமாரர்களில் ஒருவனான அம்னோன், தன் சகோதரியாகிய தாமாரை பலவந்தம் செய்து கற்பழித்தான், பின்பு அந்தப் பெண்ணுடன் பிறந்த சகோதரனாகிய அப்சலோம், அம்னோனைக் கொன்று பதில் செய்தான். பின்னர், அப்சலோம் தனது தந்தைக்கு எதிராக ஒரு கலகம் செய்து, தாவீதின் கட்டளைக்கு மாறாகக் கொல்லப்பட்டான். அவனுடைய படைத்தலைவன் அறிவுரை கூறி தடுக்க முயன்ற இஸ்ரவேலைத் தொகையிடுவதற்கான ராஜாவின் ஆணை, ஒரு பயங்கரமான பேரழிவை ஏற்படுத்தியது. வாழ்க்கை இத்தகைய நிகழ்வுகளால் நிரப்பப்பட்டிருக்கிறது. பாவம் மிகுந்த மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் உறுதியளிக்கிறதாகத் தெரிகிறது, ஆனால் அது வாக்குறுதியளிக்கப்பட்டதற்கு எதிரானதை வழங்குகிறது. பாவம் ஒருபோதும் திருப்தி அல்லது சமாதானத்தை அளிக்காது. தேவனிடமிருந்து வரும் மன்னிப்பால் மட்டுமே அதைச் செய்ய முடியும்.

ஒவ்வொன்றிலும் பகுத்தறிவாலும் பொருளாதாரத் தரத்தாலும் ஒரு இஸ்ரவேலனாக வாழ்வதற்கான மோசேயின் தேர்வு, ஒரு முட்டாளின் முடிவாகும். தங்கம், வெள்ளி ஆகியவற்றைவிட ஆவிக்குரிய

காரியங்களை மதிப்புமிக்கதாக அவன் அங்கீகரித்ததில் அவனது விசுவாசத்தின் மேன்மையானது காணப்படுகிறது. கூடாரங்களில் வாசம்பண்ணினபோது அவன் ஆபிரகாமை விட மிக அதிகமாக, அவனது சோதனைகள் “கிறிஸ்துவின் நிந்தை” உடன் ஒப்பிடும் அளவிற்கானதைச் சகித்திருந்தான் (வசனம் 26). நீங்கள் மிகவும் கஷ்டப்பட்டுத் துன்பப்படும் பொழுது, கர்த்தர் எப்படிச் சகித்திருந்தார் என்று தியானித்துப் பாருங்கள். இத்தகைய சிந்தனை உங்களுக்கு அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்ற உதவும். அவன் எகிப்தில் இருந்து தப்பி ஓட விருப்பம் கொண்டிருந்த போது - குறைந்த பட்சம் தற்காலிகமாக - எகிப்தின் பிரபுக்கள் மோசேயை எவ்வாறு கேலி செய்திருக்க வேண்டும்! தைரியமான விசுவாசத்தைக் கொண்டிருங்கள்! நீங்கள், கூட, “பலனை” பார்க்க முடியும் (வசனம் 26).

**மறைந்துள்ளவற்றைப் புரிந்து கொள்ளுதல் (11:27)**

எபிரெயர் ஆசிரியர் பயன்படுத்த வெற்றிகரமான விசுவாசத்தின் நிகழ்வுகள் பல இருந்தன, ஆகவே அவர் அவைகள் அனைத்தையும் சொல்லாமல் தவிர்த்து விட்டார். அதற்குப் பதிலாக, அவர் ஒரு சிலவற்றைத் தேர்வு செய்தார். தேவன் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே மோசேயைச் சந்தித்த வரலாறு எபிரெயரில் அவ்வாறு தவிர்க்கப்பட்ட ஒன்றாகும் (யாத். 3). நெருப்பில் இருந்த ஒரு புதரையும், அது அக்கினிஜுவாலையினால் வெந்து போகாமல் இருந்ததையும் கண்டது மோசேக்கு குறிப்பிடத்தக்க ஒரு வாய்ப்பாக இருந்தது. மோசே அதரிசனமானவரைத் தரிசித்து, அவன் சர்வவல்லவரிடம் நெருக்கமாக வந்துவிட்டான் என்பதை அறிந்தான். அவன் மீண்டும் சீனாய் மலையில் உணர்ச்சி மிக்க நிகழ்வுகளினால் சந்தேகத்திற்கிடமின்றிப் பயந்திருந்தான்.

இஸ்ரவேலரை அடிமைத்தனத்திலிருந்து காப்பாற்றுவதற்காக அபிஷேகம் செய்யப்பட்டவன் என்று மோசே அறிந்து கொண்டபோது, அவன் எகிப்துக்குத் திரும்பும்படி தேவனுடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்தான். அவன் எப்படிப் பொறுமையாக இருந்தான்: எகிப்தில் நாற்பது வருஷமாகச் சிறந்த மரியாதையைச் சம்பாதித்து, அதன் பிறகு நாற்பது வருஷம் வனாந்திரத்தில் தாழ்த்தப்பட்டிருந்தான்! தேவன், அவனுடைய விஷயங்களில் எப்பொழுதும் பொறுமையுள்ள விசுவாசத்தை எதிர்பார்க்கிறார். விசுவாசத்தினால் மோசே எகிப்தை விட்டு ஓடிச்சென்றிருந்து, மீண்டும் விசுவாசத்தினால் திரும்பி கீழ்ப்படிந்தான். மோசே கற்பனையில் கூட நினைத்திராதபோது, தேவன் அவனைத் தெரிந்தெடுத்தார், அந்த வேலைக்குத் தான் தகுதியற்றவன் என்று அவன் கருதினான், நாற்பது வருடங்களுக்கு முன்பு இது நிகழ்ந்திருந்தால் தான் முழுவதும் தகுதியானவன் என்று அவன் நினைத்திருக்கக் கூடும். ஜனங்களின் வாழ்க்கையில் அவர்கள்

எதிர்பார்த்திராத சந்தர்ப்பங்களில் தான் அவர்களைக் கொண்டு பெரிய காரியங்களைச் செய்யும்படிக்கு தேவன் தெரிந்தெடுக்கிறவராக இருக்கிறார்.

## ஆட்டுக்குட்டியின் இரத்தமும் குழந்தைகளின் இரட்சிப்பும் (11:28)

சிறுவர்கள் இரட்சிக்கப்படுவதில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் எவ்வாறு செயல்பட முடியும்? நேரடியாக ஏற்றுக்கொள்ளக் கூடிய தொடர்பு காணப்படவில்லை. இருப்பினும், கற்பனை செய்துபாருங்கள், எப்புன்னே என்னும் பேர் கொண்ட எபிரெயன் தன் வீட்டு வாசல் நிலையில் ஆட்டுக்குட்டியின் இரத்தம் பூசப்பட வேண்டிய அவசியத்தைக் கற்றறிந்த பின் தன் வீட்டிற்குள் நுழைந்தான். அவன் தன் மனைவியாகிய மாராவிடம் சொன்னான், "நாம் முன்வாசல் நிலையில் இரத்தத்தைப் பூச வேண்டும்" என்றான். "நம் வீட்டின் அந்த அளவிற்கு குழப்பத்தைக் கொண்டிருக்கமாட்டேன். நம்மால் குழந்தையைக் காப்பாற்றும் விதமாக ஒரு சிறிய குறுக்கு வழியைக் கண்டுபிடிக்க முடியும். அது நம் தோற்றத்தையே கெடுத்துவிடும். நம்மையும் மற்றும் நம்மை நேசிக்கிறவர்களையும் காப்பாற்றும் விதமாகத் தேவனுடைய அன்பில் நாம் நம்பிக்கைக் கொள்ள முடியும். தேவன் அவைகளுக்குப் பின்பு, இதைவிட அவர்கள் பெரிய தவறுகள் செய்திருந்தாலும்கூட, அவரால் மற்ற ஜனங்களையும் காப்பாற்ற முடிந்தது. ஆகவே, இப்படிப்பட்ட குழப்பங்களை ஏற்படுத்தாமல், அவருடைய இரக்கங்களின் மேல் நம்பிக்கை வைக்கிறவர்களாகவும் மற்றும் அவரை நேசிக்கிறவர்களாகவும் இருப்போம்" என்று அவள் பதிலளித்தாள். இதன் விளைவாக அவர்கள் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை.

இந்தச் சூழ்நிலையில் என்ன சம்பவித்திருக்கும்? கோசானிலுள்ள ஒவ்வொரு உண்மையுள்ள எபிரெயக் குடும்பமும், அந்த இரவில் தங்கள் வீட்டு வாசல் நிலையில் பளிச்சென்று தெரியும் விதமாக இரத்தத்தைப் பூசியிருப்பார்கள் என்று நம்மால் நிச்சயிக்க முடியும்.

## இஸ்ரவேல் இரட்சிக்கப்பட்டது எப்போது (11:29)

யாத்திராகமம் 14:30 சொல்கிறது, "இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து இரட்சித்தார்"; 1 கொரிந்தியர் 10:1, 2-ல் பவுல் சொல்லும் காரணங்களைச் சிலர் நிராகரிக்கக் கூடும். அவர் சொன்னார், மேகம் மற்றும் கடலில் மூழ்கி "மோசேக்குள் இஸ்ரவேலர்கள் ஞானஸ்நானம் பெற்ற" தருணத்தில் இரட்சிக்கப்பட்டனர். பஸ்காவின் இரத்தம் தெளிக்கப்பட்டதன் மூலம் எகிப்திலே இஸ்ரவேலர் "இரட்சிக்கப்பட்டனர்," எனவே ஞானஸ்நானத்திற்கு முன்பு இரட்சிப்பு வரும் என்று சொல்ல முன்வருகிறவர்கள். "கடல் தண்ணீரில்,

மேகத்திற்குக் கீழ் அவர்கள் ஞானஸ்நானம் பெறும் முன்னரும், இஸ்ரவேலர் எகிப்தில் இருக்கும்போதும் பஸ்கா மூலம் இரத்தத்தைச் சந்தித்த போது இரட்சிக்கப்பட்டனர், நாம் இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டோம்" என்று சொல்ல முன் வரலாம். இதற்கு மாறாக நமது "கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானத்தை" செங்கடல் "ஞானஸ்நானத்தின்" போது நிகழ்ந்த இஸ்ரவேலின் இரட்சிப்புடன் பவுல் ஒப்பிடுகிறார்.

தண்ணீரைக் கடந்து செல்வதன் மூலம் இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட்டனர், நாமும் அவ்வாறே இரட்சிக்கப்பட்டோம் (மாற்கு 16:16; 1 பேதுரு 3:21). பஸ்கா இரத்தத்தினாலான இரட்சிப்பு என்பது முதற்பிறப்பு மரணத்திலிருந்து இரட்சிக்கப்படுதல் ஆகும், அது எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படும் இரட்சிப்பு அல்ல. அடிமைத்தனம் என்பது இன்றைய பாவத்தின் அடிமைத்தனத்தை மிகவும் தெளிவாக மாதிரிப்படுத்துகிறது, ஆகையால், செங்கடல் ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானத்தை மாதிரிப்படுத்துகிறது, அதன் மூலம் இரட்சிப்புக் காணப்பட்டது. 1 கொரிந்தியர் 10:1, 2-ல் பவுலின் மூலம் இந்தக் கருத்துச் சொல்லப்பட்டது (பார்க்க கலா. 3:26, 27). இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட்ட எகிப்தியர்கள் மூழ்கடிக்கப்பட்ட "அந்த நாள்லே" இருந்தது, என்று மோசே எழுதினான் (யாத். 14:30).

**தெய்வீக அதிகாரம் (11:29)**

சர்வ வல்லவர் மூலம் கட்டளை கொடுக்கப்படாதபோது அல்லது போதனை அவ்வாறு அர்த்தம் கொள்ளாத போது விசுவாசத்தினால் நாம் செயல்பட முடியாது. செங்கடலில் தேவன் "முன்னேறுங்கள்" என்றபோது, இஸ்ரவேலர்கள் விசுவாசத்தினாலே கடந்து செல்ல முடிந்தது (யாத். 14:15, 16). "போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்று நாம் செயல்படும்படி சிலவற்றைத் தேவன் வெளிப்படுத்தியிருந்தால், ஆனால் எப்படிப் போக வேண்டும் என்று தேவன் நமக்குச் சொல்லவில்லை என்றால், அதன் அர்த்தம் பிரயாணம் செய்யும் விதம் நம்மைப் பொறுத்தது. சிலர் விலங்கின் முதுகில் பிரயாணம் செய்கையில், அல்லது சிறுவர்கள் விஷயத்தில், குழந்தைகளை அவர்களுடைய தாய்மார்கள் சுமந்து செல்கையில், சில இஸ்ரவேலர்கள் நடந்து சென்றனர். சிலதை செய்யும்படியான முறைமையைத் தேவன் விசேஷப்படுத்தியிருந்தால், நாம் வேறு வழியைப் பயன்படுத்தக் கூடாது. அது தெய்வீக அதிகாரத்தை மீறுவது ஆகும்.

பிரகடனக் கூற்றுக்கள், கட்டளைகள், உதாரணங்கள், மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்ற குறிப்பிட்ட செயல்பாடுகளில் தேவனுடைய அங்கிகாரத்தைப் புதிய ஏற்பாடு நமக்குக் கொடுக்கிறது.

இன்று வாழும் எந்த நபருக்கும் நேரடியாகவோ அல்லது குறிப்பிட்டோ எந்த வேதாகமக் கட்டளையும் கொடுக்கப்படவில்லை. கட்டளைகள் இப்போது நமக்குப் பொருந்துமா இல்லையா என்பதைத் தர்க்க ரீதியான கணிப்பைப் பயன்படுத்தி நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய ஏற்பாட்டில் எங்கேயும் இவ்வாறு சொல்லப்படவில்லை, "மார்டல் பாஸ், உங்கள் பாவங்களின் மன்னிப்பிற்காக நீங்கள் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்." ஆயினும், அப்போஸ்தலர் 2:38-லிருந்து நான் ஊகித்துக் கொண்டேன். பெந்தெகொஸ்தே நாளில் பங்குபெறும் ஒவ்வொருவரும் தங்களுடைய பாவத்திற்காக மனந்திரும்புவது அவசியமாயிருந்தது. நான் பாவம் செய்துள்ளேன், என்னுடைய பாவம் நிறைந்த செயலுக்காக, நான் பாவமன்னிப்புப் பெற விரும்புகிறேன். என்னுடைய பாவங்கள் அவர்களுடையது போல் இல்லாவிட்டாலும்கூட, பாவமன்னிப்பிற்காகக் கொடுக்கப்பட்ட கட்டளைக்கு இந்த ஜனங்கள் செய்ததுபோல், நானும் செய்தாக வேண்டும்.

தேவனுடைய கட்டளையின் பொதுவான அதிகாரத்தில் கிறிஸ்தவர்களுக்கென்று அனுகூலமான வரையறை உள்ளது. உதாரணமாக, ஒரு அப்போஸ்தல கட்டளையானது கிறிஸ்தவர்களின் கூடுகையைக் குறிப்பிடுகிறது (எபி. 10:25), ஆனால் கூடுகிற இடம் பற்றி விளக்கமாக எதுவும் சொல்லப்படவில்லை, மற்றும் அது நம்முடைய கரங்களில் விடப்பட்டுள்ளன. வாய்ப்பை உருவாக்குதல் என்பது அனுகூலத்தின் சங்கதியாயிருக்கிறது.

"இஸ்ரவேலர்கள் கடலைக் கடந்து செல்வதைக் கண்டோம், இதைச் செய்யும்படிக்கு இஸ்ரவேலருக்குத் தேவனால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பின், நிச்சயமாக நாமும் செய்ய முடியும் என்பது உறுதி" என்று எகிப்தியர்கள் வாதம்பண்ணியிருக்கலாம். ஆயினும், இது இஸ்ரவேலருக்கு மட்டுமே மேகஸ்தம்பத்தின் கீழ் கடல் வழியே செல்ல அனுமதிக்கப்பட்டது, எகிப்தியர்களுக்கு அல்ல. நாமும் உத்தேசமாக இவ்விதமாக நம்பியிருக்கக்கூடும், ஆராதனையில் இசைக் கருவிகளைத் தாவீது கொண்டிருப்பதற்கான கட்டளையாக இருந்தது, ஆகவே நாமும் அவ்வாறு செய்யலாம் (2 நாளா. 29:25). ஆயினும், தாவீதுக்குச் செய்யும்படிக்குத் தேவனால் அதிகாரம் கொடுக்கப்பட்டது என்பது பழைய முறைமைப்படி ஆகும், ஆனால் இந்த விதிமுறைகள் இன்றைய காலத்திலுள்ள நமக்குப் பொருந்தாது (ரோமர் 7:1-6; 2 கொரி. 3:1-11; கொலோ. 2:14).

## விசுவாசம் செயல்படும்போது, இரக்கம் பயனுள்ளதாகிறது (11:30, 31)

"பலமாகவும், திடமனதுடனும்" இருக்கும்படிக்கு யோசுவா உற்சாகப்படுத்தப்பட்டான் (யோசுவா 1:9), ஆனால் இந்த மிகப் பெரிய எதிர்ப்பின் மத்தியில் திடமனதின் வைராக்கியத்தை நிலைநிறுத்த

வேண்டியவனாய் இருந்தான். யோர்தான் நதியைக் கடக்கும்போதும், மற்றும் எரிகோவைப் பிடிக்கும்போதும் அவன் விசுவாசத்தினாலே செயல்பட்டான். எரிகோவின் அலங்கம் அசைக்க முடியாததாகக் காணப்பட்டிருக்கலாம், ஆனால் விசுவாசத்தினாலே அதை ஏழு நாட்கள் சுற்றிவளைத்தபடியினால் அது இடிந்து விழுந்தது.

நாம் இரட்சிக்கப்பட்ட போது, கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம் (எபே. 2:8, 9). ஆயினும் தேவனுடைய கிருபை செயல்படுவதற்கு, ஜீவனுள்ள விசுவாசம் அவசியமாயிருக்கிறது. விசுவாசம் மாத்திரமே "செத்தது" என்றும் "பயனற்றது" என்றும் அழைக்கப்படுகிறது (யாக். 2:17, 20).

நாம் இப்படியாகச் சொல்லலாம், "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு எரிகோவின் மதில்கள் ஏழு நாட்கள் சுற்றிவளைக்கப்பட்டபோது அது விழுந்தது." இதே போன்று ராகாப் இஸ்ரவேலருடைய வேவுகாரரை பாதுகாத்ததன் மூலம் தன் விசுவாசத்தைக் காண்பித்தபோது (அவளுக்குக் கிடைத்த ஆதாரங்களினாலே) கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டாள் அல்லது நீதிமானாக்கப்பட்டாள். யாக்கோபு 2:25 இதையே நமக்குப் போதிக்கிறது, விசுவாசத்தோடு கூடிய "கிரியையினாலே அவள் நீதிமானாக்கப்பட்டாள்" என்று கூறுகிறது. விசுவாசத்தினால் மட்டுமே ஒருவன் நீதிமானாக்கப்படுவான் என்று - எபிரெயர் ஒருபோதும் போதிக்கவில்லை - புதிய ஏற்பாட்டின் வேறு எந்தப் புத்தகத்திலும் அவ்வாறு போதிக்கப்படவில்லை. ஆத்தும இரட்சிப்பைக் கருதாமல், ஒருவனுடைய சகமனிதனுடைய கண்களுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுதலைக் குறித்து மட்டுமே யாக்கோபு பேசுகிறார் என்று சிலர் நினைக்கின்றனர். யாக்கோபு 2:14: "என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை *இரட்சிக்குமா*?" என்கிறது. யாக்கோபு இரட்சிப்பைக் குறித்துப் பேசுகிறார், மற்றவர்களுடைய கண்களுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுதலைக் குறித்து அல்ல.

## சூழ்நிலையின் நன்நெறி கோட்பாடுகள்?

எகிப்திலுள்ள மருத்துவச்சிகள் மூலம் (யாத். 1:15-21), மற்றும் ராகாப் மூலம் சொல்லப்பட்டவை பொய்கள் கலந்துள்ளன என்பது அவ்வப்போது செய்யப்பட்ட கிறிஸ்தவ நன்நெறி ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இருவரும் வசனங்களால் ஆதரிக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது, ஆனாலும் இந்த விஷயங்களில் கேள்வி எழுகிறது. பழைய ஏற்பாட்டில் பெரிய தீங்கைத் தடுக்கும் விதமாகப் பொய் சொல்வது பாவமாகக் கருதப்படுவதில்லை என்ற தோற்றம் அளிக்கப்படுகிறது. எகிப்தில் ஒன்றும் அறியாத

குழந்தைகள் கொல்லப்படுவதைத் தடுக்கும் விதமாக மருத்துவச்சிகள் பொய் சொன்னார்கள், எரிகோவிற்குள் புகுந்த வேவுகாரர்களைக் காக்கும் விதமாக ராகாப் பொய் சொன்னாள். இரண்டிலும் உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

புதிய ஏற்பாட்டில் தேவன் விஷயங்களை வித்தியாசமாக, உத்தேசத்தின் அடிப்படையில் கையாளுகிறாரா என்று வாதிடும்படியாக உள்ளது. ராகாப் தேவனுடைய பிள்ளைகளுடன் இருக்க விரும்பி, தனது நம்பிக்கையைச் செயலின் மூலம் காண்பித்தாள். அவள் பாவ வாழ்க்கையை வெறுத்திருக்க வேண்டும், ஆகவே வேவுகாரரைக் காப்பாற்றியது மூலம் துன்மார்க்கருக்கு எதிரான வெறுப்பைக் காண்பித்தாள். இஸ்ரவேலர்கள் செய்திருக்கக் கூடியது போலவே அவளும் செயல்பட்டுள்ளாள்; அதனடிப்படையில், இருதயப் பூர்வமாகவும், வாழ்க்கையிலும், அவள் தேவனுடைய பிள்ளைகளுடன் இணைந்துவிட்டாள்.

**நகரங்களின் அழிவு (11:31)**

நகரங்களையும் மற்றும் அதன் மக்களையும் அழிக்கும்படிக்கு தேவன் இட்ட கட்டளைகளைக் குறித்த பழைய ஏற்பாட்டுச் சம்பவங்களில் “நியாயம்” இல்லை என்று இறை நம்பிக்கையற்றவர்கள் வாதிடுகின்றனர். “நீதியுள்ளவரும் மற்றும் நேசிக்கிற தேவனால் எவ்வாறு இப்படிப்பட்ட காரியத்தைச் செய்ய முடியும்? என்றும் இது புதிய ஏற்பாட்டு தேவனோடு முரண்படுகிறதாய் இருக்கின்றது!” என்றும் எதிர்க்கின்றனர். இம்மாதிரியான அழிவிற்காகக் கொடுக்கப்பட்டுள்ள காரணம் கீழ்ப்படியாமை ஆகும். முற்றிலும் அநீதியான நடத்தைகள் கொண்ட நகரங்களை மனிதனால் உருவாக்கப்பட்ட மதங்களிடம் முற்றிலும் கொடுத்து, அழிப்பதைவிட வேறு எந்த வழியிலும் அழிப்பது கூடாததாயிருந்தது. ஜனங்களும் தேவனுக்கு எதிராகக் கலகம் பண்ணுகிறவர்களாயும் மற்றும் திரும்பி வரமுடியாத நிலைக்குச் சென்றுவிட்டவர்களுமாய் இருந்தார்கள். (எபிரெயர் 6:4-6ஐ ஆய்வை மறுபார்வை செய்ய வேண்டும்.) அவைகளுடைய பாவங்களின் இயல்பானது அப்படிப்பட்ட நகரங்கள் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திலிருந்து அழிக்கப்படுவது அவசியமாயிருந்தது.

பூர்வகுடிமக்களின் அக்கிரமம் பூரணமடையும்போது, தேசத்தை இஸ்ரவேல் சுதந்தரிக்கும் என்று தேவன் வாக்குப்பண்ணியிருந்தார் (ஆதி. 15:16). இஸ்ரவேலர்கள் கானானுக்குள் நுழையும்போது, அம்மோனியரைவிட இன்னும் அதிக நீதிமான்களாயிருந்தனர். தேசத்திலிருந்து கானானிய மக்களைக் கீழ்ப்படிதலுடன் அவர்கள் எடுத்துப்போட்டிருப்பார்களேயானால், அவர்கள் அந்நிய விக்கிரக ஆராதனையில் மயங்கியிருக்கமாட்டார்கள். தேவன் அறிவுறுத்தியபடி

அவர்கள் செய்யத்தவறிய காரியமானது, பிற்காலத்தில் அவர்களை விசுவாச விலக்குக்கு வழி நடத்தியது. அவர்களைச் சுற்றியுள்ள அந்நிய விக்கிரகங்களைப் பின்பற்றத் துவங்கியபோது, தேவன் அவர்களுக்கு நிலத்தைக் கொடுப்பேன் என்று சொன்ன காரணத்தையே இஸ்ரவேல் எடுத்துப்போட்டது.

இந்த நிலைக்குப் பர்டன் காஃப்மேன் ஒரு நல்ல விளக்கத்தைக் கொடுத்துள்ளார். அமெரிக்காவில் கண்டம் எல்லையான கோலோரோடோவிலுள்ள மோஃபட் குகையின் வழியே தொடர் வண்டிகள் கடக்கின்றன. இந்தத் தொடர் வண்டிகள் மலை உச்சியிலிருந்து மலையடிவாரத்திற்கு இறங்கி வருகின்றபோது, ஒவ்வொரு திருப்பத்திலும் தடம்புறழும் தடுப்புக் கருவி பொருத்தப்பட்டுள்ளது. கீழேயிருக்கும் கிராமத்தின் அழிவைத் தடுக்கும் விதமாக வழிதடத்தை இயக்குபவர் ஓடும் தொடர்வண்டியை தடம்புறழ வைப்பார். ஒரு தொடர் வண்டி கட்டுப்பாட்டை இழக்கையில் அது எந்த வகையிலும் அழிவை ஏற்படுத்தும்.[100] இதேபோன்று, ஜனங்கள் நித்திய அழிவிற்கு நேராகச் செல்கிறார்கள் என்பதைத் தேவன் அறிவார். இஸ்ரவேலின் பேரழிவை தவிர்க்கும்படிக்கு, கானானிலுள்ள கோத்திரங்களை அழிக்கும்படிக்கு அவர் கட்டளையிட்டார்.

### சிலர் அற்புதங்களாலும் மற்றவர்கள் தேவனுடைய அனுக்கிரத்தாலும் உதவி பெற்றனர் (11:32-34)

11:33, 34-ல் சில கிரியைகள் பட்டியலிடப்பட்டுள்ளன, அவைகள் தேவனுடைய அற்புதமான குறிக்கீட்டினால் நிறைவேற்றப்பட்டன, அதேவேளையில், மற்றவைகள் அவருடைய அனுக்கிரகச் செயலினால் பெறப்பட்டதாகத் தோன்றுகிறது. மீதியானியர்களைப் பிடிப்பதில், முன்யோசனையாக, இரவில் தாக்குவதிலும், விளக்குகளை உடைப்பது மூலம் எதிரிகளைப் பயமுறுத்தி குழப்பத்தை உண்டாக்குவதிலும் கிதியோன் செயல்பட்டான். வேறுஎந்த இயற்கை சக்தியையும் மேற்கொண்ட தேவனின் நேரடி குறுக்கீட்டுக்கு அவசியமானதாயில்லை. அற்புதங்கள் இல்லாமல் இதுபோன்ற காரியங்கள் நிகழ்ந்துள்ளன. கிதியோனின் விஷயத்தில் மற்ற நிகழ்வுகள் அற்புதங்களினால் நிகழ்ந்தன (நியா. 6:36-40). எதிர்மாறாக, உலர்ந்த தரையில் இருந்த ஆட்டு மயிர் மீது பனித் துளி இருப்பதைக் கிதியோன் கண்டான், ஆனால் பின்பு தரை ஈரமாக இருந்தது, ஆட்டு மயிர் ஈரமில்லாமல் இருந்தது, இவை தற்செயலாக நிகழாமல், அற்புங்களினால் நிகழ்ந்தது என்பதை அவர் அறிவார். மீதியானிய வீரனால் வெளிப்பாடு பெறப்பட்டும் (நியா. 7:9-15) அது அற்புத விதமாக இருந்தது; ஆச்சரியமான விதத்தில் நேரடியாகக் கொடுக்கப்பட்ட வெளிப்பாடு மூலம் மட்டுமே வருங்கால நிகழ்வுகளின் விசேஷ அறிவானது வரக்கூடியதாக இருந்தது. தாங்கள்

தோற்கப்படுவது அற்புதத்தினால் அல்லாமல், இது உண்மையில் தெய்வாதீனச் செயலாக இருக்கிறது என்ற வீரர்களுக்கு இடையேயான உரையாடலை கிதியோன் கேட்கக் கூடியவனாக இருந்தான். பாளையத்திற்கு அருகில் போகாமல் அவர்களுடைய உரையாடலை கேட்டிருப்பாரேயானால் அது அற்புதமாகவே இருந்திருக்கும் (குறைந்தபட்சம், அப்பொழுது இருந்த தொழில் நுட்பத்தின்படி).

சிலவேளைகளில், தேவன் காணக் கூடாத வகையில் செயல்படுகிறவராக இருக்கிறார், மற்றும் அது அற்புதமானதாக இருக்கிறது. உயிர்த்தெழுதலினால் மரணத்திலிருந்து பெண்கள் தங்களுடையவர்களை மீண்டும் பெற்றுக் கொண்டார்கள். தான் அற்புதத்தை பார்த்ததாக ஒருவன் நினைத்தால், மரணத்திலிருந்து மீண்டும் உயிரோடு வந்த நபரைக் காண்பிக்கும்படிக்கு அவனிடம் கேளுங்கள். எந்த ஒரு "விசுவாச சுகமளிப்பவரும்" சிறிய கீறலைக் கூட உடனே சுகப்படுத்த முடியாது, மற்றும் நிச்சயமாக இன்று ஒருவரும் மரணத்திலிருந்து ஒருவரை உயிரோடெழுப்ப முடியாது.

கடந்த காலத்தில் தமது ஜனங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்படிக்கு அற்புதங்களற்ற வழியில் தேவனால் செயல்பட முடியும் என்றால், இன்றைக்கு ஏன் அவரால் முடியாது? நாம் எதுவும் அறிந்திராத வகையில் அவர் அந்தச் சம்பவங்களுக்குப் பின்னணியில் செயல்பட்டிருக்கலாம். நியாயத்தீர்ப்பிற்குப் பின்பு அவருடைய சந்நிதானத்தில் நாம் வரும் வரை அவர் நமக்காக என்ன செய்துள்ளார் என்பதை நாம் அறிய வாய்ப்பில்லை. நான் அற்புதத்தைப் பார்த்தேன் என்று சொல்வதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தெய்வீக செய்தி அல்லது தேவனால் அனுப்பப்பட்ட தூதுவரை உறுதிப்படுத்தும் விதமாக அடையாளங்கள் மற்றும் அதிசயங்கள் கொடுக்கப்படுகின்றன, வெறுமனே நம்முடைய வசதிக்காகவோ அல்லது நாம் ஆச்சரியப்படுவதற்காகவோ அல்ல. அற்புதங்கள் செய்தியின் அங்கமாயிருந்தது, அது புதிய உடன்படிக்கையை வெளிப்படுத்துகிறது. புதிய வெளிப்பாடுகளும் மற்றும் அற்புதங்களும் ஒன்றித்துச் செயல்படுகின்றன.

எபிரெயர் 11-ல் நாம் வாசிக்கும் மக்கள் விசுவாசத்தினாலே மிகப் பெரிய காரியங்களைச் செய்துள்ளனர். பலமான விசுவாசம் இல்லாமல் சிலவேளைகளில் நாம் பெரிய காரியங்களைச் செய்ய முயற்சிக்கின்றோம். பெரிய விசுவாசத்திற்கான பயணமானது மிக நீளமாக இருக்கலாம், அதை அடையும்படிக்கு நீங்கள் உடனே துவங்கவேண்டும். ஒவ்வொரு நாளும் விசுவாசத்தினால் வாழ்வது என்பது விசுவாசத்தில் கொஞ்சம் கொஞ்சமாக வளரச் செய்யும். ஒரு நாளிலே உங்கள் விசுவாசம் எவ்வளவு தூரம் விரிவடைந்துள்ளது என்பதை நீங்கள் காண்பீர்கள். பல வருடங்களாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்க நீங்கள்

வாஞ்சையுள்ளவர்களாக இருப்பீர்கள். உங்களுடைய நன்மையின் பெரிய செல்வாக்கானது மற்றவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும்.

**உலகத்திற்குரியவர்களாகிய ஜனங்கள் தகுதியற்றவர்களாக இருக்கிறார்கள் (11:35-40)**

விசுவாசம் வளர்கிறது: பூச்சிகளிடமிருந்தோ அல்லது வியாதிகளிலிருந்தோ பாதுகாக்கும் வெப்பமான வீடுகளில் அல்ல, மாறாக, வாழ்க்கையை எரித்துவிடக்கூடிய புடமிடும் சூழல்களில், உண்மையான பயமுறுத்துதல்களைச் சந்திக்க வேண்டியதாய் இருக்கும். பிரச்சனைகள் மத்தியில் நம்முடைய விசுவாசமானது, சோதனைகளின் மத்தியிலே கடைசிவரை நம்பிக்கையாக இருக்கிறது. தங்கள் விசுவாசத்திற்காகப் பாடுபடுபட்டவர்கள், குற்றவுணர்வுடன் "விடுதலையை ஏற்றுக்கொண்டதாகவோ" அல்லது தண்டனையிலிருந்து தப்பிக்கும் வகையில், மோசேயின் கட்டளைகளை மறுதலிக்கிறவர்களாகவோ இல்லை. கி.பி முதலாம் நூற்றாண்டின் இறுதியில் இதேபோன்று மரணத்திற்கு ஏதுவான கிறிஸ்தவர்களைக் "*குரியோஸ் கிறிஸ்டோஸ்*" ("ஆண்டவர் கிறிஸ்து") என்பதிலிருந்து "*குரியோஸ் கய்சர்*" ("ஆண்டவர் சீசர்") என்று ஒரு வார்த்தையை மாற்றி அறிக்கையிடுவது மூலம் விடுவிக்கப்பட்டனர். இந்த உலகமானது எப்போதும் நம்முடன் சொல்கிறது, "எங்களுடன் செல்லுங்கள், நாங்கள் உபத்திரவப்படுத்த மாட்டோம், நீங்கள் வித்தியாசமானவர்களாக இருக்க வேண்டியதில்லை. நாங்கள் வாழ்வது போல் வாழ்ந்தால், உங்களைத் துன்பப்படுத்தமாட்டோம்."

உலகத்தில் பிரபலமாயிருருப்பதற்காக விட்டுக் கொடுப்பதற்கான சோதனை அது எவ்வளவு பலம் வாய்ந்ததாக இருக்கிறது! சபையை அதன் குறிக்கோளுக்கு அப்பாற்பட்ட ஒன்றாக மாற்ற விரும்புகிறவர்களுக்கு இது ஒரு மிகப் பெரிய உந்து சக்தியாக இருக்கும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். ஆதிகாலப் பரிசுத்தவான்கள் கிறிஸ்துவுடன் பற்றுதலாயிருப்பதற்கு எபிரெய நிருபத்தின் வார்த்தைகள் மிகவும் உற்சாகப்படுத்துகிறவைகளாயிருந்திருக்கும். அவர்கள் கடைசி வரை நிலைத்திருந்தனர் மற்றும் இரட்சகரினிமித்தம் தங்கள் இரத்தத்தையும் சிந்தினர். "மேலான உயிர்த்தெழுதலை" அடையும்படிக்கு அவர்கள் நிலைத்திருந்தனர் (வசனம் 35). எவ்வளவுக்கெவ்வளவு அதிக பரிசுத்தவான்கள் துன்பப்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டனரோ, அதைவிட அதிகமானப் பரிசுத்தவான்கள் சபையில் சேர்க்கப்பட்டனர். பாடுகள் நிறைந்ததாக இருந்தாலும்கூட, அநேகர் நீதிக்காக உறுதியாய் நின்றனர். இயேசுவின் நற்செய்தியை பரப்ப சிலர் தங்கள் ஜீவனையும் கொடுக்க முன்வந்தனர்.

**இதேபோன்று இன்னும் அநேகர் சீக்கிரம் பாடுபடுவார்கள் (11:36-40)**

கி.மு. இரண்டாம் நூற்றாண்டு துவக்கத்தில், ஆன்டிகஸ் எபிபானஸின் கீழ் சீரியர்கள் மூலம் அநேக யூதர்கள் கொல்லப்பட்ட சம்பவம் யூத மதத்திற்கு மகிமையைக் கொண்டு வந்தது. வரலாற்றின் குறிப்பிட்ட காலத்திற்கு, ஜெபாலயத்தில் விசேஷ கூடுகையின் மூலம் யூதர் தொடர்ந்து நினைவுகூர்ந்து வந்தனர்.

"பாடுகள்" (θλίβω, *தலைபோ*; வசனம் 37) பெரிய மன அழுத்தம் மற்றும் உபத்திரவங்களால் கஷ்டப்பட்டனர். வசனங்கள் 36 லிருந்து 40 வரை பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகள் குறிப்பிடப்படத்தக்கவைகள், காரணம் யூத வரலாற்றின் சம்பவங்களைப் போன்று, சபைக்கு எதிரான உபத்திரவங்கள் எழுந்தன. சிலுவையில் இயேசுவின் மரணத்திற்குப் பின்பு அவரிலுள்ள விசுவாசத்தினிமித்தம் மரித்தவர்களிடமிருந்து கிறிஸ்தவத்திற்கு முந்தைய பரிசுத்தவான்களைப் பிரிக்க முடியாது. அவர்கள் அனைவரும் ஒரே மகா ஐக்கியத்தின் கீழ் உள்ளனர், "ஆகவே நம்மையல்லாமல் அவர்களால் பூரணராக முடியாது" (வசனம் 40).

கிறிஸ்துவுக்கு மனமாறியவர்களை மரித்தவர்களாகவும் மற்றும் அவர் எங்களுக்கும் அவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்றும் சிலவேளைகளில் தங்கள் உறவினர்களால் அறிவிக்கப்பட்டுவிடுகின்றனர். அவர்களுடைய பெயர் குடும்பத்திலிருந்து நீக்கப்பட்டு மீண்டும் சேர்க்கப்படுவதேயில்லை. வேறுசிலரோ, தாங்கள் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும் என விரும்பியும் மற்றும் தான் எடுக்க வேண்டிய அவசியத்தை அறிந்தும் தன் குடும்பத்தினால் ஒதுக்கப்பட்டுவிடுவோம் என்ற பயத்தில் ஞானஸ்நானம் எடுப்பதில்லை. வெளிப்படையான விசுவாச செயலாக ஞானஸ்நானத்தை ஆண்டவர் கட்டளையிட்டதற்கு அது தான் காரணமா?

உபத்திரவம் நம்முடைய இருதயத்தைப் பரிசுத்தமாக்குகிறது ("சலிப்பது" அல்ல, லூக்கா 22:31-34-ல் பேதுருவிற்குச் சாத்தான் செய்ய விரும்பியதுபோல்). நம்முடைய விசுவாசம் பலத்து வளரும்படிக்கு சோதிக்கப்பட வேண்டியதாயிருக்கிறது (யாக். 1:12-15).

பாடுபடுதலுக்கான பரிசாகத் தேவன் நமக்காக "விசேஷமானதை" ஆயத்தப்படுத்தியிருக்கிறார் (வசனம் 40). நாமோ "முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்" (ரோமர் 8:37). நாம் ஜெயங்கொள்கிறவர்களிலும் மேலானவர்களாயிருக்கிறோம் (NASB) காரணம் "முதலாம் உயிர்த்தெழுதலின்" ஆசீர்வாதங்களை உடையவர்களாயிருக்கிறோம் (வெளி. 20:5, 6; காண்க 2:10, 11). வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டவர்கள், கிறிஸ்தவர்களாகி, இரத்த சாட்சிகளுக்கும் மத்தியில் விசுவாசத்தில் நிலைத்திருந்ததன் மூலம் "முதலாம் உயிர்த்தெழுதலில்"

பங்கடைந்துள்ளனர். இவ்விதமாக மேற்கொண்டவர்களாயிருக்கையில், "இரண்டாம் மரணத்தினால்" அவர்கள் பாதிக்கப்படப் போவதில்லை (வெளி. 21:8). "மேற்கொள்ளுதல்" என்பதன் அர்த்தம் பாடுகளையும் உபத்திரவங்களையும் எதிர்கொள்ளுதல், அதுவே ஆவிக்குரிய "உயிர்த்தெழுதல்" என்று விவரிக்கப்படுகிறது. "முதலாம் உயிர்த்தெழுதல்" என்பது இயேசுவின் மரணத்தின் போது சம்பவிக்கும் சரீரப் பிரகாரமான உடல் உயிர்த்தெழுதல் அல்ல, ஒருவர் பரலோகத்திற்குப் போகும் முன் மரணத்தை மேற்கொள்வதாகும்.

**வியக்கத்தக்க தீர்க்கதரிசிகள் (11:36-40)**

தீர்க்கதரிசிகளின் முக்கிய இலக்கு என்பது "குறிசொல்வதைவிட" தேவனைக் குறித்த "முன்அறிவிப்பு" ஆகும். பூர்வ பாதையின் அடிப்படையில் பாவத்தைக் கண்டித்து நீதியின் வாழ்வை அவர்கள் காண்பிக்கின்றனர் (எரே. 6:16). விசேஷ தேவை இருக்கும்போது, தேவனிடமிருந்து நேரடியாகச் செய்தியைப் பெறும் ஆசீர்வாதத்தை அவர்கள் பெற்றுள்ளனர். சிலர் அற்புதங்களை நிகழ்த்தியபோது, மற்றவர்கள் அவ்வாறு செய்யவில்லை, அனைவரும் ஆவியினால் பேசினர்.

1 பேதுரு 1:10-12-ல் அவர்கள் பேசிய அல்லது எழுதிய செய்திகள் வார்த்தையின் அடிப்படையிலேயே தேவனால் வெளிப்படுத்தப்பட்டவை என்பதை இது காண்பிக்கிறது. அவர்கள் தங்கள் சொந்த காரியங்களைப் பிரசங்கிக்கவில்லை, ஆனால் "கர்த்தர் சொல்கிறார்" என்பதிலிருந்தே அவர்கள் பேசினார்கள். "தேவன் ஒரு செய்தியை அவர்களிடம் கொடுத்து நீங்கள் விரும்புகிற பிரகாரம் சிந்தித்து மக்களிடம் கொடுங்கள்" என்று அவர்களை நம்பி சிறிய செய்தியைக்கூடக் கொடுக்கவில்லை. மாறாக அவர்கள் பேசியவைகள் அனைத்தும், தேவனுடைய வார்த்தையையே பேசினார்கள். அவர்கள் எழுதும்போது தேவனுடைய வார்த்தையை மட்டுமே எழுதினார்கள். ஒவ்வொருவருடைய தனிப்பட்ட சொல்லாடல்கள் மற்றும் பேச்சின் அழகை தேவன் பயன்படுத்தியிருக்கக் கூடும். ஒரு தீர்க்கதரிசி செய்தியின் வார்த்தைகளைத் தன் வசதிக்கு ஏற்ப பயன்பாட்டையும் மற்றும் மக்கள் கேட்டு பழகியதையும் மாற்றுவதைவிட, வார்த்தை ஜாலங்களை மாற்றுவதில் என்ன அவசியம் உள்ளது? 1 கொரிந்தியர் 2:13-ன் பரிந்துரை என்னவென்றால், தேவன் தமது செய்தியின் அர்த்தத்தை அவர்களுடைய சொல்லாடலைப் பயன்படுத்தியும், ஆவிக்குரிய வார்த்தைகளுடன் ஆவிக்குரிய சிந்தனைகளை ஒருங்கிணைத்தும் தமது செய்தியின் அர்த்தத்தை விளக்கினார்.

ஒன்று வசனங்கள் முற்றிலும் ("முழுமை") வெளிப்படுத்தப்பட்டவைகளாக இருக்கின்றன, அப்படி அல்லவென்றால் நாம் அவைகள் மீது நம்பிக்கை வைக்கவே முடியாது.

முழுமையான வார்த்தை அருளப்பட்டதைக் கொண்டு தேவன் செய்தியைக் கொடுக்கவில்லையென்றால், பின்பு அவர் கொடுக்க விரும்பிய செய்தி இது தான் என்பதை நாம் எவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்வது? செய்திக்கு அவசியமான வார்த்தைகள் தேவைக்கு ஏற்ப வழங்கப்படுகிறது.

---

இறுதி குறிப்புகள்

[1]Donald A. Hagner, *Encountering the Book of Hebrews: An Exposition*, Encountering Biblical Studies (Grand Rapids, Mich.: Baker Academic, 2002), 142. [2]Donald Guthrie, *The Letter to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1983), 227. [3]Thomas G. Long, *Hebrews*, Interpretation (Louisville: John Knox Press, 1997), 113. [4]Hagner, 143. [5]Long, 113. [6]Ray C. Stedman, *Hebrews*, The IVP New Testament Commentary Series (Downers Grove, Ill.: InterVarsity Press, 1992), 116-17, n. [7]Philip Edgcumbe Hughes, *A Commentary on the Epistle to the Hebrews* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 438-39. [8]Hagner, 142. [9]Raymond Brown, *The Message of Hebrews: Christ Above All*, The Bible Speaks Today (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1982), 198-99. [10]F. F. Bruce, *The Epistle to the Hebrews*, The New International Commentary on the New Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 279.

[11]Marvin R. Vincent, *Word Studies in the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1946), 4:509-10. [12]Guthrie, 225. [13]Gareth L. Reese, *A Critical and Exegetical Commentary on the Epistle to the Hebrews* (Moberly, Mo.: Scripture Exposition Books, 1992), 193, n. 1. [14]Hughes, 441. [15]Ibid., 438. [16]Thomas Hewitt, *The Epistle to the Hebrews: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 171. [17]James Macknight, *A New Literal Translation, from the Original Greek of All the Apostolical Epistles with a Commentary and Notes* (Edinburgh: by the author, 1795; reprint, Grand Rapids, Mich.: Baker Book House, 1984), 560. [18]Reese, 194. [19]Bruce, *Hebrews*, 279. [20]James T. Draper, Jr., *Hebrews, the Life That Pleases God* (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1976), 294.

[21]Hewitt, 172. [22]Henry Alford, *The New Testament for English Readers* (Chicago: Moody Press, 1958), 1553. [23]Bruce, *Hebrews*, 281, n. 24. [24]Long-ல் இருந்து இந்தக் குழுக்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளது, 115, 119. [25]Stedman, 119. காண்க லூக்கா 12:23-ல் "அதற்கு மேல்" என்ற யோசனை இந்த வார்த்தையில் உள்ளது. [26]Reese, 195, n. 9. [27]Macknight, 560. [28]Hughes, 455. [29]Neil R. Lightfoot, *Jesus Christ Today: A Commentary on the Book of Hebrews* (Grand Rapids, Mich.: Baker Book House, 1976), 207, n. 10. லைட்பூட் சுட்டிகாட்டுவது எபிரெயரில் λαλέω (*லாலியோ*, "பேசுதல்") "என்பது எப்போதும் தெய்வீக உச்சரிபபை குறிப்பிடுகிறது." ஆகையால், "தெய்வீகமாக உச்சரிக்கப்பட்ட வசனங்கள்" மூலம் ஆபேல் இன்றும் பேசுகிறார். [30]ஆதியாகமம் 5:24 (எல்எக்ஸ்எக்ஸ்) ஏனோக்கு குறித்து மொழிபெயர்ப்புக்கு முன்பே அவன் தேவனைப் பிரியப்படுத்தினான், ஆனால் அவன் பரலோகம் சென்ற பின்பே வேதாகம பதிவுகளின் சாட்சி கொடுக்கப்பட்டன என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. (Bruce, *Hebrews*, 289, n. 52.)

[31]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3rd ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 302. [32]"அந்த பதங்கள் ஒரே அர்த்தம் கொண்டவைகள் அல்ல" காரணம் "விசுவாசம்" என்பது தேவனுடைய சித்தத்துடன் இணைந்த வாழ்க்கையை வாழ்வதையும் சேர்ந்தது என்று ரீச் சொல்கிறார். (Reese, 196, n. 11.) 11:3-ல் பயன்படுத்தப்பட்டுள்ளதைத் தவிர, எபிரெயரில் சாதாரண அர்த்தத்தில் நிலையாக இருப்பதாகத் தோன்றுகிறது. [33]Craig R. Koester, *Hebrews: A New Translation with Introduction and Commentary*, The Anchor Bible, vol. 36 (New York: Doubleday, 2001), 477. 2 மக்கப்பேயர் 8:16-ல் அன்டிகஸ்

எப்பிபான்ஸின் இராணுவ எதிரியின் “பயம்” குறிக்கும் வார்த்தை எல்எக்எக்ஸ்-ல் பயன்படுத்தப்பட்டுள்ளது. [34]Brooke Foss Westcott, *The Epistle to the Hebrews: The Greek Text with Notes and Essays* (London: Macmillan & Co., 1889; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1973), 358. [35]“வாக்குத்தத்தத்தின் தேசம்” அல்லது “வாக்குப்பண்ணப்பட்ட தேசம்” என்பது வேதாகமத்தில் மட்டும் காணப்படுகிறது எபிரெயர் 11:9. [36]Koester, 485, 494-97. [37]ஆதியாகமம் 12:1-3-ல் NIV சுட்டிக்காட்டுவது என்னவென்றால் முன்பு ஆபிரகாமுக்கு இதைத் தான் தேவன் “சொல்லியிருந்தார்.” [38]Charles Rosenbury Erdman, *The Epistle to the Hebrews: An Exposition* (Philadelphia: Westminster Press, 1934), 113. [39]Robert Milligan, *A Commentary on the Epistle to the Hebrews*, New Testament Commentaries (Cincinnati: Chase and Hall, 1876; reprint, Nashville: Gospel Advocate Co., 1975), 396. [40]Bruce, Hebrews, 298-99.

[41]Ibid., 299-301. [42]Reese, 200. ரோமர் 4:19-ல் “மரணத்திற்கு இணையானது” என்று பவுல் பயன்படுத்துகிறார், ரோமரில் இவ்வாறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. (Bruce, Hebrews, 302.) [43]πίστει (*பிஸ்டெய்*, “விசுவாசத்தின் மூலம்”) முன்பு பயன்படுத்தியதிலிருந்து κατά πίστιν (*காட்டா பிஸ்டின்*, “விசுவாசத்தில்”)-க்கு “என்பது இலக்கிய விதங்கள் வழி மூலம் சாதாரணமானது” உருவானது என்று ஆசிரியர் மாற்றியுள்ளதாக எப் எப் புருஸ் குறிப்பிடுகிறார் (Bruce, Hebrews, 302, n. 113). [44]Alexander Nairne, *The Epistle of Priesthood: Studies in the Epistle to the Hebrews* (Edinburgh: T. & T. Clark, 1913), 396. [45]Koester, 498. [46]ஆதியாகமம் 22:1-14-ல் கொடுக்கப்பட்ட தொகுப்பில் “ஈசாக்கின் கட்டு” என்று அநேக நாட்களாக யூதர்களால் அழைக்கப்பட்டது. “இரத்த சாட்சியின் விரும்பிய பயனான மீட்பு” என்பது சிறந்த உதாரணமாக இது கருதப்படுகிறது (Bruce, *Hebrews*, 309). உண்மையில், இந்தப் பகுதி “ஆபிரகாமின் சோதனை” என்று அறியப்பட்டது. தேவன் மெய்யாகவே “அவனைச் சோதித்தார்,” அதன் அர்த்தம் “ஒருவனை இக்கட்டான சூழலில் வைப்பது, ஆகவே அவனுடைய குணாதிசயம் வெளிப்படும்” (Koester, 490-91). [47]Hughes, 482, n. 51. [48]Guthrie, 236. [49]Bruce, *Hebrews*, 311. [50]முடிவில், ஆபிரகாம் பலிதானத்தை நிறைவு செய்யும்படி தேவன் அனுமதிக்கவில்லை. மாறாக, அந்த நோக்கத்திற்காக அவர் ஒரு ஆட்டைக் கொடுத்தார். இது ஒருவேளை ஏற்கனவே கூட்டத்தில் பிடிபட்டிருக்கலாம் மற்றும் அமைதியாகக் காத்திருக்கலாம். ஆபிரகாம் ஆட்டுக்குட்டியைக் கண்டான் மற்றும் அதையே தேவனுக்குப் பலியாகச் செலுத்தினான். (காண்க ஆதி. 22:8, 13, 14.)

[51]*The Epistle of Barnabas* 7:3; Irenaeus *Against Heresies* 4.5.4. [52]Koester, 492. [53]Hughes, 487. [54]Josephus *Antiquities* 15.7.9. [55]Brown, 212. [56]ஒரு எபிரெய பதம் מִטָּה (*மிட்டா*) அதன் பொருள் “படுக்கை” மற்றும் “ஸ்டாஃப்” என்பதற்கு מַטֶּה (*மட்டே*) என்றும் உள்ளது. இந்த இரு வார்த்தைகளும் அசல் எபிரெயத்தில் அப்படியே உள்ளன. கி.மு. 900-ல் மசோரெட்ஸ் என்பவரால் உயிரெழுத்துக் குறியீடுகள் சேர்க்கப்பட்டன. அவர்கள் ஒருவேளை தவறுதலாகக் குறியீடுகளைப் போட்டிருக்கலாம். (Jimmy Allen, *Survey of Hebrews*, 2nd ed [Searcy, Ark.: by the author, 1984], 129.) [57]Koester, 493. [58]Guthrie, 238. [59]பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு மறைக்கப்படுவது எப்போதும் உண்டு, ஆனால் அவன் ராஜ மாளிகையில் வளர்கிறான். பின்பு தனது நிலையையும் மற்றும் வாழ்க்கையின் பாடுகளையும் ஏற்றுக்கொள்கிறவனாக இருக்கிறான். அழிவு பயமுறுத்துகிறதாயிருக்கிறது, ஆனால் எதிராளிகள் அழிந்தனர் மற்றும் இஸ்ரவேலர் காப்பாற்றப்பட்டனர். (Koester, 507 இருந்து மாற்றியமைக்கப்பட்டது.) கிரேக்க மொழிநடை அடிப்படையில் கதையானது சமமானமாக உள்ளது. [60]Bruce, *Hebrews*, 317, n. 171-ல் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல் எல்எக்ஸ்எக்ஸ்-லும் பெற்றோர்களின் விசுவாசமும் குறிப்பிடப்பட்டுள்ளன.

[61]Philo *Life of Moses, 1* 3.9. [62]Ibid., *1* 3.23-24; Josephus *Antiquities* 2.9.6. [63]Josephus *Antiquities* 2.10. [64]ஈபொலிமஸின் எழுத்துக்கள் (சி. 150 கி.மு.) ஆய்வுகள் துணுக்குகளாக இருந்தன. Eusebius of Caesarea *Preparation for the Gospel* பாதுகாக்கப்பட்டது என்பதே இந்தக் கூற்று 9.26.1. [65]மனாத்தோவினால் (அல்லது செபன்னிடோஸின் மனெதோன், எகிப்தியரின் மிகப்பெரிய வரலாற்றாசிரியர்) எகிப்திய இராஜாக்களின் பட்டியலின் அடிப்படையில் இது உள்ளது. இந்தப் பட்டியல் பிரச்சனைக்குள்ளானது, இது சரியாக இருக்குமேயானால், மோசே கி.மு. 1525-ல் பிறந்துள்ளான், பின்பு யாத்திராகமத்தின் நிகழ்வுகள் 1446-1447 கி.மு.-வில் நிகழ்ந்துள்ளன என்று கருதப்படும். துட்மோஸ் 2 மற்றும் துட்மோஸ் ஆகிய பார்வோன்களின் சிங்காசன அதிகாரம் பின்புலம் இருந்துள்ளதாகத்

தோன்றுகிறது. ஒரு சிறிய அழகான தொகுப்பு கொடுக்கப்பட்டுள்ளது Reese, 205-6, n. 36. [66]"பொக்கிஷம்" என்பதன் மூலயோசனை "கிடங்கு" (θησαυρός, *தெசரோஸ்*) ஆகும். எகிப்திய தானியங்கள் அதிகப் போஷாக்கைத் தருகின்றன. (Koester, 503.) முதலாம் நூற்றாண்டில் எகிப்து ரோமாபுரியின் தானியக் களஞ்சியமாகத் திகழ்ந்தது. (Josephus *Wars* 4.10.5.) [67]Hughes, 496-97. [68]Lightfoot, 217. [69]Bruce, *Hebrews*, 322. [70]Koester, 509.

[71]Milligan, 412-13. [72]Westcott, 373; Hughes, 498. [73]F. F. Bruce, *The Books and the Parchments*, rev. ed. (Westwood, N.J.: Fleming H. Revell Co., 1963), 44. [74]Kenneth Samuel Wuest, *Hebrews in the Greek New Testament for the English Reader* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1951), 208. [75]Bruce, Hebrews, 325, n. 214. "நாணல்களின் கடல்" (יַם סוּף, *யாம் சூஃப்*) என்பது சுயஸ் வளைகுடா அதன் வடக்கு விரிவாக்கம் மற்றும் அக்பா வளைகுடா இரண்டிற்கும் இதே பதம் தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வளைகுடாக்கள் செங்கடலின் அங்கமாக உள்ளன, ஆகவே எவ்வழியிலும் வேதாகமம் சரியானதே, ஏதாவது ஒரு வழியை ஏற்றுக்கொள்ள வேண்டியது தான். (Allen, 132.) [76]Gerald F. Hawthorne, "Hebrews," in *The New International Bible Commentary*, ed. F. F. Bruce, H. L. Ellison, and G. C. D. Howley (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1986), 1528. [77]Bruce, *Hebrews*, 327, n. 226. [78]Simon J. Kistemaker, *Exposition of the Epistle to the Hebrews*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1984), 347. [79]Koester, 517. [80]Bruce, *Hebrews*, 332.

[81]Ibid., 333. [82]Allen, 133. இந்த வகைளில் யோசேப்பை வைக்க முடியாது, ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் தன் சொப்பனத்தைத் தன் சகோதரர்களுக்குச் சொல்லுகிற ஒரு இளம் வாலிபனாக இருந்தான். [83]Guthrie, 243-44 லிருந்து இவ்விதமாகக் கேட்டல். [84]முன்பதாக, எபிரெயர்கள் பெரும்பாலும் எல்லாக் காரியங்களிலும் "விசுவாசத்திலே" அடைந்திருந்தனர், ஆனால் இங்கே "விசுவாசத்தின் மூலமாக" பெற்றுள்ளனர். NASB-ல் வேறுபாடு காணப்படவில்லை. (Reese, 211, n. 54.) நான்கு பெயர்கள் குறிப்பிடப்பட்டவர்களில் மூவர் மீது கர்த்தருடைய ஆவியானவர் வருவதாகப் புருஸ் குறிப்பிட்டுள்ளார் (கிதியோன், நியா. 6:34; யெப்தா, நியா. 11:29; மற்றும் சிம்சோன், நியா. 13:25), "இவற்றை அவர்களுடைய விசுவாசத்தின் நம்பத்தகுந்த ஆதாரமாக எடுத்துக்கொள்ள முடியும்" (Bruce, *Hebrews*, 331). [85]காண்க 1 மக்கபேயர் 3:17-20. [86]2 மக்கபேயர் 6:18-28. [87]2 மக்கபேயர் 7. [88]Josephus *Wars* 2.21.5; 6.5.3. [89]Hewitt, 187. [90]1 மக்கபேயர் 2:38.

[91]Koester, 520. [92]Charles Wesley, "Let Us Join Our Friends Above" (http://gbgmumc.org/Umhistory/wesley/hmns/umh709.stm; Internet; accessed 21 September 2006). [93]Draper, 314. [94]Hughes, 462. [95]Long, 115. [96]Brown, 202. [97]"அந்நிய தேசத்தில்" தங்கியிருப்பது என்பதன் பொருள் ஆபிரகாம் "அந்நிய" வாசியாக இருந்தார், அவர் அநேக வருடங்கள் அந்தத் தேசத்தில் தங்கியிருந்தாலும்கூட, குடியுரிமை வசதிகள் எதுவும் அவருக்குக் கிடையாது. (Koester, 494.) [98]*The Epistle of Mathetes to Diognetus* 5:5. "முத்லெட்ஸ்" என்பது சரியான பெயர்சொல்லாக இருக்காது, அதன் சாதாரணப் பொருள் "ஒரு சீஷன்." [99]Koester, n. 400. [100]James Burton Coffman, *Commentary on Hebrews* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1971), 295.